



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MOHAN

## JEWELLERY MART



VISA

அரசு முத்திரை பதிக்கப்பட்ட தங்க நகைகளை
3 முதல் 10 தடவை பணம் செலுத்தும்
கடன் வசதியுடன் பெற்றுக்கொள்ளலாம்.

201, rue du Fg. Saint Denis - 75010 Paris
Tel : 01 42 05 65 26
Fax : 01 42 05 65 79
(M° : La Chapelle / Gare du Nord)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிறீன் கிங்ஸ் கழகம்

பிரான்ஸ் தமிழர் கலை கலாச்சார ஒன்றியம்

இணைந்து நடாத்தும்

# எம். அரியநாயகத்தின்

# 'நாடக அறுவடைகள்' - விழா மலர்

# Souvenir

du

# Festivel de Théâtre de

# M.Ariyanayagam



**organisé**
**par**
**Le Club Green Kings**
**et le**
**Groupement Interculturel Franco**
**Tamoul**
**en hommage au dramaturge**
**le dimanche, 31 octobre 2004**
**au**
**Centre Culturel A.M.O.R.C.**
**Paris**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உலகமே ஒரு நாடக மேடை
அதில் வாழ்கின்ற ஆண்கள் – பெண்கள்
எல்லோருமே நடிகர்கள்...

**– வில்லியம் ஷேக்ஸ்பியர்**
*ஆங்கில நாடக ஆசிரியர்*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மரபு சார்ந்த கூத்திசைகளைக் காலம் காலமாய் காத்துத் தந்து
முகம் தெரியாமலே நிலைத்து நிற்கும் எங்கள் மண்ணின் கலைஞர்களுக்கு
இம்மலர் சமர்ப்பணம்...


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# என்றும் துணை நிற்கும் கிறீன் கிங்ஸ் கழகம்!

டேவிட் கிறிஸ்டி அன்ரன்
(D. குமார்)

மகிழ்ச்சிப்படுத்துதலினூடாக மனங்களை வருடி, மனித வாழ்வியலின் வழிமுறைகளை உரத்துச் சொல்லக்கூடிய உயர்ந்த கலை வடிவமே நாடகம்.

ஈழத்திலே 'கிறீன் கிங்ஸ் கழகம்' சுற்றம் சூழ வாழ்ந்தவர்களின் கூத்திசையின் தாலாட்டிலேதான் பிறந்தது. அதுபோல எமது அயலவர்களான அரியனாலை – பாசையூர் – குருநகர் – என எல்லோருமே கலைக்காற்றின் சுவாசத்திலேயே வாழ்ந்தவர்கள் – வாழ்கிறார்கள்.

எங்கள் கழகத்தின் வருடாந்தர விழாக்கள், ஈஸ்டர் (உயிர்ப்பு) தின விழாக்கள் அண்மித்தாலே யாழ். ஆசனக்கோவிலைச் சுற்றியுள்ள மக்கள் மனங்கள் எல்லாம் களைகட்டிவிடும்.

''தம்பிமாரே! இந்த முறை 'பாலசூரன்' கூத்தடா!'' என்று முகம் மலர ஓடிவரும் எங்கள் கலைமரபு காத்த அந்தக்கலைஞர்களையெல்லாம் இப்போ எண்ணிப் பார்க்கிறேன். அண்ணாவி (உசோன்) அந்தோனிப்பிள்ளை, சின்னக்கிளி, கயித்தான் மரியதாஸ், நீர்வேலி அந்தோனிப் பிள்ளை அருமைத்துரை – யேசுதாஸ், மிக்கேல் பிள்ளை, டேவிட், ராசதுரை, நீக்கிலாஸ், நிர்வேலி ஞானப்பிரகாசம் அரியகுட்டி... மாஸ்ரா அருளானந்தம்... இப்படி சொல்லிக்கொண்டே போகக் கூடிய கணக்கற்ற கூத்திசைக் காவலர்கள்!

**இந்த வரிசையில் இசையோடு, நடிப்பு உரைமாற்றம், பக்கவாத்தியங்கள் என மெருகு சேர்த்து கூத்திசைக்கே புதியவடிவம் தந்தவர் தான் எமது கழகத்தன் காவலரும் நடிப்பிசைக் காவலருமான அமரர் கிரிகனி தங்கராஜா.**

அம்மாக்களின் சேலைகளைக் களவாடி மேடைபோட்டு, தகர டப்பாக்களில் தாளம் போட்டு சின்னச் சின்ன நாடகங்கள் போட்டு, பின்னர் விளையாட்டுக்களில் கால் பதித்து, போட்டிகள் நடாத்தி பரிசளித்து வந்த நாம் டி. அல்வின், றோக்கையா ஆகியோரின் உனக்கு ஊக்குவிப்பில் 1975இல் 'மலர்ந்த வாழ்வு' என்னும் நாடகத்தின்மூலம் எமது கலைப்பயணத்தையும் மலர வைத்தோம்.

'கிறின் கிங்ஸ்' கழகம் இன்று ஈழத்திலும் பாரிஸ் மாநகரிலும் விளையாட்டுத் துறைகளிலும் கலை நிகழ்வுகளிலும், காவலரின் பாதையில், கலைஞர்களை கௌரவிப்பிலும் புகழ்பரப்பி வருகின்றது.

ஈழத்தில் எங்கள் கழக ஆரம்ப வளர்ச்சிகளுக்கு இரு துருவங்கள் வழிகாட்டினார்கள் – அரணாக நின்றவர் அமரர் கிறகறி தங்கராஜா, முன்மாதிரியாகத் திகழ்ந்தவர் திகழ்பவர் 'அல்போன்ஸ் அண்ணன்' என்று நாம் செல்லமாக அழைக்கும் எம். அரியநாகம் அவர்கள். யாழ். நவரச நாடகாலயத்தை அமைத்து சிமியோன் கிறிஸ்ரி, பொன்னையா டோமினிக் டேவிட் அலெக்ஸ், மிக்கேல் பிள்ளை அன்ரன், பொன்னுத்துரை குணம், தவபாலன் ஜோர்ஜ் மிக்கேக் பிள்ளை ஜெறாட் பீற்றா ஆகியோரைத் தமது துணைக் கரங்களாகக் கொண்டு – அதன்மூலம் அவர் எழுதி இயக்கிய நாடகங்கள் எமது மரபு சார்ந்த கூத்திசை நாடகங்கள், நடத்திய இசை விழா, தமிழ் வளர்த்த பெரியார்களுக்காக எடுத்த சுவாமி ஞானப்பிரகாசர் விழா – ஒளி விழாக்கள் வார்த்தைகளால் எழுதமுடியாது. இவைபற்றித் தெரிந்தவர்களினால்தான் உணர முடியும். எந்த ஒரு விடயத்திலும் இவர் செயல்பாடுகளில் ஒரு முழுமையும் தனித்துவமும் இருக்கும். அறுபதுக்கும் மேற்பட்ட கலைஞர்களைக் கொண்டு யாழ்ப்பாணம் – கோப்பாய் உரம்பிராய் வவுனியா போன்ற இடங்களில் அதனை நேரில் 'உயிர்த்த யேசு', ஆறுமாதங்களுக்கு மேலாய் பயிற்சி பெற்று 70இல் யாழ் நகர சபை மண்டபம் நிரம்பி வழிய இவர் இயக்கிய சேஷக்ஸ்பியரின் 'யூலியஸ் சீசர்' ஆகியவற்றின் மூலம் ஆயிரக்கணக்கானோரின் அன்பைப் பெற்றவர். அதன் காரணமாகத்தான் யாழ் சென்றோர் அரங்கேற்றிய சமூக நிலையம் இவரது திருமண விழாவின் நான்கு நாட்களும் தனது ''யோகம் கலையரங்கில்'' நாடகங்களும் – தென்மோடி கூத்திசை நாடகங்களும் நடாத்தி இவ்வரைக் கௌரவித்தார்கள்.

**''நாடகக் கலையைக் கற்றுக் கொள்ளவும், பரிட்சார்த்தமான நாடக முயற்சிகளைச் செய்யவும் போதிய வசதிகள் நம்மிடையே இல்லை'' என்பது இவரது பெரம் ஆதங்கமாகும்.**

இத்தகைய நாடகக் கலை ஆர்வலர்க்கு எமது 'கிறின் கிங்ஸ் கழகம்' இந்த நாடக விழாவில் மட்டுமல்ல – இனியும் என்றும் துணைநிற்கும் என்பது உறுதி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகிறோம்...



**கலாநிதி க. தேவமனோகரன்**
**(GIFT)**
**பிரான்சு தமிழர் கலை கலாச்சார ஒன்றியம்**

நாடகக் கலையானது ஏனைய கலைகளினின்று மாறுபட்ட ஒரு கலையாகும். சகல கலைகளையும் தன்னகத்தே சங்கமிக்க வைக்கின்ற ஓர் உன்னத கலையாகும்.

**மனித வளர்ச்சிக்கும், மேம்பாட்டிற்கும் உரிய உயர்வான கருத்துகளை வெகு இலகுவாக மனங்களிலே பதியச் செய்யக் கூடிய அரிய கலையாக நாடகம் கருதப்படுகிறது.**

**அதனாலேதான் இன்றைய நாடகவியலாளர்கள், நாடகம் பார்க்கும் மக்களுக்கு மகிழ்ச்சிப் படுத்தலை மட்டும் தராது, பார்வையாளர்களோடு ஒரு தொடர்பை ஏற்படுத்தும் படியான நாடகங்களைத் தயாரித்தளிக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றனர்.**

விஞ்ஞான வளர்ச்சியால், அடைந்து வரும் மனித சமூக மாற்றங்களுக்கேற்ப, தேவைகளுக்கேற்ப நாடகக் கலையும் காலத்துக்குக் காலம் புதிய பரிமாணம் பெற்று வருவதும் கண்கூடே. இதன் பெறுமானம் உணரப்படாத காலம் போய், ஏனைய சமூக விஞ்ஞான அறிவுகளுக்கொப்ப கற்றுத் தேறிச் செயல்படவேண்டிய அளவுக்கு நாடகக் கலையும் தனக்கெனப் பல்கலைக் கழகங்களை உருவாக்கியிருப்பதன் மூலம், நாடகக் கலைஞனின், நாடக எழுத்தாளனின், நாடக நெறியாளனின் ஆற்றல்கள் – செயல்பாடுகள் மக்கள் மத்தியிலே பேசப்படுவதோடு, மதிக்கப்படுவதற்கான சூழல் இன்று தோன்றியிருப்பது மகிழ்ச்சிக்குரியதே.

எனினும், ஏனைய மொழி நாடகங்கள் கண்டு வரும் வளர்ச்சியும், அம்மொழி மக்கள் நாடகக் கலையின்மீது காட்டுகின்ற ஆர்வமும், பற்றும் எம்மை வியக்க வைக்கின்றன. புலம்பெயர்ந்து வாழும் நாம் கண்டு வரும் பல்வேறு வளர்ச்சிகளினூடே, எமது தமிழ் நாடகக் கலையை வளர்த்தெடுக்க வேண்டிய கடமைப்பாடும் எமக்குண்டு. என்பதனைக் கருத்தில் கொண்டே பிரான்ஸ் – தமிழர் கலை கலாச்சார ஒன்றியம் *(Groupement Intercultural Franco - Tamoul)* தோற்றம் பெற்றது. இவ்வகையில், ஈழத்திலும் பின்னர் புலம்பெயர்ந்து வாழும் பாரிஸ் மாநகரிலும் கலை இலக்கியப் பணிகளிலும் மிகுந்த ஈடுபாடு கொண்டு வருபவரான எம். அரியநாயகத்தின் படைப்புக்களை வெளிக்கொணர்வதைத் தமது ஆரம்ப முயற்சிகளாகக் கொண்டு எமது ஒன்றியம் செயல்படத் தொடங்கியது.

**''நாடகத்தை இலக்கியமாய் படிக்கும் வழக்கமுண்டு. நாடகமாய் பார்க்கும் வழக்கமுண்டு. ஷேக்ஸ்பியர், காளிதாசன் போன்ற நாடக ஆசிரியர்கள் ஆங்கிலம், வடமொழி போன்ற மொழிகளில் மிகப்பெரும் இலக்கிய ஆசிரியர்களாகக் கணிக்கப்படுகின்றனர். எனினும் நாடகம் இலக்கியமாக ரசிக்கப்படுவதைவிட மேடையிலேதான் அதன் முழு வீரியத்தைக் காணமுடியும். நடிகர்களின் கூட்டு முயற்சியே நாடகமாகிறது. படிப்பதற்கு எழுதப்படுவது**



**1998இல் பாரீஸ் மாநகரில் எம். அரியநாயகத்தின் 'யூலியஸ் சீசர்' நாடகத்தைத் தொடக்கி வைக்கும் பிரதம விருந்தினர்கள்**
Mr. Baptist Leseigneur - Mlle. Tatiana Monique SCHMERZ - Dr. K. Devamanoharan



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RESTAURANT
SHALINI

Specialitees InDiennes
etSriLankaise

சுவைமிக்க இலங்கை – இந்திய
உணவு வகைகளுக்கு
பாரீஸ் நகரில் ஓர் உன்னத
உணவகம் இதுவே ...

உங்கள் நண்பர்கள்,
உறவினர்களுடன்
உண்டு மகிழ்ந்து
உவகை கொள்ள நாடுங்கள்...



SHALINI

208, Rue Fbg saint denis
75010 Paris
M° Gare du nord ou
Lachapelle
Tel : 01 46074380

**நாடகமன்று. நடிப்பதற்கு எழுதப்படுவதே நாடகம்.''** இத்தகைய கருத்துக்களை நாடகவியலாளர்கள் கொண்டிருந்தாலும், அரியநாயகம் பாரிசில் மேடையேற்றிய 'நாளைய அறுவடைகள்', 'விளம்பரம்', 'தீர்ப்பு', 'சிவிகை' போன்ற நாடகங்கள் பார்த்தவர்கள் பலரினது பாராட்டைப் பெற்றிருந்ததோடு, அவை படித்து ரசிப்பதற்கும் ஏற்ற வகையாக அமைந்திருந்தன. நாடகங்கள் அரங்கங்களோடு மறைந்து விடாமல் பதிவு செய்யப்பட்டு, நாடக இலக்கியங்களாகப் பாதுகாக்கப்பட வேண்டியன என்பதனைக் கருத்தில் கொண்டு அவருடைய மூன்று நாடகங்களையும் தொகுத்து 'அறுவடைகள்' என்னும் நூலாக்கி புலம்பெயர் இலக்கிய வெளியீடுகளோடு நாடக இலக்கிய வெளியீட்டை எமது ஒன்றியம் தொடக்கி வைத்தது. பாரிசில் வாழும் மூத்த முன்னணிக் கலைஞர்களோடு இளம் தலைமுறைக் கலைஞர்களையும் இணைத்து அவர் நெறியாள்கையில் நாம் அரங்கேற்றிய ஷேக்ஸ்பியரின் 'யூலியஸ் சீசர்', 'உயிர்ப்பு' போன்ற நாடகங்கள் ஒரு சகாப்தத்தை நெருங்கியும் இன்னமும் பலரால் பரவலாகப் பேசப்பட்டு வருவது நாடகத்தின் மீதான அவரின் ஆற்றலையும் அனுபவத்தினையும் வெளிப்படுத்துகின்றன.

''பலவருடங்களாக நான் நாடகத்தைக் கற்று வருகிறேன்'' என்று அவர் அடிக்கடி கூறுவது நாடகத்தின் மீது அவர் கொண்டிருக்கும் அதிதீவிர அக்கறையே!

பாரீஸ் மாநகரில் இவர் போன்ற இன்னமும் விரல்விட்டு எண்ணக்கூடிய ஒருசிலரே நாடகக் கலையில் ஆர்வம் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள். மனங்களைப் பக்குவப்படுத்தி மனிதநேயத்தை வளர்த்து, மனித உரிமைகளை வென்றெடுக்க மக்களை முன்னெடுத்துச் செல்லக் கூடிய சக்தியை கொடுக்கவல்ல இந்த நாடகக் கலையை வளர்த்தெடுக்க கலை இலக்கிய ஆர்வலர்களும் சமூக அக்கறை கொண்டோரும் முன்வரவேண்டும் என்பதே எமது அவா.

புலம்பெயர் வாழ்வில் பல்வேறு நெருக்கடிகள் சிரமங்கள் மத்தியிலும் நாடகக் கலையின் வளர்ச்சி கருதி தன்னாலான முயற்சிகளைப் புரிந்து வரும் அரியநாயகம் அவர்களை வாழ்த்தி, நாடக விழா சிறக்க அவர் பணிதொடர, ஆரோக்கிய வாழ்வை இறைவனிடம் இறைஞ்சுகின்றேன்.

★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1986இல் ஐரோப்பியத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் சார்பில்  பாரீஸ் மாநகரில் தமிழ் நூலகம்
ஒன்றைத் தொடங்குவது குறித்த சந்திப்பில் டாக்டர் கலைஞருடன் எம். அரியநாயகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நெடுநோக்குப் பார்வை....

**பேராசிரியர் சே. இராமானுஜம்**

**தமிழ்ப்பல்கலைக் கழக நாடகத் துறை - முன்னாள் பேராசிரியர், தஞ்சாவூர், தமிழ்நாடு**



**'ஈழத்திலிருந்து புலம்பெயர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சனைகளும், முரண்பாடுகளும் எவை என இனங்கண்டு அவற்றிற்கு முகம் கொடுக்கும்போது எழுகின்ற அவலங்கள், நகைச்சுவைகள் நாடகங்களாக முதன்மைப் படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியரின் நெடுந்தூரப் பார்வையை இது சித்தரிக்கிறது'** என்று எனது இனிய நண்பர் எஸ்.பொ., எம். அரியநாயகம் எழுதிய நாடகங்களைப் பற்றி எழுதியுள்ளதைப் படிக்கும்போது திரு. எம். அரியநாயகம் ஆத்மார்த்தமுள்ள ஒரு நாடகப் பணியாளராக எனக்கு அறிமுகமாவதுபோல் உணருகிறேன்.

ஈழத்து நாடக வரலாற்று முன்னோடியான கலையரசர் சொர்ணலிங்கத்தின் ஆசியுடன் நாடக உலகில் தடம் பதித்தவர் என்ற நிலையிலும், "தென்மோடி நாடகப் பாறுகில் நாடகத் தயாரிப்பில் ஈடுபட்டவர் என்ற பான்மையிலும் அரியநாயகம் அவர்களிடத்து ஒருவகை நெருக்கம் எனக்கு ஏற்படுகிறது.

நடிகர், நாடக நெறியாளர், அரங்கம் மற்றும் வானொலி நாடக ஆசிரியர், கலை - இலக்கிய சஞ்சிகை ஆசிரியர், ஐரோப்பியத் தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தை உருவாக்கிய அமைப்பாளர் ஆகிய பன்முகத் திறன் பெற்றவர். அரியநாயகம் என்பதை உணரும் போது மதிப்புக்குரிய ஒரு சான்றோராக அவர், என் நெஞ்சத்தில் படுகிறார். மானசீகமான என் வாழ்த்துக்களை இவ்வார்த்தை வரிகளுக்குள் புலப்படுத்த முயன்றுள்ளேன்.

இவ்வார்த்தைகளை அதன் தொனியோடு கூடி அரியநாயகம் அவர்களும் அவர்தம் நாடக விழா மலர்க்குழுவினரும் உணர்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

★

... Acteur, metteur en scène, dramaturge, éditeur d'un journal des arts et lettres, organisateur de l'Association des Ecrivains Tamouls de l'Europe – telles sont les différentes facettes de M.Ariyanayagam et J'en suis fier. Je considère M.Ariyanayagame comme quelqu'un qui doit être honoré par tout le monde. Il a une place éternelle dans mon coeur...

Dr. S.Ramanujam,
Ancien Professeur au Département de Théâtre
Université de Tanjore



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் கலைபண்பாட்டுக் கழகம் - பிரான்ஸ்

## ASSOCIATION ARTS ET CULTURES DES TAMOULS - FRANCE

### வாழ்த்துச் செய்தி

*19.09.2004*
*பாரீஸ்*


**கலை இலக்கியத் துறையில், அரியநாயகம் ஆற்றிவரும் பங்களிப்பு மிகச் சிறப்பானது.**

**புலம்பெயர்ந்த பின்னும் சிறந்த ஓர் கலைஞனுக்குரிய சமூக வாஞ்சையோடு இத்துறைகளின் வளர்ச்சிக்காக இவர் உழைத்து வருகின்றமை இதற்குச் சான்றாகும்.**

அரங்கியலும் அதன் செயற்பாடுகளும் புலம்பெயர் நாடுகளில் வாழும் எம் சமூகத்திற்கு மிகவும் அவசியமான ஒன்றாகும். மக்களை விடுதலைக்கான செயற்பாட்டில் இணைப்பதற்கும், எமது இளைய தலைமுறையைத் தேசப்பற்றும், மொழிப்பற்றும் உள்ளவர்களாக வளர்க்க வேண்டிய வரலாற்றுப் பொறுப்பும் இத்துறைசார் கலைஞர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

**கலை மக்களுக்கானது, எனும் யதார்த்த நிலையுடன் எம்மவர் படைப்புக்கள் காலத்தையும் அதன் தேவையையும் தம்மகத்தே கொண்டு உருவாக்கம் பெறுகின்றன. அவ்வகையில் நாடகத் துறையானது மக்கள் அரங்காக மாற்றம் பெற்றுச் சமூக விழிப்புடன், மக்களின் விடுதலை வேட்கையை உலகிற்கு எடுத்துரைக்கும் ஊடகமாகவும், உயர்வடைந்துள்ளது. அத்தகைய பண்புகளைக் கொண்ட இத்துறைக்கு அரியநாயகம் வழங்கிவரும் பங்களிப்பிற்கு எமது மனமார்ந்த வாழ்த்துகளைத் தெரிவிப்பதோடு, நாடக விழா சிறப்பாக அமையவும் வாழ்த்துகின்றோம்.**

**– கலை பண்பாட்டுக் கழகம், பிரான்ஸ்**



தமிழ் மக்களின் தனித்துவத்தை மனதில் கொண்டு வாழ்ந்து வந்த பெருஞ்சித்திரனார் அவர்களுடன்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களுடன் இயங்கும் மனிதன்!

பேராசிரியர் டாக்டர் **கே.ஏ. குணசேகரன்**
நாடகத்துறைத் தலைவர், பாண்டிச்சரி பல்கலைக் கழகம், பாண்டிச்சேரி-605 014

**1997**இல் பிரான்ஸ் பயணம் ஏற்பட்டது. இலங்கையிலிருந்து புலம் பெயர்ந்து சென்ற பலர் எனக்கு அங்கு அறிமுகமானார்கள். அவர்களில் ஒருவர் நண்பர் அரியநாயகம். பலரும் இலக்கியம், சினிமா சார்ந்த துறைகளில் தம் பணிகளை மேற்கொண்டிருக்க அரியநாயகம் நாடகத் துறையில் ஈடுபாடு கொண்டவராக இருந்தார். பெரும்பாலும் நான் அங்கு அவரைத் தனியாகப் பார்த்த நாட்களைவிட பலருடன் சேர்ந்தே இருக்கக்கண்டுள்ளேன். அவ்வப் போது அவர்களில் சிலரை; இவர் நல்லாப் பாடுவார், இவர் நல்ல நடிகர்; இவர் ஆடுவார்; இவர் கூத்துக் கலைஞர்; இவர் ஆர்மோனியம் வாசிக்கக் கூடியவர் என அறிமுகம் செய்வார்.

வீட்டுக்கு ஒருநாள் என்னைக் கூட்டிச் சென்றார். தனது 25 வயது காலந்தொட்டு யாழ்ப்பாணம் தொடங்கி புலம்பெயர்ந்து வந்து வாழுகின்ற பிரான்ஸ் வரை தொடரும், தனது நாடகத் துறை ஈடுபாட்டை விளக்கினார். ஜுலியஸ் சீசர், உயிர்ப்பு எனப்பல நாடகங்களை அவர் அரங்கேற்றம் செய்விக்க எடுத்துக்கொண்ட முயற்சிகளைக் கூறினார். தொடர்ந்து என்னைச் சந்திக்கும் போதெல்லாம் நாடகப் பிரதி செய்வது, இயக்கம் செய்வது என்பன போன்றவை களைப் பேசிக் கொண்டிருப்பார்.

நாடகக் கலை ஒரு குழும நிலைச் செயற்பாடுடைய, மற்றவர்களைச் சார்ந்தே இயங்கும் கலைத்துறையாகும். நண்பர் அரிய நாயகம் தனிநபர் அல்ல. அவர் மக்களுடன் உறவுகொண்டு இயங்குபவர். மக்களின் வாழ்த்துகளைப் பெற்று இயங்கும் அரிய நாயகம் அவர்களின் முயற்சிகளுக்குத் துணை நிற்கும் அனைத்துக் கலை உள்ளங்களுக்கும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.



டாக்டர் குணசேகரனுடன் தனது இல்லத்தில்...

... Le théâtre est une activité artistique collective. Pour la réalisation d'une pièce, il faut des efforts de plusieurs gens. Le fait que M.Ariyanayagam remporte des victoires dans la vie théâtrale montre combien il est soutenu par la société dans laquelle il vit. Je suis très heureux de le féliciter et de lui souhaiter un bonne continuation des activités théâtrales. Je félicite aussi tous ceux qui encouragent M.Ariyanayagame dans ses efforts...

**DR. K .A. GUNASEKARAN, HEAD**

Sri Sankaradass Swamigal School of Drama, Pondicherry University



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**முனைவர் அ. இராமசாமி,**
**இணைப்பேராசிரியர், தமிழியல் துறை,**
**மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக் கழகம்,**
**திருநெல்வேலி-627 012**

21.09.2004

**த**மிழ்மொழி இன்று செம்மொழிகளி ஒன்றாகப் பெருமைப்படுத்தப்பட்டுள்ளது. தாய்த் தமிழகத்தில் வாழும் தமிழ் அறிவுவாதிகள் அதனைக் கொண்டாடி மகிழ்கின்றனர். ஆனால் இந்தப் பெருமை இவ்வளவு காலமும் வழங்கப்படாமல் இருந்ததுதான் ஆச்சரியமானது. உலகின் செம்மொழிகள் எல்லாவற்றிலும் இருக்கும் இலக்கியப் பாரம்பரியமும் தற்சார்பற்ற அறிவுப்பாரம்பரியமும் தமிழுக்கு உண்டு என்பதைத் தமிழர்களாகிய நாம் அறிந்தே இருக்கிறோம். தமிழன் இந்தியத் தமிழனே ஆயினும், யாழ் நிலத்தமிழனாயினும், புலம்பெயர் தமிழாயினும் அதில் கருத்து வேறுபாடுகள் இல்லை.

புகழ்பெருமையுடையது எமது தமிழ் என்பதற்காக மகிழ்ச்சியடையும் அதே நேரத்தில், நிகழ்காலத்தில் அதன் இருப்பு என்ன என்பதையும் கேட்டுக்கொள்ள வேண்டியது அதன் வளர்ச்சியில் உண்மையான அக்கறை கொண்டவர்களின் நிலைப்பாடாக இருக்கும். ‘இயல், இசை, நாடகம் என முத்தமிழ்’ எனக் கதைப்பதும், அதில் இறுமாப்பு அடைவதும் ஒரு பெருங்கூட்டத்தின் ஆரவார வெளிப்பாடாக இருக்கிறது. இந்த ஆரவாரத்தை வெளிப்படுத்தும் அக்கூட்டம் அதற்காக ஒருதுரும்பையும்தூக்கிப் போடுவதில்லை. ஆரவாரிப்பது மட்டுமே அதன் வேலை. ஆனால் ஆரவாரிப்பில் மட்டும் நம்பிக்கை வைக்காமல் வினையாற்றுவதில் நம்பிக்கையும், வேறு மொழிகளில் என்ன நடக்கிறது என்பதைக் கவனிப்பதில் அக்கறையும், அவற்றைத் தமிழில் கொண்டுவந்து சேர்ப்பதில் ஆர்வமும் கொண்ட உள்ளங்கள் தான், தமிழ்மொழியின் வளர்ச்சியில் விருப்பம் கொண்ட உள்ளங்கள் ஆகும். இத்தகைய விருப்பங்களை வெளிப்படுத்துவதில் தாய்த் தமிழகத்தைச் சேர்ந்தவர்களைவிட யாழ் தேசத்தின் தமிழர்கள் முன்னணியில் இருக்கின்றனர் என்பது வெள்ளிடைமலை.

சொந்த தேசத்தில் வாழ்கின்றவர்களாக இருந்த போதும், போர்சார்ந்த நெருக்கடியில் புலம்பெயர்ந்து வாழநேர்ந்தபோதும் யாழ் தமிழர்கள் மொழிக்கு வளம் சேர்க்கும் பணிகளில் சளைத்ததில்லை. கவிதை, கதை, நாடகம் என எல்லா இலக்கியங்களையும் இன்று தனியடையாளத்துடன் செழுமைப்படுத்தி வருகின்றனர், புலம்பெயர்ந்த தமிழர்கள். புலம்பெயர்ந்த தேசத்தில் அரங்கக் கலைசார்ந்து பணியாற்றுதல் என்பது எவ்வளவு சிரமமான பணி என்பது அதில் ஈடுபடுவர்களுக்கே புரியும். ஏனெனில் அரங்கக் கலைச் செயல்பாடு என்பது தனி நபர் சார் வெளிப்பாடல்ல; அது ஒரு கூட்டுச் செயல்பாடு. ஆனால் அதில் ஈடுபட்டு ரசிக்கத் தொடங்கிவிட்டால் விட்டு விலகிவிடாமல் பற்றிப் படர்ந்துவிடும் ஒரு வகைப் பசலை நோய். ஆம், காதலர்களுக்கு இன்பத்தையும் துன்பத்தையும் ஒருங்கேதரும் பசலைநோய் போன்றதொரு நோயே அரங்கச் செயல்பாடு. அத்தகைய பணிகளில் தனது வாழ்நாளில் நாற்பது ஆண்டுகளைக் கழித்துள்ளவர் எம். அரியநாயகம். நாடக எழுத்தாளராகவும், நாடகங்களை நெறியாள்கை செய்பவராகவும், நடிகராகவும், பின்னரங்கப்பணியாளராகவும் தன்னைக் காட்டிக் கொண்டுள்ள அரியநாயகத்தின் பணிகளைப் பாராட்டுவது என்பதும், அவரை மையமாக வைத்து ஒரு நாடக விழாவைத் திட்டமிடுவது என்பதும் காலத்தில் செய்யும் பணியாகும். சொந்த நாடகங்களையும், சொந்த மொழி நாடகங்களையும், சொந்த மொழியில் அந்நிய மொழி நாடகங்களையும் மேடையேற்றிவரும் அவரின் பணிகள் பாராட்டத்தக்கன அல்ல; பின்பற்றத்தக்கன.

**அ. ராமசாமி**


... Il y a des gens qui ne font que parler longuement de « MOUTTAMIZH » (le tamoul de la danse, le tamoul de la musique et le tamoul du théâtre) sans rien faire pour le développement de cette belle langue. Ils ne font que des bruits partout. En revanche, il y a aussi des gens qui observent minutieusement tout de qui se passe dans les autres langues et qui essaient de les apporter aussi dans la langue tamoule. Ce sont eux qui s'intéressent vraiment au développement de la langue tamoule et parmi eux les Tamouls de Srilanka, j'en suis sûr, sont au premier plan...

... C'est très difficile de se lancer dans le domaine du théâtre en tant qu'émigré. Car, le théâtre est une entreprise à multiples facettes. Mais, une fois plongé dans cette entreprise, on ne peut jamais s'en sortir. Oui, c'est comme une sorte de mal qui rend les amoureux heureux et malheureux. M.Ariyanayagam a passé plus de 40 ans dans de telles activités. Ses succès en tant que dramaturge, metteur en scène, acteur et responsable hors de la scène sont à louer.... Le Festival de Théatre organisé en son honneur est quelque chose que tout le monde doit encourager et soutenir. ..

**- Dr. A.Ramassamy,** Professeur de Tamoul, Université Manonmaniam Sundaranar, Tirunelveli



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மகிழ்ச்சி வாழ்த்து

**த**மிழரின் பழங்கலைகளில் ஒன்றே நாடகம். சமூகவியல், உளவியல் அறிஞர்களின் கருத்துகளின்படி, மனிதனுக்குப்பேச்சு வருமுன் அவன் சைகையால் செய்திப்பரிமாற்றம் செய்து கொண்டான். பேச்சு வந்தபிறகும் கை, கால் அசைவுகளில் செய்திகள் இறக்குமதி செய்யப் பெற்றன. அசைவுகளின் இலக்கண வளர்ச்சியாக நாடகம் மகிழ்வூட்டியது; மிகழ்வூட்டிக் கொண்டுள்ளது; மகிழ்வூட்டும்.

நாடகத்துக்கான மற்றோர் அருஞ்சிறப்பு, கருதத்தக்கது. இயலில் இசையோ, நாடகமோ வாராமலும் போகலாம். இசைக்குள் நாடகம் இழையாமல் போகலாம். நாடகம் மட்டுந்தான் இயல், இசை இரண்டையும் தழுவி இயங்குவது. மூன்றாம் தமிழுக்குள் மூன்று தமிழும் இருக்கும்; அதனால் நாடகம் சிறக்கும்.

இந்த அரிய கலையின் மூலம் அரும்புகழ் பெற்றவர் **திருநிறை அரியநாயகம்** அவர்கள். நாடகங்கள் பலவற்றைத் தம் எழுதுகோலால் அழகுறத் தீட்டிய அரிய படைப்பாளி அவர். அவரின் இலக்கிய முன்னெடுப்புகள் காலந்தோறும் அவரின் சீர் பரவும். அவர் பெயரிலான **'நாடக விழா'** பயனும் பொலிவும் தரும் என்பது உறுதி. விழா வெற்றிபெற உளமார்ந்த வாழ்த்துக்கள்.


**– முனைவர் அ. அறிவுநம்பி**

**முதன்மையர்,**

**சுப்பிரமணிய பாரதியார் தமிழியற்புலம்,**

**புதுவைப் பல்கலைக் கழகம்.**


... Seul le théâtre s'inspire de la danse et de la musique. Donc, il va de soi que les trois facettes de la langue tamoul (Mouttamizh) sont présentes dans le théâtre. M.Ariyanayagam est devenu très célèbre dans ce genre littéraire.... Je suis sûr que le Festival de Théâtre qu'on organise en son honneur est un hommage mérité à son oeuvre. Tous mes meilleurs voeux pour la bonne réussite du dit Festival.


**Dr. A.Arivunambi,**

Doyen, Subramaniya Barathi Ecole de la Langue Tamoule,


Université de Pondichéry, Pondichéry.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலை பண்பாட்டு அரங்கில் நாடக ஆசான்!



– எஸ்.ஜெ. யோசெவ்
தலைவர், ஈழவர் திரைக்கலை மன்றம்.

**1948**ஆம் ஆண்டு மேடையில் நடிக்கத் தொடங்கியதாக எனக்கு ஞாபகம். 1976 கடைசியில் ஈழத்தைவிட்டு வெளியேறிப் 'பிரித்தானியா' விற்கு வந்ததுடன் முப்பது வருட உழைப்பு முற்றுப் பெற்றுவிட்டது. வீரியமாய்விட்டது. ஆனால், ஒரு சிலர் ரோமில் வாழ்ந்தால் ரோமானியனைப் போல வாழவேண்டுமென்ற காற்றைப் பொய்யாக்கி உலகில் எந்த மூலையிலிருந்தாலும் எம் பாரம்பரியத்தையும், பண்பாட்டையும் உலகிற்கெடுத்துக் காட்டி அவற்றை உலகளாவச் செய்வோம் என்று கங்கணம் கட்டி நிற்கின்றனர். **'தேமதுரத் தமிழோசை உலகெலாம் பரவும் வகை செய்ய வேண்டும்'** என்ற மகாகவி பாரதியின் உயிர்த்துடிப்பை உண்மையாக்கி வருகின்றனர். அவர்களுள் முன்னோடியானவர்களில் அரியநாயகமும் ஒருவர். அத்தகைய பெருந்தகைக்கு வாழ்த்துத் தெரிவிக்கக் கிடைத்த இச் சந்தர்ப்பத்தை என் பாக்கியமென்று கருதுகிறேன்.

'கூத்தாடுவதும் குண்டி நெளிப்பதுவும் ஆத்தாதவன் செயல்' என்று எள்ளி நகையாடிய காலத்தில் தமிழகத்தில் **பம்மல் சம்பந்த முதலியாரும், ஈழத்தில் கலையரசு சொர்ணலிங்கம்** அவர்களும் சமுதாயத்தின் நகையாடலைப் பொருட்படுத்தாது துணிந்து நாடக உலகிற்குள் பிரவேசித்துச் சமுதாயத்தின் கண்களைத் திறந்து நாடகத்திற்கும், நாடகக் கலைஞனுக்கும் சமூகத்தில் ஒரு மதிப்பையும் மரியாதையையும், நிலையான இடத்தையும் பெற்றுத் தந்தனர். ஈழத்தில் உரைநடை நாடகத் துறையில், கலையரசு அவர்களும் அவரைச் சார்ந்தோரும் உழைத்துவர, பரம்பரையாக வளர்ந்து வந்த இசை நாடகத்தைச் சின்னையா தேசிகர், மாசிலாமணி, கன்னிகா பரமேஸ்வரி, மல்லிகா, கலைமணி வி. வைரமுத்து போன்றவர்களும், ஈழத்தவர்க்கே சொந்தமான நாட்டுக் கூத்தைப் பூந்தான் யோசேப்பு, சிலுவை ராசா, பால்ராஜ் மற்றும் நவாலி, ஆனைக்கோட்டை, பாசையூர், மன்னார் போன்ற இடங்களில் வாழ்ந்த கத்தோலிக்கக் கலைஞர்களும், மட்டக்களப்பு, வட்டுக்கோட்டை, வடமராட்சி ஆகிய இடங்களில் வாழ்ந்த இந்து சமயக் கலைஞர்களும் வளர்த்தனர். தாயகத்தில் ஏற்பட்ட அரசியல் சூழ்நிலைக் காரணமாகத் தேக்க நிலையடைந்திருந்த நாடகக் கலை தற்போது தமிழீழத்தில் புத்துயிரூட்டப்படுவது யாவராலும் வரவேற்கப்படு மொன்றாகும்.

ஈழத் தமிழர் வரலாற்றிலே 1983ஆம் ஆண்டு இனக் கலவரம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது. இது கலவரத்தை ஏற்படுத்தியவர்களே எண்ணிப் பார்க்காத ஒன்றாகும். இக்கலவரம் ஒரு வெற்றியான அரசியல் புரட்சியை ஏற்படுத்தியுள்ளதுடன், ஈழத் தமிழர்களை உலகெங்கும் பரந்து வாழ வைத்தது. **அப்புலப்பெயர்வு, ஈழத் தமிழர் கலை பண்பாட்டுப் புரட்சியை உலகெங்கும் அறிமுகப்படுத்தியது.**

**புலம்பெயர் நாடுகளில் இப் புரட்சிக்கு வித்திட்டவர்களில் எம். அரியநாயகமும் ஒருவராவார்.** ஆயிரத்துத் தொள்ளாயிரத் தெழுபதுகளின் ஆரம்ப காலத்தில், நேரில் பழகாமலே தமது நாடகத் துறைச் சேவைகளினால் என்னைத் தம் வசம் ஈர்த்தவர்களில் இருவர் முக்கியமானவர்கள். ஒருவர் *'அருட்தந்தை சவரிமுத்து'* மற்றவர் அரியநாயகம் முதலில் அவரது 'யூலியஸ் சீசர்' நாடகம் *'யாழ் நவரச நாடகாலயத்தால்'* வெற்றிகரமாக மேடையேற்றப்பட்டபோது, மிக இளமையில் மறைந்த மாபெரும் கலைஞன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுவடை

**1945ம் ஆண்டு யாழ்ப்பாணம் மானிப்பாயில் பிறந்த எம். அரியநாயகம் யாழ். புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் பயின்ற காலத்திலேயே சிறிய இலக்கிய ஆர்வலராய்த் திகழ்ந்தவர். அவ்வீடுபாடுகளின் விளைச்சல்தான் அறுபதுகளில் வெளிவந்த 'எழில்' சஞ்சிகை. விவசாய திணைக்களத்தில் பணிபுரிந்த காலத்தில் இவ்வீடுபாடு மேலும் அதிகரித்தது.**

**கடந்த 18 ஆண்டுகளாக பிரான்ஸ் நாட்டில் வாழும் இவர் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினை உருவாக்கி அதன் ஸ்தாபகத் தலைவராய்ப் பணியாற்றினார். அக்காலத்தே வெளியிடப்பட்ட மண்ணைத்தேடும் மனங்கள் (1986) தூரத்து விடிவெள்ளி (1987) நம்பிக்கை நாற்றுக்கள் (1988) தேசம் தாண்டிய நதிகள் (1989) ஆகிய நூல்களின் பதிப்பாசிரியராய் இருந்தமை இலக்கியத்தில் அவருக்குள்ள தீவிரத்தின் இன்னொரு எறியம்... அவாது நாடக வாக்கத் திறமையையும் நடிப்பாற்றலையும் ஐரோப்பாவில் வாழும் தமிழர்கள் சாட்சிபூர்வமாய்த் தெரிவர். அந்நாடகங்களில் மூன்றினது அச்சு வடிவமான அறுவடை சகல தமிழர்க்கும் விருந்தாகுமென நாம் நம்பலாம். இது தமிழுலகத்தின் இன்னொரு புறம்.**

அருமைநாயகம் தயாரித்து இயக்கிய 'யூலிய சீசர்' நாடகத்தில் மார்க் அந்தனியாக நடித்தவன் என்றபடி யானோ என்னவோ இவரது யூலிய சீசர் நாடகத்தையும், இவரையும் பார்க்க ஆசைப்பட்டேன். முடியவில்லை. பின்னர் 1974இல் அம்மன்றம் தயாரித்த 'சாணக்கியன்' நாடகத்தைப்பற்றிக் கேள்விப்பட்டபோது ஏற்கெனவே சாணக்கியனாக நண்பன் ரகுநாதன் இயக்கித் தயாரித்த 'அசோகன் காதலி' நாடகத்தில் நடித்த படியால் அரியநாயகத்தைப் பார்க்க வேண்டுமென்ற ஆவல் மீண்டும் எழுந்தது. ஆனால் முடியவில்லை.

சென்ற ஆண்டு இலண்டனில் நண்பன் 'ரகுநாதன்' 'சிவிகை' என்னும் தனி நாடகத்தை நடாத்திப் பெரும் பாராட்டைப் பெற்றார். அது அரியநாயகத்தினது என அறிந்து மிக மகிழ்ச்சியடைந்தேன். அவர் மூலம் அரியநாயகம் புலம்பெயர் நாட்டிலும் தன் நாடகப் பணியைத் தொடர்கிறார் என்றறிந்து மிக்க மகிழ்ச்சியடைந்தேன். அரியநாயகம் பிரான்சில், 'கடிவாளம்', 'சிலுவையும் மனிதனும்', 'விளம்பரம்', 'சொந்த மண்' போன்ற பல நாடகங்களைத் தயாரித்தளித்துப் பெரும்பாராட்டைப் பெற்றுள்ளார். அண்மையில் அவர் எழுதிய 'அறுவடை' என்ற நாடக நூலை வாசித்தேன். 'அறுவடை', 'தீர்ப்பு', 'நாளைய அறுவடை' ஆகிய நாடகங்களை அதில் படித்தேன். நாடகத்தின் வரம்புகள் தவறாது அருமையாக எழுதியுள்ளார். படிப்பதற்கு மிகச் சுவையாக இருந்தன. அவை மேடையேற்றுவதற்கு மிகப் பொருத்தமானவை. தமிழ் நாடகத் துறையில் ஈடுபட விரும்புவோர் இப்படியாக நாடகங்களை முதலில் ஆர்வத்துடன் படிக்க வேண்டும். எமது குருநாதர் கலையரசு சொர்ணலிங்கம் அவர்களின் ஆசியைப் பெற்றவர் என்பதில் கூடுதல் உவகையே.

ஆங்கில நாடக ஆசான் சேக்ஸ்பியர், 'உலகம் ஒரு நாடக மேடை, அதில் நாமெல்லாம் நடிகர்கள்' என்றியம்பி, வாழ்க்கையும் நாடகத்தையும் ஒன்றிணைத்தார். ஆனால், சேக்ஸ்பியருக்குப் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மனித வாழ்க்கைக்கு மொழி இன்றியமையாதென்பதை உணர்ந்த எம் மூதாதையர் தம் இனிய தமிழ்மொழியை, இயல், இசை, நாடகம் என வகுத்து, நாடகத்தை மொழியுடன் ஒன்றறக் கலந்து நாடகத்திற்கு உலகில் யாருமே கொடுக்காத முக்கியத்துவத்தைக் கொடுத்தார்கள். ஆனால் இன்று எம் வீடுகளில் உள்ள சின்னத் திரைகளிலே 'இன்னிக்கு ஆத்துக்கு அத்தீம் பேருவும் வருவாருண்ணா' என்றா நம் இனிய தமிழை எங்கள் குழந்தைகள் கேட்க வேண்டும்? அரியநாயகம் போன்ற நாடக ஆசான்கள்தான் இதுபற்றியும் சிந்திக்க வேண்டும்.

... L'année dernière, la représentation théâtrale de la pièce « Çivigai » a eu lieu à Londres. Le seul personnage de cette pièce a été joué par mon ami A.Ragunathan avec un grand succès. C'est alors que j'ai appris avec plaisir que cette pièce a été écrite et mise en scène par M.Ariyanayagam...

M.S.J.Joseph, LLB, Barrister.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழமுரசு
ஐரோப்பா

***த**மிழில்* **நாடகம்** தோன்றிய காலம் பற்றித் தெளிவான பதிவுகள் இல்லையெனினும், அதன் வளர்ச்சி பற்றிய தகவல்கள் தெளிவாகவே உள்ளன. உலகமெங்கிலும், நடனத்திலிருந்தே நாடகம் தோன்றியது என்ற **மேல்நாட்டறிஞர் வெல்ஸ்** என்பவரது ஆதாரபூர்வமான கூற்று இன்னும் மறுதலிக்கப்படாத கூற்றாகவே உள்ளது.

**தெய்வ வழிபாடு காரணமாகவும், வீரர்களின் வெற்றியைக் கொண்டாடும் காரணமாகவும் நிகழ்த்தப்பட்ட ஆடல் பாடல்களே நாடகத்தின் அடிப்படையாக இருந்திருக்கிறது.** நாடகம் என்பது பழங்காலத்தில் 'நடனம்' என்ற பொருளில் வழங்கப்பட்டு வந்ததிலிருந்து இக்கூற்று மேலும் உறுதிப்படுத்தப்படுகிறது. காலப்போக்கில் அதுவே கதை தழுவிய கூத்தாக முகிழ்த்துப் பிற்காலத்தில் முழுமையான நாடகங்களாக மலர்ந்தன. சுருங்கக் கூறின், **கூத்தின் மறுமலர்ச்சியே நாடகமாகும்.** கால ஓட்டத்தில் ஏற்பட்ட அறிவுப் பெருக்கமும், கலை உணர்வின் வளர்ச்சியுமே **நாடகக் கலை**யின் வளர்ச்சிக்கு மாற்றங்களையும், ஏற்றங்களையும் கொடுத்தன. 'நாடகம்' என்ற சொல்லை முதன் முதலில் வழங்கிய பெருமை தொல்காப்பியரையே சாரும்.

அன்று தொட்டு இன்றுவரை தோன்றியுள்ள நாடகங்களாகத் தெருக் கூத்து, மேடை நாடகம், சிறப்பு நாடகம், உரைநடை நாடகம், செய்யுள் நாடகம், நாட்டிய நாடகம், இசை நாடகம், ஓரங்க நாடகம், வானொலி நாடகம், தொலைக்காட்சி நாடகம் ஆகியனவற்றைக் கூறலாம்.

நாடகம் சமுதாயத்தோடு தொடர்புடைய ஒரு பண்பாட்டுக் கலையாகும். தெருக்கூத்து என்ற பாரம்பரிய நாடக வடிவத்தின் மூலம் மக்களிடையே எந்தளவுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த முடியுமென்ற யதார்த்தத்தை நாம் தமிழீழத்தில் கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கின்றோம்.

நாடகக் கலையை வெறுமனே ஒரு வண்மை மிக்க விளம்பரக் கருவியாகப் பயன்படுத்தப்படும் இந்நவீன உலகில், அங்கொன்று இங்கொன்றாய் மேடையேறும் ஒரு சில நல்ல நாடங்களைத் தவிர, நாடகக் கலை அருகிக் கொண்டு போகும் இந்நாட்களில், நாடகத்தின் நோக்கமும் தரமும் குன்றாமல், அதைப் பார்ப்பவர்களின் உள்ளங்களில் அறிவு ரீதியான உணர்வை – கருத்தைப் பதிய வைக்கும் பெரும் பணியில் எம். அரியநாயகம் தொடர்ந்து ஈடுபடுவதைப் பாராட்டாமலிருக்க முடியாது. அவரது, 'யாழ் நவரச நாடகாலயம்' மூலம் **ஷேக்ஸ்பியரின் 'யூலியஸ்சீசர்' மற்றும் 'சாணக்கியன்', சில கூத்திசை நாடகங்கள் போன்றவற்றைச் சொந்த மண்ணிலும் பாரீஸ் மாநகரில் நாளைய அறுவடைகள், கடிவாளம், உயிர்ப்பு, விளம்பரம், தீர்ப்பு சிவிகை போன்ற நாடகங்களை எழுதி இயக்கி ஆற்றி வரும் கலைத்தொண்டிற்காக நாம் அவரை வாழ்த்தக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாண்டு ஒக்டோபர் 31ந் திகதி பாரிசில் நடைபெறயுள்ள அரியநாயகத்தின் நாடக விழாவில் தமிழ் மக்கள் பெருந்திரளாகக் கலந்து கொண்டு அவரது முயற்சிக்குப் பெரும் ஊக்கமளிப்பது அவர்களது கடமையாகும்.**

*அரியநாயகத்தை வாழ்த்துவதில் ஈழமுரசு பெருமையடைகிறது.*


*08–09–04*

– ஈழமுரசு





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடகமும் நாமும்...

## 'தமிழாள் கூத்தவை' ஏ. ரகுநாதன்

**'க**லைஞனின் வேலை படைப்பின் மூலம் மரபை நவீனப்படுத்துவது தான்' – **சந்திரலேகா.**

நாடகம் – மக்களுக்காக, மகிழ்விக்க, மக்களால் – மக்களின் வாழ்வியலின் மறுபதிப்பாக, மன உணர்வுகளின் பெரும்பேறாக மனத்தை வருடும் ஒரு கலை. கலையின் மூலம்; கலைஞன் மூலம்; மக்ககள் மனத்தை வென்றெடுக்கவும்; வழி நடத்தவும் உலகில் முகிழ்த்த கலை. கிரேக்கம் தந்த வித்து.

இன்று உலகெங்கும் மக்கள் மனங்களை ஆளும் வியப்பு. காலங்கள் நூற்றாண்டுகளாக உதிர்ந்துவிட்டன. நாடகக் கலை தன் நவீனக் குழந்தைகளான திரைப்படம், சின்னத்திரை (T.V.) எனப் பரிமாணங்கள் புது வர்ணம் பூசிவிட்டன. தொழில் நுட்பம் – கிராபிக் எனப் புதுப்பிக்கப்பட்டு மயக்கியும் விட்டன.

ஆனால் –

உலகம் இன்னும் நாடகக் கலையை மறக்கவில்லை. ஆராதிக்கத் தவறவில்லை. உயிர்ப்புள்ள அந்தக் கலையில் லயிக்கத் தவறவில்லை. தம் வாழ்வின் பிரதிபலிப்பான நாடக வடிவை வளர்க்கப் பின்நிற்கவில்லை.

விஞ்ஞான வளர்ச்சியில் சாதனைகள் படைக்கும் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில், இன்றும் நாடகம் பார்க்க வருடக்கணக்கில் பிரவேசச் சீட்டுப்பெறக் காத்திருப்பதும், மண்டப வாசலில், வரிசையில் நின்றிருப்பதும், நாடகக் கலையின் **சிரஞ்சீவித்** தன்மைகளை நிரூபித்துக் கொண்டே இருக்கின்றன.

ஆனால் –

தமிழ் நாடகம்; தமிழர்தம் ரசனை; தமிழரின் படைப்பாளுமை...??? ஏன்? ஏன் இப்படி ஆனது? திரைப்படத்தின் தாக்கம் என்கிறார்கள்.

ஐரோப்பாவில் அமெரிக்காவில் திரைப்படங்கள் இல்லையா? சின்னத் திரையா? அது நேற்றைய சங்கதி.

அதற்கு முன்பே நாடகக் கலையை நம்மவர் மறந்ததேன். ஒரு காரணத்தை வேண்டுமானால் சொல்லலாம். இன்னும் இந்தியத் திரைப் படங்கள் நாடகங்களாகத்தான் இருக்கின்றன.

மக்கள் ஆராதித்த நாடகக் கலை ஒப்பனை செய்யப்பட்டு, சுயமிழந்து – உயிரிழந்து பொம்மலாட்டமாக ஆகிவிட்டது. ஆனாலும் அறிவியலில் நாம் பின்தங்கிவிட்டதால் ஏதோ நவீனத்தைப் போற்றுகிறோம் என்று போலியாக நிழலுக்குப் பூஜை பண்ணுகிறோம்.

இந்தியாதான் அப்படி என்றால் இலங்கைத் தமிழனுக்கு என்ன வந்தது?

இந்திய ஊடகங்களும், கலைகளும் இயங்குவதற்கு மூலதனமிடும் சந்தையாக நம்மவர் உலகெலாம் இருப்பதைப் பயன்படுத்தி எங்கள் ரசனைகளை மறக்கடித்து பக்தி ஊட்டி– நம்மவர் செம்மறி ஆடுகளாக – நடிக்கத் தெரியாத தென்னிந்தியக் கதாநாயகர்களுக்கும் ரசிக (பக்தி) மன்றங்கள் வைத்து–விடிவுக்காக – சுயநிர்ணய உரிமைக்காகப் போராடும் இந்த நிலையிலும் நாம் தென் இந்தியக் குப்பை

... Le trajet artistique que M.Ariyanayagam a commencé à Jaffna continue encore à Paris. Il est étonnant de savoir que les artistes de cinq générations vont collaborer afin de mettre en scène une dixaine de pièces dans le Festival de Théâtre qui aura lieu en son honneur le 31 octobre 2004 à Paris. J'ai assisté à plusieurs représentations théâtrales de ses pièces. J'ai même joué des rôles dans ses pièces. Je n'hésite pas à le féliciter : il est vraiment un HOMME DE THÉÂTRE remarquable...

**- A.Ragunathan**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களையும் கண்மூடி ஆராதிக்கின்றோம்.

அவர்கள் நாடகக் கலையை மறந்து விட்டார்கள். நாமும் அவர்கள் பின்னால் நடக்கிறோம்.

உதாரணத்திற்கு தென் இந்தியாவில் மணமகன் (மகள்) தேவை விளம்பரத்தில் - இன்ன சாதியைச் சேர்ந்த - இன்ன கோத்திரத்தில் பெண் (ஆண்) வேண்டும் என 21ஆம் நூற்றாண்டிலும், மனித நேயம் என்ற உன்னத கோட்பாட்டைப் புரிந்து கொண்ட வேளையிலும் நம்மவரும் மறந்து வரும், மறக்கப்பட வேண்டிய சாதியக் குறிப்புகளும் தென் இந்தியச் சாதி வெறியர்களைப் பின்பற்றி திருமண விளம்பரங் கொடுக்க ஆரம்பித்துள்ளோம்.

அப்படி ஒரு மூளைச் சலவை செய்யப் பட்ட பக்தியை இந்திய ஊடகங்கள் நமக்கு அறிவை மழுங்கடித்து வருகின்றன. தங்கள் வியாபாரத்துக்காக எங்கள் கலாச்சாரத்தையே அழித்து வருகின்றன.


ஆகவேதான்-

இன்றும் சிதைக்கப்பட்ட நாடகங்களான தென்னிந்திய சினிமாவில் ஆரம்ப காலத்தில் நாடகங்களில் நடித்த - தாம் பார்த்த நடிகர்களே நடித்ததால் அவர்களுடன் இவர்களும் நாடக மேடைகளைவிட்டு திரை அரங்குக்கு வந்து விட்டார்கள்; வந்து விட்டோம்.

உயிரான பாத்திரங்கள் உலாவும், உலகம் இன்றும் முன்னிலைப் படுத்தும், அற்புதக் கலையை வளர்க்கத் தவறிவிட்டோம்.

அதைக் காப்பாற்றுவதற்காக திருவள்ளூர் **முத்துசாமி, இந்திரா பார்த்தசாரதி, ராமானுஜம், குணசேகரன்** போன்ற சிலர் தமிழகத்தில் போராடுவதுபோல், புலம்பெயர்ந்த நாடுகளில் நம்மவர் சிலர் தொடர்ந்து தங்களைக் களப்பலி யாக்கி வருகிறார்கள். எனக்குத் தெரிந்த வரையில் - **லண்டனில் தாசீசியஸ் - பாலேந்திரா** - சூவிற்சலாந்தில் **அன்ரன் பொன்ராஜ்**- ஜெர்மனியில் **நாச்சிமார் கோவிலடி** இராஜன், பாரீசில் - **பரா - அரியநாயகம், சுபாஷ்** என உறுதியாகச் சொல்லமுடியும். இந்த நேரத்தில் 40களில் தொடங்கி 80கள் வரை இலங்கையில் நாடகக் கலை வளர்த்த கலைமேதைகளையும் மனம் இரை மீட்கிறது. **கலையரசு சொர்ணலிங்கம்,** (சண்முகநாதன்) **எஸ்.ஜி. அரசு, நடிகமணி வைரமுத்து - நடிகவேள் லடீஸ் வீரமணி - ரொசாரியோ பீரஸ், சுஹேர் ஹமீட், சுந்தரலிங்கம் சிதம்பரநாதன், 'சானா'** மௌனகுரு, **குழந்தை சண்முகலிங்கம் பூந்தான் ஜோசப் வனபிதா** எனப் பலர் நாடகக் கலைக்காக வாழ்ந்தார்கள்; வாழ்கிறார்கள்.

அந்த வரிசையில் தம்பி *அரியநாயகமும்* தொடர்ந்து ஒரு *நாடகக் காவலனாக* - உபாசகனாக எழுதி, நெறிப்படுத்தி, நாடக மேடைக்குப் புத்துயிர் அளித்து வருகிறார் - யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்த அவர் கலைப்பயணம் பாரிசில் தொடர்கிறது - இந்த ஒக்டோபர் 31, 2004 அன்று அவர் அரங்கேற்றும் நாடக விழாவில் 5 தலைமுறைக் கலைஞர்களை ஒருங்கிணைத்து, 10 குறு நாடகங்களை மேடையேற்ற உள்ளார் என்பது பிரமிப்பாக உள்ளது. **இதுவரை யாருமே இங்கு செய்யாத அரிய - அசுர முயற்சியாகும்.** அவரின் நாடகங்கள் பலவற்றைப் பார்த்திருக்கிறேன். பாராட்டிப் பத்திரிகையில் எழுதியிருக்கிறேன். அவர் நாடகத்தில் நடித்துமிருக்கின்றேன். அந்த வகையில் அவருடன் நெருங்கிப் பழகியுமிருக்கிறேன். அவரை **மிகச் சிறந்த ஒரு 'நாடகன்' எனப் பாராட்டுவதில் எனக்கு எந்தத் தயக்கமுமில்லை. அவரின் நாடக விழா வெற்றிபெற என் வாழ்த்துகளும், பங்களிப்பும் என்றும் உண்டு** எனக் கூறி, மேலும் பல நாடக விழாக்கள் எம் மண்ணின் பெருமையும், அருமையும், தேவையும், பிதிபலிக்கும் நம் விழாவிற்கு முன்மொழியும் நாடகங்களும் தந்து அவர் தொண்டாற்ற வேண்டுகிறேன். ✦



**"பார்வையாளர்களில் குறைந்த பட்சம் ஆர்வமுடைய யாரோ ஒருவனாவது நீ என்ன செய்து கொண்டிருக்கிறாய் என்பதை எப்போதும் கவனித்துக் கொண்டே இருக்கிறான்."**

**- பாலசரஸ்வதி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் விடுதலைக்கான தவிப்பு நாடகங்களாக வேண்டும்...

**- கவிஞர் காசி ஆனந்தன்**

**நா**டகத் தமிழ் அறிஞர் அரியநாயகம் முத்தமிழில் மூன்றாம் தமிழாம் நாடகம் வளர ஆற்றிவரும் பணி குறித்து நான் அறிவேன்.

பார்த்ததில்லை நான் அவர் நாடகங்களை; எனினும், பாரிசில் இருந்து என்னைக் காண வந்த பலர் அவரைப் பாராட்டிப் போயிருக்கிறார்கள்.

அவர் நாடகம் உயர்வானது என்பது எனக்குத் தெரியாது. ஆனால் – நாடகம் அவர் உயிரானது என்பது எனக்குத் தெரியும்.

இன்று – தமிழுலகில், குறிப்பாக தமிழ் நாட்டில், நாடகத்தமிழ் அழிவின் விளிம்பில் இருப்பதைப் பார்க்கிறோம்.

நாட்டியக் கலை ஒன்றே நாடகத் தமிழைக் காத்து நிற்கிறது.

தமிழர்களின் பழம்பெரும் சொத்தான தெருக்கூத்தைத் தமிழர்கள் போற்றுவதாய் இல்லை. சங்கரதாசு சுவாமிகள், பம்மல் சம்பந்த முதலியார், நவாப் இராசமாணிக்கம் போன்றோரால் வளர்க்கப்பட்ட பிற்கால மரபுவழி நாடகங்களைக் கூடத் தமிழர்கள் மேடை ஏற்றுவதாய் இல்லை.

கலைவாணர் என்.எஸ். கிருஷ்ணன், நடிகவேள் எம்.ஆர். இராதா ஆகிய இருவரும் மூடத்தனம் நிறைந்து கறைபடிந்து கிடந்த தமிழ்நாட்டைக் கழுவி எடுக்க நாடகத்தைப் பயன்படுத்தினர்.

இத்தகைய நாடகங்கள் கூட இன்று தமிழ்நாட்டில் இல்லை.

எஸ்.வி.சேகர், கிரேசி மோகன் போன்றோர் நடத்தும் 'கூத்துக்கள்' அல்ல 'கூத்தடிப்புகளே' நாடகங்கள் என அழைக்கப்படுகின்றன.

கூத்துப் பட்டறை முத்துசாமி, நடாகத் தமிழ் ஆய்வாளர் மங்கை, சிந்தனையாளர் இன்குலாப், புதுச்சேரி பேராசிரியர் குணசேகரன் இப்படி ஒருசிலர் தம்மால் முடிந்தவரை கூத்துத் தமிழை வளர்ப்பதில் ஈடுபாடு கொண்டுள்ளனர்.

இக்காலச் சூழலில் – நாடகத் தமிழ் அறிஞர் அரியநாயகம் உலகின் எங்கோ ஒரு மூலையில் – பிரான்சில் உட்கார்ந்துகொண்டு நாடகத் தமிழுக்கு ஆற்றிவரும் பணியைப் பாராட்டாமல் இருக்க முடியவில்லை.

அவர் எழுதிய 'விளம்பரம்' நாடகத்தைப் படிக்கும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. ஓரளவு அவர் ஆற்றலை அறிந்து கொண்டேன்.

கலை கருத்துப் பரப்புரைக் கருவி அல்ல. கலை கலைக்காகவே என்கிறார்கள்.

இதில் எனக்கு உடன்பாடு இல்லை.

கூத்தின் செல்வர் அரியநாயகத்தின் நாடகம் தமிழீழத்தின் கண்ணீரையும் பெருமூச்சையும் குருதியையும் பதிவு செய்ய வேண்டும்.

**தமிழீழ மக்களின் விடுதலைக்கான தவிப்பு நாடகமாக வேண்டும்.**

இந்த வகையில் பல நாடகங்களை அவர் ஏற்கெனவே இயற்றியிருக்கிறார் என்பதை அறிவேன்.

மேலும் மேலும் இந்நோக்கில் அவர் மேடைகள் அமையவேண்டும் என்பதே என் ஆசை.

கலை ஆற்றல் மிக்கவர் – பட்டறிவுள்ளவர் – களைப்பறியா உழைப்பினர் அரியநாயகம்.

கூத்தின் செல்வர் அரியநாயகம் பிரான்ஸ் தமிழர் கலை கலாச்சார ஒன்றியத்தினரோடு கிறீன் கிங்ஸ் கழகம் இணைந்து எடுக்கும் நாடகவிழா கூதிர் காலத்து மயிலின் ஆடல் அழகோடு இனிது நிகழ வாழ்த்துகிறேன்.

✦



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரான்ஸ் – தமிழர் கலை கலாசார ஒன்றியம் நாடகக் கலைஞர் எம். அரியநாயகத்தின் நாடக விழா ஒன்றினை அக்டோபர் மாதம் பிரான்சில் நடாத்துவதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன்.

அரியநாயகம் ஈழத்தின் பழம்பெரும் நாடகக் கலைஞர். சானா, ஆர். பேரம்பலம், சில்லையூர் செல்வராசன் போன்றோருடன் சேர்ந்து 60, 70களில் இங்கு நாடகப் பணிபுரிந்தவர். புலம் பெயர்ந்தபோதும் அவர்தாம் வசிக்கும் நாட்டில் இப்பணியைத் தொடர்வது அவர் நாடகக் கலை மீது வைத்திருக்கும் பற்றினுக்குச் சான்று. நண்பர்கள் மூலம் வெளிநாட்டுப் பத்திரிகைகள் மூலமும் – அவர் நாடகங்கள் பற்றி அறிந்துள்ளேன். அவர் தொடர்ந்தும் பணிபுரியவேண்டும். அவருக்கும் அவரது பணிகளுக்கும் மரியாதை செலுத்தும் முகமாக இக்கட்டுரையை நாடக விழா மலருக்கு அனுப்பி வைக்கிறேன்.

– பேராசிரியர் சி. மௌனகுரு
தலைவர்,
நுண்கலைத் துறை
கிழக்குப் பல்கலைக் கழகம்,
இலங்கை

# நாடகக் கலையின் பயன்கள்



நாடகக் கலை ஏனைய கலைகளை விட வித்தியாசமான ஒரு கலை. சுவைபட வருவன வெல்லாம் ஓரிடத்துத் தொகுத்துக் கூறும் கலை இது. அத்தோடு ஓவியம், சிற்பம், கட்டிடம், இசை, நடனம் என அனைத்துக் கலைகளும் சங்கமிக்கும் கலை இதுவாகும். அனைத்துக் கலைகளும் சங்கமிப்பதால், அனைத்துக் கலை களையும் இரசிக்கும் முழுமையான கலை யுணர்வு இக்கலையைப் பார்ப்பதால் நமக்கு ஏற்படுகின்றது. நாடக வரலாற்றில் நாடகம் மக்களை நன்மைக்கு இட்டுச் சென்றதையும் காண்கின்றோம்; தீமைக்கு இட்டுச் சென்றதை யும் காண்கின்றோம். மனித குல விழுமியங் களை மக்கள் மத்தியில் பிரச்சாரம் செய்து அவர்களுக்கென ஒரு கருத்தியலை உருவாக்கிய கலையும் இதுதான். அவ் விழுமியங்களைக் கேள்விக்குள்ளாக்கி மக்கள் மத்தியில் விமரிசனப் பாங்கினை ஏற்படுத்திய கலையும் இதுதான். இக்கலைக்குப் பல முகங்கள் உள்ளன. 'உலகமே நாடக மேடை. ஆண்களும்' 'பெண்களும் அதில் நடிக்கும் நடிகர்கள் தான்' என்றுரைத்தார் ஆங்கில நாடகாசிரியரான ஷேக்ஸ்பியர்.

நாடகத்தைப் பார்க்க விரும்பாதார் எவரும் இல்லை. அதிற் பங்கு கொள்ள அல்லது பார்வையாளராக இருக்க ஒவ்வொருவரும் விரும்புவர். நாடகத்தில் ஏதோ ஒரு வகையில் பங்கு கொள்கையிற் கிடைக்கும் அனுபவம் மனிதர்களின் மன இறுக்கங்களைக் குறைத்து அவர்களைத் தளர் நிலைக்குக் கொண்டு வருகிறது. கண நேரத்துள் கோபம், பயம், இரக்கம், அழுகை, சிரிப்பு, அருவருப்பு எனப் பல்வேறு உணர்வுகளை அக்கலை ஏற்படுத்தி விடுகிறது. அது காட்டும் காட்சிகளில் நம்மைக் காண்கின்றோம்; நம்மைச் சூழவுள்ள மனிதரைக் காண்கின்றோம். கண்ணாடி நம் பிம்பத்தை நமக்குக் காட்டுவது போல நாடகம் ஒரு வகையில் நம் குணாதியங்களை நமக்குக் காட்டுகிறது. இக்கலையின் சாராம்சங்களைப் பின்வரும் ஐந்து வினாக்களை எழுப்பி அவற்றிற்கு விடை தேடும் முகமாக அறிய முனைவோம்.

1. நாடகத்தின் தனித்துவம் யாது?

2. நாடகத்தில் பங்கு கொள்ள நாம் ஏன் விரும்புகிறோம்?

3. நாடகம் பற்றிப் படிப்பதால் பயிற்சிப் பட்டறைகளில் ஈடுபடுவதல் அடையும் நன்மைகள் யாவை?

4. பயிற்சியின் தன்மைகள் யாவை

5. பயிற்சி தருவோரின் தன்மைகள் யாவை?

இனி, இவற்றிற்கான விடைகளைத் தேடுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 1. நாடகத்தின் தனித்துவம் :

ஏனைய கலைகளைவிட இது இயங்கு கின்ற நிலையில் எப்போதுமுள்ள கலையாகும். இதனை ஒரு சக்திமிக்க இயங்கு கலை என்பர். (Dynamic Art) நாடகத்தில் இரண்டு பகுதியினர் பிரதானமானவர்கள். ஒரு பகுதியினர் நடிப்போர்... இன்னொரு பகுதியினர் பார்ப்போர். பார்ப்போர் இல்லாமல் நாடகம் நடத்த முடியாது. நடிப் போருக்கும் பார்ப்போருக்கும் இடையில் நடை பெறும் ஊடாட்டமே (Interaction) நாடகத்தின் அடிநாதம்.

ஒரு நாடகம் மீண்டும் மீண்டும் மேடை யேறுகிறது என்பது உண்மையாயினும், ஒரு நாடகம் முதல் அளித்த அறிக்கை மாதிரி மீண்டும் அளிக்கப்படுவதில்லை. ஒரு நாடகத்தின் ஒவ்வொரு மேடையேற்றமும் அதனை ஒரு புதிய அரங்க அறிக்கையாகவே தருகின்றது. சினிமா அப்படியன்று ஒரு படமே, மீண்டும் அதே மாதிரி பிசகின்றி ஓடும். அது இயந்திரத் திற்குள் அடக்கமானது. நாடகம் அப்படியன்று அது மனிதருக்குள் அடக்கமானது.

இதனால், ஒரு நாடகத்தை மனிதர் மறுபடியும் அப்படியே நடிக்கிறார் சிற்சில மாறுபாடுகள் அடுத்த மேடையேற்றத்தில் இருக்கும்.

நாடகம் அனைத்துக் கலைகளும் சங்கமிக் கின்ற ஒரு கலையாகும். நாடகத்திற்கான பின்புலங்களை அமைக்கும்போது கட்டிடம், ஓவியம், சிற்பம் என்ற கலைகள் அங்கு வந்து விடுகின்றன. நாடகத்திற்கான இசையையும், அசைவுகளையும், ஆடல்களையும் அமைக் கையில் அங்கு இசையும், நடனமும் வந்து விடுகின்றன. நாடகத்திற்கான பிரதி எழுதப்படு கையில் அங்கு இலக்கியம் வந்துவிடுகின்றன. இவ்வகையில் நாடகம் அனைத்துக் கலைகளும் சங்கமிக்கும் கலையாகக் காட்சி தருகின்றது.

மனிதருடன் மனிதர் நேரடியாக உறவாடும் கலை நாடகக் கலை. ஓவியன் கீறிய ஓவியமும், சிற்பி செதுக்கிய சிற்பமும் தான் மனிதருடன் உறவாடும். ஓவியனும், சிற்பியும் அச்சமயம் இன்னொரு ஆளாக அங்கு நிற்பர்; அல்லது நிற்காமலும் விடுவர். ஆனால், நாடகக் கலை அவ்வாறன்று மேடையில் தான், சிருஷ்டிக்கும் போதே சுவைஞரின் எதிர் வினைகளை நடிகன் கண்டு கொண்டே சிருஷ்டிக்கின்றான். பார்ப் போரின் எதிர் வினைகளை உணர்கின்றான். அவர்களின் அமைதியும் எதிர் வினைதான்;












Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆராவாரமும் எதிர் வினைதான். மனிதருடன் உறவாடும் தன்மை கொண்டதாகச் சுவைஞரின் எதிர்வினைகளை உடனுக்குடன் அறியக் கூடியதாக இருப்பதுதான் இதன் மிகப் பெரும் பலம்.

செலவில்லாத ஒரு கலை, நாடகக் கலை. நாடகக் கலைக்கு அத்தியாவசியமாகத் தேவைப் படுபவை வெளியும், உடலும்தான். நடிகனின் உடலும், குரலும் கற்பனையுமே நாடகத்தின் முதலீடுகள். இவற்றைக் கொண்டு வெளி எனும் அரங்கில் (அது உயர்தப்பட்டதாக இருக்கலாம், சம தரையாக இருக்கலாம்.) நடிகர் வரையும் கோலமே நாடகம்.

நடிகனின் அனுபவங்களும் உணர்வுகளும் பார்ப்போரைச் சென்றடைகின்றனர். பார்ப் போரின் உணர்வுகள் நடிகரைச் சென்றடை கின்றன. இந்த அனுபவப் பகிர்வும், உணர்வுப் பரிமாற்றமும் நாடகம் என்னும் சிருஷ்டி ஆரம்பித்து முடியும் வரை இடையறாது நடை பெற்றுக் கொண்டிருக்கின்றன. இவ்வனுபவம், உணர்வுப் பகிர்வு. நாடகக் கலையின் தனித்துவ மான அம்சங்களுள் ஒன்று.

நாடகம் சில விதிமுறைகளுக்குள் விளை யாடும் விளையாட்டு என்றும் கூறலாம். நாடகத்தை Play என்றழைப்பர். கர்ணனாக கணேசன் நடிப்பார். பார்வையாளர் கணேசனைக் கர்ணன் என்று கருதமாட்டார். கணேசன் என்பவர் கர்ணனுக்குநடிக்கிறார் என்ற நினைப்பில் அப் பொய்மையை ஏற்று கணேசனைக் கர்ணனாக நம்பி நாடகத்துடன் ஒன்றுவர். கணேசனுக்குத் தெரியும் பார்வையாளர் தன்னைக் கர்ணன் என்று நம்பவில்லை. கணேசனாகத்தான் கருகிறார்கள். ஆனால், அந்த உண்மையை மறந்து நம்புவதான ஒரு பொய்மையில்தான் தன் நடிப்பைப் பார்க் கிறார்கள் என்று இவ்விரு சாராருமே ஒரு பொய்யைத் தன் மனதிலிருந்து அகற்றி வைத்து விட்டு உண்மை என நம்புவதாகப் பாவனை செய்கிறார்கள். இந்தப் பொய்மை விளை யாட்டில் ஈடுபடுவதனால் தான் நடிகரும் நடிக்கிறார். பார்வையாளரும் பார்க்கிறார்கள்; இவ்வகையில் நாடகம் என்பது ஒரு பொய்மை விளையாட்டு. மேடையில் வீடு வருமா? மேடையில் மிருகங்கள் வருமா? மேடையில் கடைகள் வருமா? மேடை வீட்டு அறையாகுமா? மேக்கப் போட்டுக் கொண்டா மனிதர்கள் திரிவார்கள்? என்ற வினாக்களைப் பார்ப்போர் எழுப்புவதில்லை. எழுப்பினால் அப்பொய்மை உடைந்து விடும். இவ்வகையில் இது ஓர் பொய்மை விளையாட்டு. மனதை மகிழ வைக்க மனிதர் கண்டுபிடித்த ஓர் மயக்க விளையாட்டே நாடகக் கலை எனலாம்.

## 2. நாடகத்தில் பங்கு கொள்ள ஏன் விரும்புகின்றோம்?

நாடகத்தில் பங்க கொள்ளும் மக்களை அவர்கள் அதனாற் பெறும் மனோ உணர்வினை அடிப்படையாகக் கொண்டு நான்காக வகுக்கலாம்.

1. மிகச் சாதாரணமானவர்கள்
2. சாதாரணமானவர்கள்
3. உயர்ந்தவர்கள்
4. அதி உயர்ந்தவர்கள்

நாடகத்தில் நடிப்பதால் புகழ் கிடைக் கின்றது. நடிப்பவர் அல்லது அதில் ஈடுபடுபவர் பலரும் அறிந்தவராகி விடுகின்றனர். மற்றவர் மதிக்கும்போது, அவரைப் புகழும்போது நாடகக் கலைஞருடைய அகம் (Ego) திருப்தியடைகிறது. இச்சுய திருப்தியினை மாத்திரம் அடைபவர் களை நாம் மிகச் சாதாரணமானவர்கள் என அழைக்கலாம்.

நாடகத்தில் பங்கு கொள்கையில், நடிக் கையில், ஆடுகையில், பாடுகையில் பங்கு கொள்வோரின் மனத்தில் ஒரு புது உற்சாகமும், மகிழ்ச்சியும் நிரம்பி வழியும்.

உடல், உளத் தடைகள் நீங்கி ஒரு தளர் நிலை, தோன்றும். இதுபெரும் மன மகிழ்வை, உளத் திருப்தியைத் தோற்றுவிக்கும். மக்கள் பாராட்டினாலும், பாராட்டாவிட்டாலும் இக் கலையில் ஈடுபடுவதன் மூலம் ஒரு சுய திருப்தி கிடைக்கும். இச் சுயதிருப்தியைப் பெறுபவரை நாம் **சாதாரணமானவர்கள்** எனலாம்.

நாடகம் ஒரு கூட்டுக் கலையானமை யினால் நாடகத்தில் ஈடுபடும்போது மனிதரோடு மனிதர் நெருக்கமாக உறவாட முடிகிறது. மற்ற வர்களின் பிரச்சினைகளை அறியமுடிகிறது. பாத்திரங்களை ஏற்று நடிக்கும்போது அப்பாத்தி ரங்களின் குணாதியங்களை ஆராய்ந்து அறிந்து அப்பாத்திரமாக மாறுவதன் மூலம் பிறரின் உணர்வுகளை அவர்களின் பின்னணியில் வைத்து அறிய முடிகிறது. இதனால் மனிதர்களைப் புரிந்துகொள்ளும், சமூகத்தைப் புரிந்து கொள்ளும் பக்குவம் வாய்க்கிறது. இப்பக்குவம் பெறு வோரை நாம் **உயர் நிலையினர்** எனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பக்குவ நிலை பெற்றோர் தம்மை அறியும் நிலைக்குச் செல்வோர் சமூகத்தில் தனது இருப்பு, தான் யார்? என்று உள்முகமாகத் தேடத் தொடங்குவர். தன்னையே ஒரு ஆய்வுப் பொருளாக்கித் தன் சின்னத்தனங்களைக் கண்டு தானே சிரிக்கும் பக்குவம் பெறுவர். தம்மோடு தாமே தினமும் உரையாடித் தினமும் தன்னை மேம்படுத்த முயல்வர். இப்பயிற்சி அவர்களுக்கு உள்முகத் தேடலையும், ஆன்மிக உளத் திருப்தி களையும் தந்து பேரின்ப நிலைக்கு அவர்களை இட்டுச் செல்லும். இத்தகைய மனநிலையினை நாடகத்தால் பெறுவோரை நாம் **அதி உயர் நிலையினர்** எனலாம்.

இந்நான்கு நிலைகளும் அவர்களின் வயது, அனுபவம், முதிர்ச்சி, அறிவு என்பவற் றிற்குத் தக அமையும். வயதினை இவற்றுள் ஒன்றாகக் கணிக்குமிடத்து நாம் ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். சிறு வயதிலேயே முதிர்வு பெறுவோருமுண்டு; வயது அதிகம் சென்றும் முதிராரோரும் உண்டு. திருநாவுக்கரசர் எண்பது வயதினராயினும் சம்பந்தர் சிறுவயதிலேயே இறை அனுபூதியைப் பெற்றுவிட்டார். இளம் வயதினரான யேசு மிக முதிர்ந்த வயதினரான கோயிற் குருமாரை விட இறை அனுபவம் பெற்று முதிர்ச்சியுடையவரானார். நாடகத்தில் ஈடுபடுவோரிடம் இதனைக் காணலாம். மிக இளம் வயதினரான நாடக்காரர் முதிர்ந்த தத்துவ வாதிகளாக இருந்த செய்திகளுமுண்டு.

எனவே, நாடகம் மனிதரை ஞான நிலைக் கும் தன்னை அறியும் உன்னத நிலைக்கும் இட்டுச் செல்லும் ஒரு கலையாகும். நாடகத்தின் பிரதான சாராம்சம் இது.

### 3. நாடகம் பற்றிப் படிப்பதால், பயிற்சிப் பட்டறைகளில் ஈடுபடுவதால் அடையும் நன்மைகள் :

நடிகர்களுக்குத் தேவையானவை நெகிழ்ச்சி யான எதற்கும் இயைந்து கொடுக்கும் உடல், கற்பனை வளம் நிறைந்த மனம், கற்பனை வளம் நிறைந்த குரல் இம்மூன்றும் அனைத்து மனிதரிடமும் உண்டு. அவற்றை நாம் விருத்தி செய்வதில்லை. நாடகப் பயிற்சி இவற்றை விருத்தி செய்ய உதவுகிறது. நாடகப் பயிற்சியில் பெறும் உடற்பயிற்சி உடலை எதற்கும் வளைக்கும் பொருளாகிறது. நாடகப் பயிற்சியில் வழங்கப் படும் மனதை ஒரு நிலைப்படுத்தும் பயிற்சியும், விளையாட்டுக்களும், கூட்டுச் செய்கையும், திறமான மனதை உருவாக்குகின்றன. கற்பனை செய்ய அளிக்கப்படும் பயிற்சி, கற்பனை ஆற்றலைத் தூண்டுகிறது. இதனால், கற்பனை வளமும் – கண்டு பிடிப்புகளைச் செய்யக்கூடிய திறனும் ஏற்படுகிறது. பலருடனும் இணைந்து பணியாற்றும் பக்குவமும், மனவிரிவும் ஏற்படு கிறது. நாடகத்தில் பாத்திரம் தாங்கும்போது, அப்பாத்திரத்தின் குணாசயத்தினை அக்கு வேறாக்கி, ஆணிவேறாகப் பிய்த்துப் பிய்த்துப் பார்க்க முடிகிறது. இன்னொரு பாத்திரமாக வாழ்வதால் மற்றவர்களின் மன ஓட்டம் என்பன வற்றை அறிய முடிகிறது. இதனால் மனிதர் களின் குணாதிசயங்களை அறிய முடிகிறது. திருடும் திருடன் கூட அதற்கான வலுவான நியாயங்களை வைத்திருப்பான் என அறிய முடிகிறது. யேசுநாதர் கூறியது போல தன்னைப் போல, பிறரையும் நேசிக்கும் பக்குவ நிலை ஏற்படுகிறது.

நாடகப் படிப்பில் உலக நாடகங்கள், அவற்றின் உள்ளடக்கம், வடிவம், வரலாறு, பாணி என்பனவற்றைப் படிக்கையில் எம்மை எமது நாடகத்தை அவற்றுடன் ஒப்பிட்டு பெறக் கூடிவற்றைப் பெறுகிறோம். இதனால் பரந்த உலக ஞானம் வாய்க்கிறது. இவ்வகையில் பரந்த உலக ஞானம், பிறரையும் நம்மைப் போலக் கருதும் பண்பு என்பன வாய்க்கப் பெற்று, இப்படிப்பு நம்மை ஒருஞான நிலைக்கு இட்டுச் செல்கிறது.

ஞானம் என்பது யாது? அனைத்தையும் அனைவரையும் மனதாரச் சமமாக எண்ணும் நிலை, பீட்டர்புறாக் மகாபாரதம் தயாரித்தார். இந்திய இதிகாசத்தில் உலக மாந்தரின் குணாதிய சங்களைக் கொணர்ந்தார். இதற்குக் காரணம் அவர்நாடகப் படிப்பின் மூலம் பெற்ற மன விரிவும் அதனால் அடைந்த ஞான நிலையுமே.

### 4. பயிற்சியின் தன்மைகள் :

நாடகப் பயிற்சி நடத்துபவரைப் பொறுத்துப் பயிற்சியின் தன்மைகள் அமையும் நாடகப் படிப்பும் அவ்வாறே.

நாடகப் பயிற்சியில் நமக்குள் இருக்கும் திறன்கள் வளர்க்கப்படுகின்றன. உடல் இறுக் கத்திலிருந்தும், உள இறுக்கத்திலிருந்தும் விடுதலை செய்யப்படுகிறோம். உளம் விடுதலையானால் கற்பனைகள் நிறைய வரும். உடல் இயங்காத, உளம் விடுதலை பெறும்; நித்திரை நிலையில் தான் கனவுகளைக் காண்கிறோம். இவ்வகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் நித்திரையின்றியே நாடகப் பயிற்சி மூலம் இந்நிலை பெறலாம்.

இச் சமூகத்தால் இறுகியுள்ள நமது மனம் பயிற்சியின்போது வழிகாட்டும் ஆடுதல், பாடுதல், அசைதல், கத்துதல், தொடல், இணைதல், உருளுதல், பிணைதல் மூலம் தளர்நிலை அடைகிறது. நாடகப் பயிற்சி ஒரு பரவச நிலைக்கும் இன்னொரு நிலைக்கும் இட்டுச் செல்லும்.

இதன்மூலம் நமது ஆளுமை விருத்தி அடையும். பயமின்மை, வெளிப்படையாக எதையும் பேசும் தன்மை, தலைமை தாங்கும், பண்பு நிதானம், எதையும் பகுத்தாய்தல், புரிந்து கொள்ளுதல் என்ற தன்மைகள் எம்மை வந்தடைதலால்தான் இவ்வாளுமை விருத்தியுறுகிறது.

**5. பயிற்சி பெறுபவர்களின் தன்மைகள்:**

பயிற்சி நடத்துவோர் பல வகையினர். பயிற்சி நடத்துவோரின் ஆளுமைகட்குத் தம் பயிற்சியின் தன்மைகள் வேறுபடும்.

நாடகப் பயிற்சி, சில பயிற்சியாளர் ஆளுமை, மனவொடுக்கம், கற்பனை என்பனவற்றை முதன்மைப்படுத்தி திறமான மனிதனை உருவாக்க முயல்வர்.

சில பயிற்சியாளர்கள் நாடகப் பயிற்சியை ஒரு நோய் தீர்க்கும் முறையாக பயன்படுத்துவர். மேற்கு நாடுகளில் இம்முறை கையாளப்படுகிறது.

சில பயிற்சியாளர்கள் நாடகத்திற்கென்றே பயிற்சி நடத்துவோர் - இவர்கள் மனத்தின் அனைத்துத் திறன்களையும் ஒருமுகப்படுத்தி நாடகம் உருவாக்குவதற்கு அவற்றைப் பயன்படுத்தும் வகையில் கற்றுக் கொடுப்பர். திட்டமிடப்பட்ட நீண்ட காலப் பயிற்சிப் பட்டறைகள் இப்பணியை நிறைவேற்றும்.

பயிற்சி நடத்துவோரை இரு பிரிவினராக்கலாம்.

ஒரு பிரிவினர் தமக்குத் தெரிந்த அனைத்து வித்தைகளையும் பயிற்சியாளரிடம் காட்டி பயிற்சியாளரைப் பிரமிக்க வைப்பார்கள். இவர்கள் எல்லாவற்றையும் ஒரே நேரத்தில் பயிற்சி பெறுவோர்க்கு ஊட்டிவிட வேண்டுமென்றே எண்ணமுடையோர்.

இவர்களை மேலும் இரு பிரிவினராக வகுக்கலாம்.

ஒரு பிரிவினர் நாடகத்திலும் திறன்களைப் பயிற்றுவோர்.

இன்னொரு பிரிவினர் நாடகப் பயிற்சியே ஒரு நாடகமாக்கி அதனை நோய் தீர்க்கும் முறையாகப் பயன்படுத்துவோர், இப்பயிற்சிகள் பங்குபற்றுவோரின் நடத்தையில் பாரிய மாற்றங்களை ஏற்படுத்துகின்றன.

மனிதரோடு மனிதர் தொடர்பு கொள்ளும் கலையாக இது அமைந்திருப்பதனால், எத்தனை தொழில் நுட்பங்கள் வந்தாலும் இக்கலையை அழிக்க முடியாது. இது அழிவது போல தோன்றினும் அழியாத கலை. **தொழில்நுட்ப யுகத்திற்குள் இயந்திர மயமாகிப் போயுள்ள மனித இனத்தை மீட்டெடுக்கும் வல்லமை இக்கலைக்குத் தான் அதிகளவு உண்டு. மனித குலம் வாழும் வரை இக்கலையின் தேவை இருப்பதனால் இது என்றும் வாழும் கலையாகவும் இருக்கிறது.** +

## இதயம் திறந்து இவர்களை நினைக்கிறோம்...

பதிப்பித்தலுக்கான நேரமின்மை, காலதாமதம் போன்ற சில நெருக்கடிகளின் நிமித்தமாக...

+ மார்க் யசோதரன் (இலண்டன்)
+ பிரியாலயம் துரைஸ் (பாரீஸ்)
+ A. ஜேசுதாஸ் (பாரீஸ்)
+ N. அருணகிரிநாதன் (பாரீஸ்)
+ யாழ்தேவன் (பாரீஸ்)

ஆகியோரின் செய்திகள், வாழ்த்துகள் மற்றும் சில படைப்பாளிகளின் நாடகத் துறை சார்ந்த தகவல்கள் இம்மலரில் இடம்பெற முடியாமல் போனமைக்கு மலர்க்குழு தங்கள் இதயபூர்வமான மன்னிப்பைக் கோருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகக் கலை பற்றிய ஒரு புதிய நோக்கு...

– செ. கணேசலிங்கன்

## உடலுழைப்பும் கலையும்

**'உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்'** – எனப் பாரதி பாடியது மனித உடலுழைப் பையே முதன்மைப் படுத்தும்; இயற்கையிற் கிடைத்த பழம், கொட்டை, கிழங்குகளை உண்டு வாழ்ந்த காலம் கடந்த பின்னர் மனித இனம் நிலைபெற்று உடலுழைப்பான உற்பத்தி யில் ஈடுபட்டது. மரம், கல்லாலான கருவிகளைக் கடந்து, பித்தளை – இரும்பாலான கருவிகளைக் கண்டுபிடித்ததோடு உற்பத்தி வளர்ச்சியடைந்தது.

சமூக உற்பத்திக்கு அத்தியாவசியமாக உணவு, உடை, இருப்பிடம், நீர் மட்டுமல்லாது தற்காப்புக்கு வேண்டிய ஈட்டி, வேல், வாள், கேடயம் போன்ற கருவிகளையும் செம்பாலும் பின்னர் இரும்பாலும் உற்பத்திச் செய்தனர்.

இத்தகைய புறவயமான உற்பத்தி மட்டு மல்லாது, தமது உழைப்பை மேலும் மேம்படுத்து வதற்கான அகவிய பிரதிபலிப்பான கலைகளைப் படைப்பதிலும் ஈடுபட்டனர். புலன் உணர்வு களின் வெளிப்பாடாகவும், சுவைத்து மகிழ்வது மான இக்கலைகள் உடல் உழைப்பின் பிரதி பலிப்பாக இருப்பதைக் காணலாம். சிறப் பாகக் கூத்து, நாட்டியம், இசை நாடகம், நாடகம் முதலியவற்றைக் கூறலாம். இத்தகைய மரபு இங்கு மட்டுமல்ல, உலகெங்கும் காணலாம். நம் நாட்டு ஆடற்கலைகளான பரத நாட்டியம், கதகளி, குச்சிப்புடி போன்ற நடனங்கள் யாவற்றிலும் உடலுழைப்பின் பிரதிபலிப்பையே காண்கிறோம்.

தாம் வேட்டையாடிய சிங்கம், புலி, சிறுத்தையை வாழிடத்திற்குக் கொண்டு வந்ததும் மகிழ்ச்சியில் ஆரவாரித்து, தமது கருவி களையும் உயர்த்திக் கலைக்குழு சார்ந்த அனைவரும் தமது அறுவடையைச் சுற்றிவந்து இயல்பாகவே ஆடிப்பாடிப் புத்துணர்வு பெறுவர்.

தானிய அறுவடையின்போது, இத்தகைய இயல்பான உணர்ச்சியை ஆடல், பாடல் மூலமும் வெளிப்படுத்துவதையும் அறிவோம்.

பயிரின் அடுத்த விதைப்புக்கு, நடுகைக்கு இடைப்பட்ட காலத்திலேயே கூத்து, நாட்டியம், இசை நாடகங்கள் கிராமப்புறங்களில் நடை பெறுவதைக் காணலாம். இரவிரவாக இக் கூத்துக்கள், நாடகங்கள் நடைபெறும். கிராமத்துக் கோவில்களின் திருவிழாக்களை ஒட்டியும் நடைபெறுவதுண்டு.

இத்தகைய கூத்து, நாட்டியம், நாடகங்கள் இலாப நோக்குடன் நடத்தப்படுவதில்லை. குறைந்த செலவு, நடிப்பவரின் உறவினர், பார்வையாளர் தாமே முன்வந்து உதவுவதா லேயே நடைபெறும்.

இது இங்கு மட்டுமல்ல நில உற்பத்தியே முதன்மை பெற்றிருந்த உலக நாடுகள் அனைத் திலும் இயல்பாகவே நடந்து வந்தது. இதை நிலப்பிரபுத்துவ காலகட்டம் எனக் கூறுவர். நிலப்பிரபுக்கள், மன்னர்களும் இத்தகைய உடலுழைப்பு முதன்மை பெறும் கலைகளுக்கு ஆதரவு தந்து ஊக்கினர்.

## உடலுழைப்புடன் மூளை உழைப்பு

பல்லாயிரக் கணக்கான ஆண்டுகளாக உடலுழைப்பு முதன்மை பெற்றிருந்த காலகட்ட மனித சமூக வளர்ச்சியில், சில நூற்றாண்டு களுக்கு முன்னர் பெரியதோர் மாற்றம் ஏற்படத் தொடங்கியது. உற்பத்தியில் உடலுழைப்புடன் மூளை உழைப்பான விஞ்ஞானம், தொழில் நுட்பமும் இணைந்து கொண்டது. யந்திர உற்பத்தி மேம்பட, பண்ட உற்பத்தியும் பெருகத் தொடங்கியது. யந்திர உற்பத்தியில் ஈடுபட்ட வர்க்கத்தவர் முதன்மை பெற்று, நிலப்பிரபுக்கள் மன்னர்களுடைய ஆட்சி அதிகாரத்தை வீழ்த்தினர்.

அதனால், யந்திர உற்பத்தியில் மேன்மை பெற்ற முதலாளிகளுடன் உழைப்பில் வாழ்ந்த தொழிலாளரும் இந்தச் சமூகப் புரட்சியில் துணைபுரிந்ததனால் சலுகைகள் பல பெற்றபோதும், உரிமைகள் சிலவற்றையும் இழந்தனர். நிலத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திற்கு அடிமையாக உழைத்தவர் கூலிக்கு அடிமை யாயினர் என மார்க்சிய மொழியில் கூறுவர்.

உடலுழைப்பின் பிரதிபலிப்பாக எழுந்த கலைகளை முதலாளித்துவம் தன் சுயநல நோக்குடன் திசை திருப்பியதை இன்று எளிதில் காணலாம். அதனால், ஏற்பட்ட மாற்றங்களைப் மூன்று வகையாகப் பிரித்துப் பார்க்கலாம்.

1. உடலுழைப்பிற்கும் கலைகளுக்கும் சமூக உற்பத்தியான உணவு, உடை, இருப்பிடம், தண்ணீர் முதலியவற்றிற்கும் தொடர் பற்றுப் போனமை.
2. முதலாளித்துவத்தில் விற்பனைப் பண்ட மாக, இலாபம் மட்டுமே நோக்காக கலைகள் திசைதிருப்பப்பட்டமை.
3. மக்களுக்கும் பயன்படக்கூடியதாக, அவர்கள் வேண்டும் விரும்பும்படியான கலைகள் அல்லாது, முதலாளிகள் நமது இலாபமே நோக்காக, அவர்கள் விருப்பத் திற்கேற்ப கலைகள் மலிவுபடுத்தப்பட்டு மக்கள்மேல் திணிக்கப்படுவது.

**நாடகம்**

இங்குச் சிறப்பாக நாடகக் கலையை மட்டுமே சுருக்கமாக ஆராய்ந்து நோக்கலாம்.

நம் நாட்டில் வரலாறு அறிந்த காலத்தில் இருந்து கூத்து, இசை நாடகம், நாடகமாக வளர்ந்து வந்தள்ளது. மேடையில் இரத்தமும் சதையுமுள்ள நடிகர்களையும், அவர்கள் வேட மிட்டு நேரடியாகப் பேசுவதையும், பின்னிசை ஒலிக்க மேடையில் அசைவதையும், கதை மாந்தர்களுடன் பார்வையாளர் இரண்டறக் கலந்து பல்வேறு உணர்வலைகளில் மிதந்து ஆரவாரிப்பதையும் காணலாம். கேட்போர், பார்வையாளருடன் பாடுவோர், நடிப்போர் இரண்டறக்கலந்து தாமும் உடனடி மாற்றம் பெறுவது இந்தியக் கலைகளில் தனிச்சிறப்பு எனக் கலை விற்பன்னர் ஆனந்தம் குமாரசாமி கூறுவார்.

நாடகத்தில் செக்ஸ், பாலியல் காட்சி களைக் கொணர்ந்து கலையை மலிவுபடுத்து வதைக் காணமுடியாது. வன்முறைக் காட்சி களும் அளவாகவே இருக்கும். அவையும் குறியீட்டு முறையிலேயே காட்டப்படும்.

*(சேக்ஸ்பியரின் ஜூலியஸ் சீசர் நாடகத் தில் சீசர், புருட்டஸால் கத்தியால் குத்தப்படு வதும் 'புருட்டஸ் நீயுமா' என்ற சீசர் குரலும் நிமிடத்தில் முடிந்துவிடும். சிலப்பதிகார காவியத்தில் கோவலன் கொலை பற்றி வழக்காட வந்த கண்ணகி, 'தேரா மன்னா' என்று கூறும் வார்த்தையுடன் வன்முறைக் குரலாக மட்டும் ஒலிக்கும்.)*

முதலாளித்துவம் உடலுழைப்பைப் பிரதி, பலிக்கும் நாடக வடிவத்தை, மூளை உழைப்பான விஞ்ஞானம், தொழில் நுட்பத்துடன் இணைந்து நிழல்படமாக்கி பரந்து பட்ட விற்பனையைப் பண்டமாக்கி இலாபம் குவிக்கும் தொழிலாக்கி விட்டது.

மேலே கூறப்பட்ட மூன்று அம்சங்களை யும் முதலாளித்துவம் தரும் திரைப்படக் கலை யோடு இணைத்துப் பார்க்கலாம். அவை சமூக உற்பத்தியான உணவு, உடை, இருப்பிடம், நீர் முதலிய அடிப்படைத் தேவைகளைப் பிரதி பலிப்பதில்லை. இலாபமே முதல் நோக்கமாக திரைப்படங்கள் தயாரிக்கப்பட்டு, 'நேரக் கொல்லி'ப் பண்டமாக விற்கப்படுகிறது.

திரைப்படங்களில் செக்ஸும் வன்முறை யுமே முதன்மைப்படுவதை ஹோலிவூட் திரைப் படங்களிலிருந்து இந்தியப் படங்கள்வரை காணலாம். இந்த நேரக்கொல்லிப் படங்களுக்கு மொழி முக்கியமல்ல. அதனால் மொழி அறியாத, நன்கு தெரியாத மக்களுக்கும் விற்கமுடிகிறது. கிராமிய மக்களும் இருண்ட திரை அரங்குகளில் சுற்றாடலை மறந்து மலினப்படுத்தப்பட்ட இக்கலை வடிவத்தைப் பார்த்து ரசிப்பது வியப் பல்ல. வர்ணக் காட்சிகள், பாடல்கள், பின்னணி இசை, தமது கனவுக் காதல் நபரின் அழகு, நடிப்புக்களை அசையும் படங்களில் பார்த்துத் தம்மை மறந்து ரசிக்கின்றனர்; அதற்குப் பணம் தரத் தயாராகவும் உள்ளனர்.

**கலைகள் என்ற பெயர்களில், நீங்கள் எவற்றைப் பணம் கொடுத்துப் பார்க்க வேண்டும் என்பதை, மூலதனமும் அதன் வளர்ச்சிப் போக்கை விரும்புபவர்களுமே தீர்மானித்துத் திணிக்கின்றனர்; பார்வையாளரான பணம் தரும் நீங்களல்ல.**

**எனக்கு வாழ விருப்பம் — அதனால் வாழ்கிறேன் எனக்கு நடிக்க விருப்பம்— அதனால் நடிக்கிறேன்.**

**– அந்தனி குயீன்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விஞ்ஞானம், தொழில்நுட்பம் ஆகிய மூளை உழைப்பின் மூலம் ஒரே வேளையிலேயே இலட்சக்கணக்கானவர் பணம் கொடுத்துப் பார்க்கக் கூடியதாக திரைப்படங்களைத் தயாரித்துச் சந்தையில் விற்பனை செய்யத்தக்கதாக முதலாளித்துவம் வளர்ந்து வந்துள்ளது. திரைப் படங்களில் காட்டப்படும் சண்டைக் காட்சிகள் 10–12 வயதுச் சிறுவர்களை ஏமாற்றுவதுபோல அமைகின்றன. கதையின் வீர புருஷன் எத்தனை சண்டை போட்டாலும் அவனது தொப்பியோ கீழே விழுவதில்லை. உடைகள் பழுதடை வதில்லை. தூங்கி எழும் காதலியின் முகமும் உடையும் கசங்காது. காலையில் அணிந்தவை யாகவே இருப்பதைக் காணலாம். நாடகங் களில் இத்தனை ஏமாற்றுக் காட்சிகள் இருக்க மாட்டா. வேகமாகக் காட்சிகள் திரைப்படத்தில் மாறுவதால் மக்கள் பகுத்தறிவையே இழந்து விடுகின்றனர்.

இதற்கு மேலாக, எலெக்ட்ரோனிக் மீடியா வந்து சின்னத்திரைகளை வாய்ப்புள்ளவர் வீடெல்லாம் விற்று வருகிறது. அவை பண்ட விற்பனையை ஊக்கும் நவீன மூளை உழைப்புக் கருவியாக, புதிய நேரக் கொல்லிகளாக வளர்ந்து வந்துள்ளன. 'சோப் ஒப்பரா' எனும் பண்ட விளம்பரம் தாங்கியே தொடர் நாடகங்கள் புற்றீசல் போல வீட்டுக்குள்ளேயே 24 மணி நேரமும் வேண்டிய வேளையெல்லாம் 'நேரக் கொல்லி'யாகப் பயன்படுகின்றன. இவற்றுக் கும், சமூக உற்பத்திக்கும் எவ்விதத் தொடர்பு மின்றி மக்கள் உணர்வுகளை மழுங்கடிக் கின்றன. சென்னையிலிருந்து மட்டும் 6,7 சானல் களில் 48 'சோப் ஒப்பரா' தொடர் நாடகங்கள் காட்டப்படுகின்றன. சில வருடக் கணக்காகத் தொடர்கின்றன. பண்ட விற்பனை விளம்பரங் களே இவற்றின் தயாரிப்புக்கு உதவுகின்றன. பெரும்பாலானவற்றில் பெண்கள் சமையற் கட்டு, வரவேற்பறை, படுக்கை அறையிலேயே காணப்படுவர். கதைத் தலைவன் கம்பனியின் உரிமையாளராக மானேஜராக இருப்பான். அங்குப் பணியாற்றும் பெண்களில் ஒருத்தி காதலியாக வருவாள்.

**திரைப்படத்தில் வேகமாக மாறிவரும் காட்சிகள் பகுத்தறிவைப் பதம் பார்த்து விடுகின்றன எனக் கூறினேன். பகுத்தறிவற்ற காட்சிகளைப் பற்றிப் பார்வையாளரும் வினா எழுப்புவதில்லை.**

எம்மால் எளிதில் மாற்றிவிட முடியாத கலை இலக்கியச் சூழலில் நாமும் அகப்பட்டு விட்டோம். இத்தகைய நிலையிலும் நண்பர் அரியநாயகம் போன்றோர் ஆங்காங்கே இயக்க மாக நாடகங்களைத் தயாரித்து மேடையேற்றி வருவது வரவேற்கத்தக்கதே.

இங்கு இலாப நோக்கம் கிடையாது. சமூகத்திற்கு யதார்த்தமான கலையை நினைவூட்டு வதற்காக உழைப்பதைப் பகுத்தறிவுச் சிந்தனை கொண்டவர் பாராட்டவே செய்வர். உடலுழைப்பு – உற்பத்தி மூலம் பெற்ற கலை வாழ்வையும், மூளை உழைப்பு இணைந்து இலாப நோக்குடன் வளர்ந்துவரும் கலையையும் ஒப்பிட்டுப் பார்க்க முடியாது. இத்தகைய அயரா உழைப்பு நீடிக்க வேண்டும் என வாழ்த்துகிறேன். ✦



**1970–ல் யாழ் நகரசபை மண்டபத்தில் நடந்த 'யூலியஸ் சீசர்' நாடகத்திற்கு பிரதம விருந்தினர்களாக வந்திருந்த ஆர். பேரம்பலம், நீ. மரியசேவியர் அடிகளார் ஆகியோர்; வரவேற்புரை வழங்குபவர் நாடக நெறியாளர் எம். அரியநாயகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கிய மனங்கள் மறக்க முடியாத 'ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம்'



**- சு. கருணாநிதி**

இலக்கு + இயல் = இலக்கியம். இலக்கினை நோக்கி மனிதனை இயங்க வைப்பதற்கான இயல்தான் இலக்கியம் என்றாகிவந்திருக்கின்றது.

இலக்கியம் என்ற வகைக்குள் அடக்கப்பட்டிருக்கும் எல்லாக் கூறுகளும் மானுடனின் வாழ்நெறி, காப்பு, உரிமை, விடுதலை உளவியல் விருத்தி, அறியாமையிருள் எல்லாவற்றினையும் சீர் செய்ய விழைபவையே. அவை இன, மொழி, பிரதேச வேறுபாடுகளால் வாழ்நிலை சூழலுக்கேற்ப வடிவங்கள், வழங்கல்கள் மாற்றமடைகின்றன.

எமது **ஐரோப்பிய தமிழ்ச் சமூகத்தினரிடையே எழும் இலக்கியப் படைப்புகளை 'புலம்பெயர்ந்தோர்' இலக்கியம் என்றழைப்பதை வழக்கப்படுத்திக் கொள்ளல் சாலப் பொருந்தும்.**

புலம்பெயர்ந்தோர் இலக்கியத்தின் இன்றைய வளர்ச்சி; அதாவது, பல்கிப் பரவி பெருகிவரும் போக்குக்கு மூல இயக்கமாய் இருந்தது ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் என்பதைப் பலரும் அறிந்த ஒன்றே. புலம்பெயர்ந்தோரிடையே புதிய எழுத்தாளர்களை உருவாக்கல், எழுத்தாளர்களை அறிமுகப்படுத்தல், படைப்பாக்கங்களை வாசகரிடத்தில் கொண்டு செல்லல், இலக்கிய ஆர்வலர்களை இணைத்தல், மொழி பெயர்த்தல் போன்ற திட்டங்களை முன்வைத்து எம். அரியநாயகம் அவர்களால் 1986ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. இது; சுவிஸ், யேர்மனி, இங்கிலாந்து போன்ற நாடுகளில் கிளைகள் பரப்பி பலரும் அறியக் கூடிய உருப்பட்டு வருங்கால், மாதிரி காழ்ப்புணர்வுடனான சிலரின் கன்னாபின்னா என்ற கருத்துப் பரிமாறல் - ''மற்றவர்களின் கதைகளை விற்க முயலுகிறீர்களா?'' என்ற கேள்விகள்; இவற்றில் ஏற்பட்ட மனச்சலிப்புகள்; பதிப்பித்த நூல்களை மக்களிடம் எடுத்துச் செல்வதில் ஏற்பட்ட சிரமங்கள்; இவற்றால் அதன் வளர்ச்சியில் தளர்ச்சி ஏற்பட்டாலும், 1990களில் ஐரோப்பிய நாடுகளில் நவீன வசதிகளுடனான ஊடக வளர்ச்சிகள் எழுத முனைவோருக்குக் களம் அமைத்துக் கொடுக்கக் காத்திருந்தன. இதன் **ஐ.த.எ.ஒ.** தோற்றுவித்ததற்கான தேவை குறைந்து போனதைக் கருத்தில் கொண்டு தன் சேவையை நிறுத்திக் கொண்டதென்றே கூறலாம்.

அதே வேளை இவ்வொன்றியம் அமைக்கப்பட்ட காலம் நம்மிடையே தகுந்த விசா, வேலை, குடும்பத் தேவைகள், நெருக்கடிகள், அழுத்தங்கள், துண்டைக் காணோம் துணியைக் காணோம் என்றிருந்த காலம் ஒன்றியத்தின் தியாகங்களின் பெறுமானங்கள் சரியாக உணரப்படவில்லை என்றே எண்ணத் தோன்றுகிறது. நாங்கள் பொதுவாக தியாகங்களை மதிப்பதில்லை. தாத்தாவின் சொத்து பேரன்மார்களை வாழ வைத்துக்கொண்டிருப்பதால் தாத்தாவின் பிணத்தை வீட்டில் வைத்துப் பூசிக்க வேண்டும் என்று சொல்லவில்லை. ஏணியாய் ஏறி உயரத்தே சென்றபின் ஏணியையும் மேலே கொண்டு செல்லவேண்டுமென்பதல்ல; நினைந்து கொள்ளவும், அறிந்து கொள்ளவும் வேண்டுமென்பதையே இங்குச் சொல்ல வருகிறேன். அந்தக் காலத்தில் இதன் பணி முக்கியமானதும், பெருமதிப்பிற்குரியதுமாகும்.

இன்று வீடுகளில் அரிக்கன், பிட்டுக் குழல், அம்மி, கிரைண்டர் போல - கம்ப்யூட்டர், இண்டர்நெட், ஈ-மெயில் என நவீன தொடர்பு சாதனங்கள் மலிவாக, விரைவாக மனிதத் தேவைகளை இலக்குவாக்கியிருக்கின்றது.

... L'Union Européenne des Ecrivains Tamouls qui a été fondée par M.Ariyanayagam et les publications des recueils de nouvelles et de poèmes sorties par cette Union ont été responsables pour l'épanouissement des compétences littéraires chez les émigrés tamouls ...

**- S.Karunanithy**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று இலக்கிய ஆர்வலர்களும் சமூக அக்கரையாளர்களும் ஆங்காங்கு கையெழுத்துப் பிரதிகளாகச் சஞ்சிகைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கையில் **ஐ.த.எ.ஒன்றியமே** புத்தங் களைத் தமிழகத்தில் அச்சடித்து எமது 'புத்தகம்' என்ற வடிவப் பிரதிமையையொத்து வெளியிட்டுக் கொண்டிருந்தது.

**1986ஆம் ஆண்டு ஒன்றியத்தின் முதல் வெளியீடான 'மண்ணைத் தேடும் மனங்கள்' சிறுகதைத் தொகுப்பு. இதில் கோவை – றைதன், செகுணசிங்கம், மதனநூபன், பார்த்தீபன், செல்வம், மலர், மாலன், அ. திருச்செல்வம், வசந்தி, பிரேமி ஆகியோரின் சிறுகதைகள் உள்ளடங்கியிருந்தன. 1987இல் 'தூரத்து விடிவெள்ளி' கவிதைத் தொகுப்பில்,** *(Le matin - victor Hugo 1822)* – **காலைப் பொழுது.** *(Les Heureux - Adrian Mial-lev)* – **எல்லோருக்கும் சந்தேம்.** *(La Rose Qu en endort dons un Tablier - George Schehadel)* – **அடைக்கப் பட்டிருந்த ரோசா.**

*(Le couchercger Du Soleil - Gerard Nerval)* – சூரிய அஸ்தமனம். *(Ve Ndanges - Georges Rall)* – திராட்சை அறுவடை ஆகிய மொழி மாற்றுக் கவிதைகளுடன், ஸீனி லோகன் – ஜெர்மனி, என்.யூ. மூர்த்தி – சுவீஸ், குகதாசன்–மே. ஜெர்மனி, எஸ். நிதி – ஜெர்மனி, அ. திருச்செல்வம் – ஜெர்மனி, ஜெ. நிக்ஷன் – ஜெர்மனி, பாரதிதாசன் – பாரீஸ், இரத்தின ரூபதாசன் – பாரீஸ், ஹெலன் ரோஸி – பாரீஸ், ஹெலன் ரொசித்தா – பாரீஸ், மலர் – இத்தாலி, வண்ணைத் தெய்வம் – பாரீஸ், இ. வசந்தி – பாரீஸ், டில்லிரராணி சுப்பிரமணியம் – பாரீஸ், மதன் – பாரீஸ் ஆகியோரின் கவிதைகளும் வெளியாயின.

1988இல் 'நம்பிக்கை நாற்றுகள்' சிறுகதைத் தொகுப்பு. இதில் எஸ். அகஸ்த்தியர், வாசுதேவன், கஜன், மனோ, அருந்ததி, தளபதி, குருநகர் ஜீவி, வசந்தி, மதன், ஜெய் வாசுதேவனின் பிரெஞ்சு மொழிபெயர்ப்புக் கதைகள் இரண்டு என்பன தொகுக்கப்பட்டிருந்தன.

1989இல் சுவிஸ் நாட்டில் வெளியீடு செய்த 'தேசம் தாண்டிய நதிகள்' சிறுகதைத் தொகுப்பு. ஜெயா – சிறி. கோவை றைதன், நொய்ஸ் சிவபாலன், சு. கருணாநிதி, சாரணியன், வசந்தி, நல்லைக்கண்ணன், ந. சுசீந்திரன், சி.உதயகுமார், கே.டி. சுபாஷ் – சிறி ஆகியோரின் கதைகளைத் தாங்கி வந்திருந்தன.

நான்கு தொகுப்புகளிலும் ஐரோப்பா எங்கணும் பரந்து வாழும் எழுத்தாளர்களின் ஆக்கங்களே இடம்பெற்றிருக்கின்றன. எல்லா விதக் கருத்துக்களும் களம்கொண்டிருக்கின்றன.

பிரிவாற்றாமை, நெருக்குவாரம், ஆணாதிக்கம், சீதனம், சாதீயம், புலம்பெயர் அவலம், ஏஜன்சிக்காரர்களின் கொடுமை, வதை, புதிய சூழலின் அசௌகரியங்கள், வேலையிடத்துத் துன்பங்கள், விடுதலையுணர்வு, இலங்கையில் சாதீயத்தால் தடைப்பட்ட விடயங்கள் இங்குச் சாத்தியப்படுத்தப்பட்டிருப்பதும், பெண்கள் தம் ஒழுங்குமுறைகளைப் பற்றி தன்னுணர் வடைதல், உயிரிழப்பு, காதல், கலியாணம் என்ற கருவூலங்கள் கதைக்களம் கொண்டிருந்தன. க. வாசுதேவனினதும், ந. சுசீந்திரனினதும் மொழிபெயர்ப்புக் கதைகளும் அறிமுகமாகி யிருந்தன. இன்று அதிமுற்போக்காளர் என்று சொல்லிக்கொண்டு ஓரினச்சேர்க்கை பற்றி எழுதியும் விவாதித்துக் கொண்டுமிருக் கின்றோம். இந்தக் கருத்துப்பட்ட ஒரு சிறுகதை கே.டி. சுபாஷின் 'பெண்வாடை வீசாத பிரமச்சாரிகள்' என்ற கதை; 'தேசம் தாண்டிய



**1989இல் 'சுவீஸ்'ல் நடைபெற்றதேசம் தாண்டிய நதிகள் சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் சீறி, சுவிஸ் கிளை தலைவர் (ஐ.த.எ.ஒன்றியம்) மற்றும் திருக்குறளை ஜேர்மன் மொழியில் மொழிபெயர்த்த பேராசிரியருடன் எம். அரியநாயகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியில்' வெளிவந்திருந்தது. அதை அன்று பிழையென விமரிசித்துமிருந்தனர்.

பணத்தைத் தவிர வேறெதையும் தேடிக் கொள்ள, ஆர்வமற்று, நாம் வாசிப்பது கூடப் பிடிக்காதவர்களாய் இருக்கையில், அன்றிலிருந்து இன்றுவரைக்கும் தமிழ் வெளியீடுகளைச் சந்தைப்படுத்துதல் என்பது கவலைக்கிடமான நிலையே. முடிந்தால் 'ஓசி'யில் பேப்பர் வாசிப்போம்; தொடர்நாடகம் பார்ப்போம்; இலவசம் என்றால் தலைவலியாயினும் வாங்கிவிடுவோம் இப்படியாய் நாமிருப்பது தொடர்ந்து கொண்டேயிருக்கின்றது.

அன்றைய நாட்களில் எம்மிடையே ஒருவகை இலக்கிய எழுச்சி, ஒரு வேகம் காணப்பட்டது. அந்த எழுச்சி எழுந்து எங்கேயோ போய் முட்டி நிற்குமென பலராலும் அனுமானிக்கப்பட்டது. புலம்பெயர்ந்த ஈழத்தமிழர்களிடத்திலிருந்துதான் உலக தரத்திற்குப் பேசப்படும் தமிழ் இலக்கியங்கள் வெளிவரும் என்றும் ஆருடம் சொன்னார்கள்; ஆனால் இன்றைய இலக்கியச் சூழல் ஒருவகை மயக்க நிலையிலிருக்கின்றது. படைப்பைப் போலவே படைப்பாளியின் நடைமுறைவாழ்வு இருக்க வேண்டுமென்றும், இரண்டும் வேறு; முரண்பாடுகள் இடைவெளிகள் இருக்கும்; இருக்காது என்ற வாதப் பிரதிவாதங்களால் அவரவர் சேர்ந்து விமர்சிப்பதும், வசை பாடலும் பகைமை, குரோதம், புலிகள் ஆதரவு, எதிர்ப்பு, விடுதலை ஆதரவு எனப் பலவாய், குழுவாய்ப் பிரிந்து தனித்தனிக் கோட்பாடு கொள்கைகளை வைத்துக் கொண்டு எதிரியின் எதிரியை நண்பனாக்கித் தம்பழி தீர்தல்தம்பணியெனவும் பேய்களுடன் கூடலும், கூட்டலும் பிரித்தலும் பிரிதலுமாய் படைப்பாளிகள் குழம்பி மயங்கிக் கிடக்கிறார்கள்.

முற்போக்கு பிற்போக்கு நற்போக்கு என்ற போக்குகளுடன், 'சில போக்குக் காட்டிகளும்' யதார்த்தவாதம் தன்னம்பிக்கையில்லாத படைப்பாளிகள் தயங்கி மயங்கிக் கிடக்கின்றார்கள். நேர்மையான விமர்சனங்களும், ஊக்குவிப்புகளுமில்லாமையும் தடையாயிருந்தாலும், ஏறி மிதிக்க முனைவதுமாக இன்றைய இலக்கியச் சூழல் காணப்படுகிறது.

முன்பு பலரும் அனுமானித்தபடி உலகத் தரத்திற்கு வரும் படைப்புகள் தோன்றுவதற்குச் சாத்தியமான எல்லா வளங்களும் நம்மிடையே தானுண்டு. அடக்குமுறை ஆட்சி, விடுதலைப் போராட்டம், புலம் பெயர்வு, சித்திர வதைகள், முழுவதும் ஒவ்வாத சூழலில் வாழ முயலல், இவையெல்லாவற்றையும் நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இருந்தும் உருப்படியான படைப்புகள் இன்னும் வெளிவரவில்லையென்பது ஒத்துக்கொள்ள வேண்டிய உண்மையே. புலம் பெயர்ந்தோர் இலக்கியங்கள் புலம்பல் இலக்கியமென்றும் நகைக்கப்படுகிறது. புலம் பெயர்ந்தவர்களிடையே முதலில் புலம்பல்தான் கேட்கும். அழுது புலம்பி ஓங்கி உரத்து அலறுவதும் அறியப்படுத்தல்தான். அறிய அவர்களிடத்திலும் ஏதோ இருக்கின்றன; இதிகாசங்களில் புலம்பல்கள் காவியமாக்கப்பட்டிருக்கின்றன. வேதாகமத்தில் புலம்பலுக்கு பல அத்தியாயங்களிருக்கின்றன. புலம்பல்களும் இலக்கியம்தான்.

இன்று புலம்பெயர்ந்தோரிடையே இலக்கியக் களங்கள் வியாபித்துக் கொண்டும் விமர்சன ரீதியாக மெருகேற்றவும், மூடி மறைக்கவும் இல்லாதொழிக்கவும், உருவாக்கவும், கூடிய சக்திகளாய் பரிணமிப்பதற்கு எம். அரிய நாயகம் அவர்களால் தொடக்கி வைக்கப்பட்ட ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியம் பெரும் பங்களிப்பைச் செய்துள்ளது. ●



1987இல் பாரீஸ் மாநகரில் ஐ.த.எ. ஒன்றியத்தால் வெளியிடப்பட்ட 'தூரத்து விடிவெள்ளி' கவிதை நூல் தொகுப்பை எழுத்தாளர்கள் எஸ். அகத்தியரிடமிருந்து பெறுபவர் 'பிரியாலயம் துரைஸ்'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# மேற்கை நோக்கிய கிழக்குப் பறவைகள்...

— மலர், ரோம்

"ம்!... ங்!..." பெரும் இரைச்சலுடன் விமானம் *கட்டு நாயாகா* சர்வதேச விமான நிலையத்தை விட்டுக் கிளம்பியது.

"ஆண்டவனே! நீதான் துணை, ஏதோ என்னையும் எங்காவது கொண்டு போய் புது வாழ்வு தாயேன்." புதுத் தெம்புடன் விமான சீட்டின் பின்பக்கமாக சாய்ந்தாள் சுபா.

'அந்தப் பக்கத்தில் மாமா என்னை நிச்சயம் கூட்டிப் போக வருவார். *யூகோஸ்லவியா* வாம் 'வீசா' இல்லாமல் அங்கும் என்னென்ன காத்திருக்கோ?' பல நினைவுகள் அலைபோல் மிதன் தன் அவள் நெஞ்சில்.

ஒரு கணம் கண்ணை மூடித் திறப்பதற்குள்... கொட்டும் பனியில்விமானம் மொஸ்கோவில். எல்லாம் வெள்ளை மயம். குளிர் ஒருபுறம்... Transit Flight க்காக Su 151இல் கேட்கும் எவருக்கும் *"பெல்கிறேட்!"* என்று விசாரித்தபடியே இன்னொரு விமானத்துள் நுழைந்தாள். விமானத்துள்... எல்லாம் வெள்ளை முகம்... நம்மவர் ஒருவருமே இல்லையே! மாமா வருவாரா?...

அன்று சனிக்கிழமை. காலை 11 மணிக்கெல்லாம் விமானம் பெல்கிறேட்டில் இறங்கியது. கண்ணாடிக் கூடுகளுக்கூடாக எட்டி எட்டிப் பார்த்தவள்... 'மாமா...! இவர் எங்கே நிற்கிறாரோ?...' பயம் ஒரு புறம், ஏமாற்றம் ஒருபுறம். 'பரவாயில்லை! வருவது வரட்டும்.' பலரும் ஏறிய ஒரு நீல பஸ்ஸில் தானும் ஒருத்தியாக நகருக்குள் வந்தாள். தன்னுடன்பயணம் செய்த நாலைந்து வெள்ளையர்களுக்குப் பின்னால் தானும் ஒருத்தியெனக் காட்டிக்கொண்டு, *ஹொட்டல்* ஒன்றில் தஞ்சம் புகுந்தாள்.

'மாமாவிற்கு என்ன நடந்தது? ஒருவேளை என் தந்தி கிடைக்கவில்லையோ?' 'நீ வந்தால் வருவேன் என்றவருக்கு, வரும் நாள் தெரியாவிட்டால் என்னதான் செய்வார்? போன் பண்ணவும்... மாமாவின் ரூமுக்குத்தான் போன் நம்பரும் இல்லையே!'

மூன்று நாட்களாக ஒருவர் தொடர்புமின்றி ஹொட்டலுக்குள்ளேயே தன்னை அடைத்தாள் சுபா!

நான்காம் நாள்... தபால் கந்தோர் தேடி ரோட்டிற்கு இறங்கியவளுக்கு... 'இவர்களைப் பார்த்தால் யாழ்ப்பாணத்தவர் போலல்லவோ... இவர்களிடம் ஏதாவது?...'

"என்ன மிஸ்! இங்கு இந்த... ரோட்டில்?"... இது இந்துவின் குரல்.

"ரோமிற்குப் போகவென்று இங்கு வந்தேன்."

"ரோமிற்கா?... இங்கிருந்தா...?" வியப்புடன் இணைந்த திகைப்புச் சிரிப்புடன் இந்து மீண்டும் தொடர்ந்தான். "மாமா ரத்தினம் இங்கு வந்து கூட்டிப் போவதாக சொன்னார். தந்தியும் அனுப்பினேன். வந்து மூன்று நாட்கள்... மாமாவிடமிருந்து ஒரு செய்தியும் இல்லைங்க"

"தனியாகவா வந்தீங்க...?"

"ஆமாம் தனியேதான்...! ரத்தினமெண்டு? அவர் யாழ்ப்பாணம் கச்சேரியில் வேலை பார்க்கும் இராமலிங்கத்தின் தம்பி... அவரை உங்களுக்குத் தெரியுமா?..."

"ஓ! அட... அந்தச் சபாரத்தினமோ!... றோமில் டெனிஸ் கிளப்பில் வேலை செய்கிறவரோ?"

"ஆமாம் அவரை எப்படி உங்களுக்கு...?"

"றோமில் அடிக்கடி அவரை நான் பார்த்திருக்கிறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அப்போது நீங்க றோமிலிருந்து இங்கு ஏன் வந்தீங்க..."

"இங்கு அலுவலாக வந்தோம். இரு நாட்களில் திரும்பிப் போக இருக்கிறோம்."

'றோம் அப்படிக்கிட்டவா?' எனத் தனக்குள் கேட்டவளாய்... "அப்ப... என்னங்க மாமா ரத்தினத்தை நீங்கள் சந்திக்க நேர்ந்தால்..."

"மிஸ்! உங்களுக்கு இஷ்டமென்றால் உங்களை நாங்கள் கூட்டிப் போகிறோம்... நேரடியாகப் போக முடியாது... இடங்கள் மாறி ரெயில்கள் மாறிமாறி எடுத்துத் தான் போகவேண்டும்... வெளிநாடு என்று வந்தால் கஷ்டங்கள் அனுபவிக்க ரெடியாக இருக்க வேண்டும்... இல்லையா?"



"அது சரி இங்கு எங்கே இருக்கிறீங்க..."

அதோ அந்தக் ஹொட்டலில்... இது தானுங்க ரூம் நம்பர்.

"சரி இன்று பின்னேரம் உங்களை, வந்து சந்திக்கிறோம்! ம்... சரியுங்க... ரொம்ப தாங்ஸ்"

"இவர்கள் எப்படிப்பட்டவர்களோ? யாரோ? எவரோ என்ன செய்து எங்கே கொண்டு போகிறார்களோ?... ஐயோ தெய்வமே! என்ன என் தலைவிதி..."

அன்று மாலை, இவர்கள் அவளைச் சந்தித்தனர். இந்துவிற்கோ அவளை எப்படியாவது றோமிற்குக் கொண்டு போய்ச் சேர்க்க வேணும்போல... அவள் மேல் இவனுக்கு ஏன் இவ்வளவு அனுதாபம்... அக்கறை?... ஒருவேளை பெண் என்பதற்காக தன் இலக்கை சாதித்துவிடலாமோ என்னவோ, தன் சிநேகிதன் ஒருவர் மூலம் றோமில் உள்ள ரத்தினத்திற்கு தான் சுபாவைப் பெல்கி றேட்டில் இருந்து கூட்டி வரவிருப்பதாக அதே இரவிலேயே போன் பண்ணினான்.

இரத்தினம் விழித்தார்! 'இவள் என்ன இப்படி அங்கே... ஒரு அறிவித்தலும் இல்லாமல் தனியே நின்று கொண்டு... கடவுளே அவளுக்கு ஒன்றும் நடந்துவிடக் கூடாது. ஏதோ வந்து சேர்ந்தால் போதும்... பாவம் தாய் தந்தையற்றவள். தனக்கு எதிர்காலம் தேடவே வெளிநாடு வெளிநாடு என்று ஆசைப்பட்டவள்... இங்கு வந்தும் எம்மவர் செய்யும் வேலைகளை விரும்புவாளோ?... என்னவோ?'

சுபாவைக் கூட்டி வருவதற்கான ஒழுங்குகளைச் செய்துவிட்டு இந்து அவளைச் சந்திப்பதற்காக ஹோட்டலிற்குப் போனான். அந்த நாளில் அவன் தன்னைத் தனியே பார்க்க வந்தது பயமாகவும், மர்மமாகவும் இருந்தது.

"சுபா! உங்கள் அதிஷ்டமோ என்னவோ உங்களுக்கு றோமிற்குப் போக *Visa* அதாவது *Transit visa* தந்திருக்கிறார்கள். சுவிற்சர்லண்ட் போகிற வழியில் இறங்கி றோமிற்குத் திரும்ப றெயின் எடுக்க வேண்டும்.


"இந்த இடங்களை எனக்கென்ன தெரியும்... உங்களைப் பார்த்தால் யூறோப் எல்லாம் தெரிந்தவர் மாதிரி இருக்கு!... ஏதோ உங்களைச் சந்தித்தது என் பாக்கியமே!"

"அது சரி இன்று பின்னேரமே புறப்பட றெயில் ரிக்கற் வாங்கிவிட்டேன்."

"ஐயய்யோ! என்ன? என்னிடம் பணம் ஒண்டும் வாங்காமல்..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




''முதலில் றோமிற்குப் போகிற அலுவலைப் பார்ப்போமே! அப்புறம் அடுத்ததையெல்லாம் உங்க மாமாவுடன் பேசிக் கொள்ளுங்க... இப்பவே நீங்க என் கூட வரணும். வழிப்பயணத்திற்கான சாமான்களை வாங்கிடலாம்.''

அப்படி என்ன வாங்கணும். என்னிடம் எல்லாம் இருக்கே. றோமிற்குப் போன பின் வாங்கலாம்.''

''இல்லை சுபா! வழியில் கடுங்குளிராக இருக்கும். உமக்குக் குளிர்போர்வை ஒன்று அவசியம் தேவை. இவைகள் இல்லாம வந்து நான் பட்ட கஷ்டம்... எனக்குத் தான் தெரியும். காசைப்பற்றி யோசிக்காதீங்க... எங்கேயாவது போய், நாலு பணம் சேர்த்து நம்முடைய ஆட்கள் சந்தோசமாக இருந்தால் அது நமக்கு மகிழ்ச்சிதானே, இல்லையா?''

''சரி! எப்படியெண்டாலும் செய்யுங்க! நீங்கதான் கூட்டிப் போகிறவராச்சே''... இருவரும் புறப்பட்டனர். கடை ஒன்றில் நீண்ட போர்வை ஒன்று அவனால் அவளிற்குத் தெரியப்பட்டது.

"ஏனுங்க! இவ்வளவு நீண்ட போர்வை!"

''உங்களுக்கு ஒன்றும் விளங்காது சுபா. காலை மூடிப் போர்வை இருந்தால்தான் குளிரை ஒருவாறு சமாளிக்கலாம்.''

''ஏதோ நீங்கள் தான் எல்லாம் அனுபவிச்சவராச்சே!''

தன் நம்பிக்கை முழுவதையும் அவனுக்கே அர்ப்பணித்தவளாக ஹொட்டல் திரும்பினாள் சுபா. இந்துவிற்கோ அவள் தன்னை முழுவதும் நம்பிவிட்டதில் ஒரு திருப்தியும், மகிழ்ச்சியும்.

மாலை வந்தது. தன் சிறிய சூட்கேசுடன் சுபா, இந்துவின் அறைக்குப் போனாள். இரவு 10 மணிதான் றெயின் புறப்படும் நேரம். அவன் கொடுத்த விலாசத்தின்படி எப்படியோ அவன் 'ரூமை' அவள் ஏழு மணிக்கெல்லாம் அடைந்து விட்டாள். அங்கே அவனுடன் அவள் முதல் நாளில் பார்த்த இருவரும், இன்னும் ஐந்து பேரும் இருந்தனர். அவளின் வருகையினால் அஞ்சியவர்கள்போல ஏனோ அவர்கள் ஒவ்வொருவராக வெளியே நகர்ந்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"சுபா, உங்கள் Bagல் என்னுடைய சாமான்கள் இரண்டொன்று வைக்கலாமா?"

"தாராளமாக! உங்களுக்குச் செய்யாத உதவி வேறு யாருக்கு?..."

"ரொம்ப தாங்ஸ்! இருந்தாலும்! அவ்வளவு பாரமுமல்ல. உங்களுக்குப் பாரமாகவே இருக்காது."

"பரவாயில்லை!"

அந்தப் பார்சல்களைப் பற்றிய இரண்டாவது நினைவுகள் எதுவுமின்றி, ஏதோ தன்னுடையவை தொலைந்தாலும் அவை இரண்டும் பாதுகாக்கப்பட வேண்டியவை என்ற ஆர்வத்தில் பெட்டியினுள் அடிப்பக்கத்திலேயே வைத்தாள்.

"சுபா, சொல்கிறேன் என்று குறை நினைக்கமாட்டீர்கள், இல்லையா? நீங்கள் ஏன் சாரியில் வரக்கூடாது."

"சாரி... ஏனுங்க? இரவுப்பயணம் கஷ்டமாக இருக்கும்."

"இருந்தும் சாரிக்கு ஒரு தனி மதிப்புண்டு. சாரியைக் கண்டால் ரொம்ப மரியாதையாகப் பழகுவார்கள்."

"அதுக்கென்ன உடுக்கிறேனே."

றெயிலுக்கு இன்னும் அரை மணித்தியாலாங்கள். "சுபா நான் தந்த பார்சல்களைப் பற்றி உங்களிடம் கொஞ்சம் சொல்ல வேண்டும்."

"ம்... சொல்லுங்க..."

"அவை இரண்டும்... சொல்லப் போனால் விலை மதிப்புக் கொண்டவை. சாதாரணமாகப் பெட்டிகளில் கொண்டு போக மாட்டோம். இலேசாகத் திருட்டுப் போகக் கூடியவை. அநேகமாக நான் அவைகளை என் காலில் வைத்து, பிளாஸ்டர் பண்ணிக் கொண்டு தான் போவேன். ஏனென்றால் இந்தப் பொருட்களை வைத்திருப்பதற்கு அவ்வளவு அனுமதியில்லை. எனவேதான், காலில் வைப்பது பாதுகாப்புங்கூட. ஆண்களை இலேசாகச் சோதனை போடுவார்கள். பெண்களை அவ்வளவு பரவாய் பண்ணுவதில்லை. உங்களுக்கு இஷ்டமென்றால், அதுவும் கஷ்டமில்லையென்றால்... உங்க காலிலே வைத்துப் பிளாஸ்டர் பண்ணி விடுகிறேன். இந்த உதவியை மட்டும் நீங்க செய்திட்டால்...!


RESTAURANT
**HARIHARAN**
MELINA

SPECIALITE
SRI LANKAISE ET INDIEN

**சுவைமிக்க இலங்கை, இந்திய உணவுகளுக்கு பாரிஸ் நகரில் ஓர் உன்னத உணவகம்!**



**S. MAHENDRAN**
20, Rue Perdonnet
75010 Paris
Tel / Fax : 01 42 09 06 30
M°: Gare du Nord La Chapelle
OUVERT TOUS LES JOURS




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகவிழா சிறப்புற நடைபெற்று
தமிழ்நாடகம் வளர்ச்சி பெற
வாழ்த்துகிறோம்...



**குறைந்த கட்டணத்தில்
நிறைவான நேரத்தில்
உலகெங்கும் உறவுகளோடு
உறவாடி மகிழ...**



# NICE TELECOM

24, Rue Perdonnet
75010 Paris
M° La Chapelle
**Tel : 01 4037 6368**

வேடன் வலையில் அகப்பட்டவள் போல சிறிது தயங்கினாள். இருந்தும் அவனுடன்தானே பயணம். அது என்ன பொருள், எப்படிப்பட்டவை என்பது எல்லாம் கேட்டறியப் பக்குவப்படாத அந்தப் பெண் நெஞ்சம், அதற்கும் "ஆம்" என்று தலையசைத்தது.

ரெயில் பயணம் தொடர்ந்தது. முதலாவது உறங்கல் பெட்டியில் அவர்கள் ஆசனம்... 'யாரோ?... எப்படிப் பட்டவரோ?... எங்கே கொண்டு போவாரோ?... எப்படி முடியுமோ?...' இவையெல்லாம் அவளுக்கு விடியவிடிய எழுந்த விசாலமான கேள்விகள். எழுந்த நினைவுகளை ஓடுகின்ற வண்டியில் ஒழித்து வைத்தவளாய், மறுபுறம் புரண்ட போது... விடியற்காலை 4.05 மணியிருக்கும். கால்கள் இலேசாக வலிக்கத் தொடங்கின. 'பிளாஸ்ரல்லவா?... அத்துடன் அந்தப் பார்சல்கள்... அவனிடம் எப்படிச் சொல்வது...? அதுவும் கழற்றி விடும்படி...!? ஏதாவது விளங்காத் தன்மையில் அவளை அந்த இடத்திலேயே விட்டுவிட்டுப் போய் விட்டால்...?'

'தெய்வமே! எனக்கு ஏன் இந்தச் சோதனை? எல்லாம் என் மாமாவால்... அவரை நொந்து என்ன! என் தலைவிதி... றோம் போய்ச் சேரும் வரை எதையும் தாங்குவேன்.'

***'பெண்ணினம் பாதுகாக்கப்பட, ஆணினம்தான் ஆண்டவனுக்குத் தேவைப்பட்டதோ?...' இது அவளின் கலங்கிய நினைவுகள்...***

*Transit*க்கு ஏதோ ஒரு ஸ்டேசனில் இறங்கியபோது...

"கால்கள் ரொம்ப வலிக்குதுங்க... கழற்றிவிட முடியுமா?"

"என்ன சுபா! இந்த நடுத்தெருவில் நின்று கொண்டு... எப்படிக் கழற்றுவது...? ஏற்கனவே சொன்னேனே அதை யாரும் பார்க்கக் கூடாது என்று."

"அப்போ என்னங்க செய்ய, காலைத் தூக்கி அடியெடுத்து வைக்கவும் முடியாமல் இருக்கே..." சுபா தயங்கினாள்.

"ஹொட்டல் ஒன்றிற்குப் போய்த்தான் கழற்ற வேண்டும், விரும்பினால் வாங்க... விருப்பமா?... என்ன?..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துவின் கேள்விகள் அர்த்தமுள்ள சந்தேகங்களை அவள் மனத்தில் அள்ளிப் போட்டன. 'எங்கு போயாவது காலின் பாரத்தைத் தீர்த்தால் போதும்தானே' என்று மனத்துக்குள் நினைத்தாள்.

"அதோ அந்த ஹொட்டலிற்கு... வாங்க போகலாம்" என்றவாறு இந்து நடந்தான். அவளும் அவனைத் தொடர்ந்தாள். அவள் அதிர்ஷ்டமோ என்னவோ இரண்டரை மணித் தியாலங்களுக்கு மட்டும் அங்கே ஒரு அறைகாலியாக இருந்தது. அந்தச் சொற்ப நேரத்திற்காக அவன் அந்த ஹொட்டல் முதலாளிக்கு அள்ளிக்கொடுத்த பணம்தான் எவ்வளவோ?

"சுபா எங்கே காலை பார்ப்போம்."

அவளின் மென்மையான கால்கள் பிளாஸ்ரின் தாக்கத்தால் நன்கு சிவந்து வீக்கமடைந்திருந்தன. மெதுவாகத் தொட்டு எப்படியெல்லாமோ ஒட்டியிருந்த பிளாஸ்டரை ஒவ்வொன்றாக அவிழ்த்தான் இந்து.

"அப்பாடா! பெரிய ஒரு பாரம் உடலை விட்டு நீங்கினாற்போல" – சுபா ஆறுதலடைந்தாள்.

"பாவம்! சுபா, நீங்க நல்லாக் களைத்துப் போய்விட்டீங்க. நீங்க விரும்பினால் இந்தக் கட்டிலிலேயே கொஞ்ச நேரம் தூக்கம் போடலாம். அடுத்த ரெயிலுக்கு தாராளமாக நேரமிருக்கு..."

"இனியும் என்ன தூக்கம்... ஒரேயடியாக றோமிற்குப் போய் தூக்கம் போட வேண்டியதுதானே!" என்றாலும் கொஞ்சம் தூங்குவோம்... "ப்ளீஸ்... இப்படி வாங்க..." வாரியெடுத்தபடியே கட்டிலில் போட முயன்றான் இந்து.

"ஐயோ இல்லை... என்னை விட்டிடுங்க... உங்களை நம்பித்தான் வழிப்பயணம் துணிந்தேன்... எனக்கு ஒன்றும் நடக்காம பாதுகாப்பது உங்க..."

"பொறுப்பு இல்லையா சுபா?"

அணைத்த கைகள் அப்படியே நழுவ விட்டவனாய்... "சுபா... நீங்க என்னைப் புரிந்து கொண்டீங்க என்று நினைத்தேன்... பரவாயில்லை... ஆனா... நடந்ததை மறந்திடுங்க..."


நாடக விழா சிறக்க
வாழ்த்துகிறோம்...

இந்திய – இலங்கை கடல்
உணவுகளின் சங்கமம்!



'SEA FOODS'

58, RUE LOUIS BLANC
75010 PARIS

Tel : 0663554193
Tel : 0663691568

M°: La Chapelle
Gare Du Nord
ou
Louis Blanc




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுபாவின் கண்களில்இலேசாக விழுந்த துளிகளை இந்து கவனித்தான். வேலி பயிரை மேய்ந்தாற்போல தன் கதை ஆகிவிடக் கூடாதென அவள் செய்த பிரார்த்தனைகள்.

''சுபா நடந்தது ஒண்ணும் உங்க மாமாவிடம் சொல்லிடாதேயுங்க... ஏதோ நம்ம சந்திப்பு இப்படியாய்ப் போய்ச்சு.''

'அவளுடன் ஒரு கணம் கூட நிற்பது பெரிய பாடுபோல... இனி எப்படித் தப்பிப்பது...'

''வாங்க ஸ்ரேசனிலேயே போய் உட்காருவோம்.''

அவள் அவசரப்பட்டாள். அவனுக்கு இப்போ அவளைப்பற்றியும் அவள் பயந்து விட்டாள் என்பதும் புரிந்தது.

ஸ்டேசனை நோக்கி நடந்தான். அவளும் தொடர்ந்தாள்.

தனியே உட்கார்ந்த அவளுக்கு அத்தனை கூட்டம் மத்தியிலும் உலகமே இருண்டு வந்தது. நெஞ்சை இறுக்கிய நினைவுச் சுமைகள்!

'இவன் யார்?' என இவள் மனதில் ஏக்கம்.

'அவள் யார்?' என அவன் மனத்தில் கேள்வி! றெயிலும் வர பயணமோ ஊமைப் பயணமாகத் தொடர்ந்தது. மனித வாழ்விலும் எத்தனை சந்திப்புகள்...

றோமும் வந்தது... றெயிலும் நின்றது.

மாமா காத்திருந்தார்... ''வாம்மா வா! ஏதோ வெளிநாடு வெளிநாடு என்று வந்து சேர்ந்திட்டாய்! கெட்டிக்காரி...''

''இந்து ரொம்ப தாங்ஸ்... கெட்டிக்காரர் நீங்க, உங்களைப் போல வீரர்தான் வெளி நாட்டிற்கு வரணும் வாங்க... முதலில் 'கோபி' குடிப்போம்.

> நம்முடைய மிகப்பெரிய பெருமை நாம் கீழே விழாமலிப்பதிலல்ல; ஒவ்வொருமுறை விழும்பொழுதும் மீண்டும் எழுந்திருப்பதில்தான்
>
> **- கொன்பூசியஸ்**

(Barக்குள்) ''இந்து! இந்தாங்க! சுபாவின் வழிப் பயணத்திற்கான செலவுப் பணம் ரொம்ப செய்திருக்கிறீங்க. அவளுக்கு இனி நல்ல காலம்... உங்க பலனாக வந்ததே'' – அவள் அவனை ஒருமுறை பார்த்தாள்.

''ஐயோ இதெல்லாம் என்ன ரத்தினம்? நம்ம சனத்திற்குச் செய்யாம வேறு யாருக்கு? இதெல்லாம் பெரிய உதவியா ரத்தினம்? இன்னும் எத்தனை செய்ய காத்திருக்கிறோம். நல்லாக இருந்தால் சரி''...

''எப்படியிருந்தாலும், நீங்க இதை வைத்துக் கொள்ளுங்க.'' இது ரத்தினத்தின் கெஞ்சுதல்.

''சரி உங்க ஆசைப்படியே வைத்திருக் கிறேனே!''

வாங்கினான் இந்து... அப்போது பிறகு சந்திப்போம். மீண்டும் நிமிர்ந்து பார்க்க அச்சம் கொண்டவளாய் ''தாங்க்யூ... இந்து...'' – என்றவளுக்குக் கண்கள் கலங்கி வந்தன... இந்த இரு கோடுகள் ஒருநாள் சந்திக்குமா?...

''அம்மா சுபா! வா போகலாம். உனக்கு வேலை ஒன்று பார்த்திருக்கிறேன். வீட்டு வேலைதான். சிறிய குடும்பம், ஒரு பிள்ளை... இலேசாக இருக்கும். வந்த களைப்பு தீர இரண்டொரு நாட்களுக்கு என்னோடயே இரு...''

நான்காம் நாளில் நீங்காத நினைவு களுடன் சுபா வேலைக்காக அந்தப் புதிய வீட்டில் நுழைந்தாள். அவ்வீட்டில் அவளுக்கு இருந்த முதல் நாள் வரவேற்பில் நடந்ததெல் லாம் மறந்தவளாகத் துயில் கொண்டு எழும்பி யவளுக்கு... மாமா ரத்தினத்தின் குரல் போனில்...

''சுபா! உன்னை றோமிற்கு கூட்டி வந்த இந்துவை இங்கு பொலிசார் பிடித்து விட்டார்கள் ட்றக்ஸ்சுடன்.''

''அதென்ன மாமா ட்றக்ஸ்?...''

''உனக்கு ஒன்றும் தெரியாது! சொன் னாலும் விளங்காது... நீ வெளியில் வரும் போது ஆறுதலாகச் சொல்கிறேன். பாவம் அவருக்கு 7 வருட சிறைத் தண்டனை.''

அடுத்த நாள் வியாழன்... அரை நாள் ஓய்வு. ரத்தினம் சுபாவிடம், ''சுபா! உனக்குத் தெரியாது. அவன் உன்னுடன் வரும்போதே அதைக் கொண்டு வந்திருக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறான். அது ஒரு போதை மருந்து... உனக்கு ஒன்றும் தெரியவில்லை. நீ தெய்வாதீன மாகத் தப்பிவிட்டாய். நீ பாவம்... **இந்தப் போதை மருந்து வியாபாரத்தைக் கொண்டு தான் நம்மில் பலர் இங்கு இலேசாகக் கொள்ளை கொள்ளையாய்ப் பணம் சேர்க்கின்றனர்.** ருசி கண்ட பூனை அடுப்பங்கரை விட்டு இறங் காதது போல், இந்த வியாபாரத்தில் ருசி கண்டவர்கள் எத்தனை பேர். இதன் விளைவு களை அறிந்து கூட பலர் விட்டபாடில்லை. ஏதோ பணத்திற்கு மேல் பணம் சேர்க்க வேண்டுமென்ற கொள்ளை ஆசை. சுபா! நீ இங்குதானே இருக்கப் போகிறாய். உனக்கு எல்லாம் தெரிய வரும். சுபா! உன்னிடம் ஒன்று கேட்கிறேன். இந்து உன்னிடம் ஏதாவது வைத்துக்கொண்டு வரும்படி தந்தானா, உண்மையைச் சொல்லிடு.''

''சத்தியமாக மாமா! எனக்கு ஒன்றுமே தெரியாது. என்னை நல்லபடியாகத்தான் கொண்டு வந்து சேர்த்தார்'' முடித்தாள் சுபா.

எங்கும் எந்த இடத்திலும் நடந்ததை மறைத்து நாலு பேரை நல்லவராக மதித்துக் காப்பதுதான் பெண்மையின் நிறைந்த தாய்மையின் பெருமையோ, என்னவோ? எல்லாவற்றையும் ஒரு கணத்தில் அப்படியே விழுங்கி விட்டாள் சுபா! இந்து தனக்கு தரவிருந்த தண்டனையை ஆண்டவன் அவனுக்கே கொடுத்துவிட்டான் என்பது சூடான அவளின் பெருமூச்சு.

மூன்று மணித்தியலா விசாவுடன் றோமிற்கு வந்த சுபாவிற்கு இன்று இத்தாலி யில் வாழ்க்கை. மூன்றரை வருடங்களா கின்றன. இந்த ஆண்டுகள் தந்த அனுபவத் தில் அவளுக்கு நடந்தவை, அவள் காதால் கேட்டவை, கண்ணால் பார்ப்பவை எல்லாம் இந்தப் போதை மருந்தின் தொடர் கதைகளே. தனக்கு நடந்தவைகளைப் பற்றி எண்ணும் போது, இந்து தனக்கு ஏன் நீண்ட போர்வை, அதுவும் தன் செலவில் வாங்கினான். கூட்டி வரும் பொறுப்பை ஏன் தானாக ஏற்றான்? முன்வந்தான்? என்பதெல்லாம் இப்போ அவளுக்கு இலேசாக விளங்குகிறது.

**(ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் 'ஒன்றியம்' 1986இல் வெளியிட்ட 'மண்ணைத் தேடும் மனங்கள்' என்ற சிறுகதைத் தொகுப்பிலிருந்து.)**

●


நாடக விழாவை வாழ்த்தும்....

**AKILAN COIFFEUR & VIDEO**



201, Rue Du FG Saint Denis

75010 Paris

Tel : 0664761889

**சிகையழகின் கலைக்கூடம்**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சுதந்திர அடிமை

– வாசுதேவன்

“டொமினிக்”கும், ‘குளோத்’தும் இன்று தேசிய தின விழாக் கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளப் போகின்றார்கள். “நீதான் முழுவேலையையும் தனியாகச் செய்ய வேண்டும்” என்று குசினிக்குள் வந்து எனது முதலாளி தனது மொழியில் கூறியதைக் கேட்டு, மிகவும் கஷ்டப்பட்டுப் புரிந்து கொண்டு இலேசாகத் தலையாட்டிச் சம்மதிக்கும் எனது மனதுள் எரிமலை.

மூவரின் வேலையை எவ்வாறு தனியே செய்துமுடிக்கப் போகின்றேன் என்று எண்ணும்போதே என்னை அறியாத ஒரு தளவுணர்ச்சி என்னுள் பிரவாகமெடுப்பதை உணரமுடிகின்றது. எரிமலையாய்க் குமுறும் எனது கோபவுணர்ச்சி என்னுள் என்னைச் சித்திரவதை செய்வதையும், விரும்பியோ விரும்பாமலோ எனது உணர்ச்சிக்கு நானே பலியாவதையும் எண்ணும்போது எனக்குத் திடீரென்று சிரிப்பு வருகின்றது. சிரிப்பு என்ற சொல்லுக்கு எல்லா மொழியிலுமுள்ள அர்த்தங்களைச் சிதைத்து, இன்னொரு அர்த்தத்தைச் சிருஷ்டிக்கும் இச்சிரிப்பில் எனது ஆழ்மன உணர்வுகள் விழிப்புறுவது போல் உணர்ந்து கொண்டு மீண்டும் சிரிக்கிறேன்.

மூன்று வருடமாக நான் வேலை செய்யும் இந்தப் பிரஞ்சு **“ரெஸ்ரோறன்ற்”**இல் என்னைப் போலவே ஏற்கெனவே பல தமிழர்கள் வந்து சிறிது காலம் வேலை செய்து விட்டுப் போனதாகவும், எல்லோருமே நல்லவர்களென்றும், ஆனால் திடீரென்று கோபப் படுவார்கள் என்றும் ‘டொமினிக்’ சொல்லக் கேட்பேன். அவன் தனது மொழியில் அடிக்கடி ஏதோ சொல்லி என்னைப் பார்த்து மற்றவர்களுடன் சேர்ந்து சிரிக்கும்போது, எனக்குக் கூட அவன்மீது வெறுப்புண்டாகும். இவன் கெட்டவன் என்று எனக்குள் சொல்லிக் கொள்வேன். பின்னர் என்னுடன் வேலை செய்யும் அவன் எனக்கு ஆதரவு காட்டும்போது, எனக்குப் புரியாத விடயங்களைச் சைகைகளால் விளக்கும்போது; இவன் நல்லவன் என்று எண்ணிக் கொள்வேன். அநேகமாக இவன் பேசுவது எனக்குப் புரிவதில்லை. ‘குளோத்’தைப் பொறுத்த வரையிலும் என்னைத் தனது முதலாவது எதிரியாகவே எண்ணுகின்றான். முதலாளி எனக்குச் சொல்லும் வேலைகளை, வேலை நேரம் முடிந்த பின்னர் கூட நின்று செய்துவிட்டுப் போகும் என்னைப் போன்ற விசுவாசமான ஊழியனால் அவனும் பல மணிநேரம் நின்று வேலை செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டான். அறைக்குத் திரும்பிப் போய்த்தான் என்ன பண்ணப் போகின்றேன். இங்கு நின்று வேலை செய்தாலாவது என்னை முதலாளி நீண்ட காலத்திற்கு வேலையில் வைத்திருப்பாரென்று எண்ணி என்னை நான் நியாயப்படுத்திக் கொள்வேன். இவ்வாறு செய்வதன் மூலம் இன்னொரு தொழிலாளியான குளோத்தை அவனின் நாளாந்தர வாழ்க்கையிலே நான் இடைஞ்சலுக்குள்ளாக்கியிருக்கின்றேன் என்று ஆரம்பத்தில் அறியாதிருந்தபோதும், பின்னர் அறிய வந்தபோது அலட்சியம் பண்ணிவிட்டேன். அவன் எனது பகைவனாகிவிட்டான். இன்று சுதந்திர தின விழாவைக் கொண்டாடிக் கழிப்பதற்கு முதலாளியிடம் அனுமதி பெற்றுக் கொண்டு அவர்கள் போய் விட்டார்கள். அங்கீகரிக்கப்படாத தொழிலாளியாக வாரத்தில் ஆறுநாள் அடிப்படைச் சம்பளத்திற்கு மாடாய் உழைக்கும் நான் ஓர் மூலையில் வெந்து கொண்டிருக்கின்றேன்.

மூவரின் வேலையையும் தனியாகச் செய்யும்படிக் கேட்டபோது நான் ஏன் சம்மதித்தேன்? முடியாது என்று கூடச் சொல்லியிருக்கலாம் தானே?

எங்கோ விருந்து எனக்குப் புலப்படாத ஓர் குருட்டுச் சக்தி என்னை ஓம் என்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்மதித்துத் தலையாட்டத் தூண்டியதை மெதுவாக உணர்கின்றேன்.

சிக்கல்கள் நிறைந்த சமூகச் சங்கிலியின் ஒரு வட்டமாக என்னை நான் இப்போது கண்டு கொள்ளமுடிகின்றது. தூரத்து நிர்ப்பந்தங்களால் துண்டிக்கப்பட்டிருக்கும் எனது சுய இயக்கம் கண்ணியொன்றைப் போன்று கடமை நோக்கில் திசை திருப்பப்பட்டுள்ளதைக் கண்விழித்துப் பார்க்கிறேன்.

சமூகம் என்ற அமைப்பின் இறுக்கத்திலிருந்து தளர்ந்து விடுபட்டு தனியொரு மனிதனாக என்னை ஏற்றுக் கொண்டு சிந்திக்கும் பட்சத்திலேயே, என்னை நான் சுலபமாக, சுதந்திரமாக அவதானிக்கக் கூடியதாயுள்ளது என்பது தெளிவாகின்றது. வெளியுலகம் என்பதை நான் புறக்கணித்துவிட்டேனா? அல்லது வெளியுலகம் என்னைப் புறக்கணித்துவிட்டதா? என்பதை ஆராய்ந்து பார்க்கும் மனோ நிலையிலிருந்து வெகுதூரத்தில் விலகி நிற்கின்றேனென்றபோதும், வெளியுலகிற்கும் எனக்கும் ஏற்பட்டிருக்கும் விரிசலின் காரணத்தை ஆராய்ந்து பார்க்க எண்ணுகின்றேன். மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனது நாகரீகம் என்று இறுமாப்புடன் எண்ணும் நான், எனது மூதாதையருக்கும் எனக்கும் உள்ள இடைவெளியைக் கண்டு அதிர்ச்சியுடன் நிமிர்கின்றேன்.

இன்று யூலை 14-ம் திகதி. சுதந்திரத்தைச் சுதந்திரமாய்ப் பெற்ற பிரஞ்சு மக்களின் சுதந்திர தின விழா வானவேடிக்கைகளை, எச்சில் கோப்பை கழுவிக்கொண்டு ஒரு குசினியின் பின்புறத்தில் நிற்கும் என்னால் கண்டுகொள்ள முடியவில்லை யெனினும் வெக்கை நிறைந்த இக்குசினியின் அடியில் நிற்கும் எனது வியர்வைத் துளிகளை வெளியில் கேட்கும் வெடிச்சத்தம் பரிகசிக்கின்றது. பாதி நாளை நித்திரையிலும், மீதி நாளை கரட் சீவுவதற்கும், சலாட் இலை கழுவுவதற்கும் கழித்துக் கொண்டிருக்கும் நான் ஓர் பட்டதாரித் தமிழன். தண்டிக்கப்பட்டிருக்கும் நிலையில்கூட குற்றவாளி என்பதையுணர மறுக்கும் அளவிற்கு அறியாமையால் ஆளப்படும் நான் எனது சமூகத்தில் அறிவாளி.

எந்தச் சமூக நியமங்களால் எனது சிந்தனை வரையறுக்கப்பட்டுத் துண்டிக்கப்பட்டதோ அதே சமூக நியமங்களின் மலட்டுத் தன்மை நிறைந்த எனது சிந்தனையை வளரும் இளம் சமூகத்தின் தலையில் திணிக்கும் நான் எனது முகமூடிக்குள் தவிக்கின்றேன்.

சுதந்திரம் என்பது, சுதந்திரமாய்ச் சிரித்துச் சுயநலம் மறுத்துச் சுதந்திரமாய்ச் செயற்படும் புத்தி ஜீவிகள் பெரும்பான்மையுள்ள சமூகங்கள் எல்லாவற்றிற்குமுள்ள பொதுச் சொத்தாகும்.

தடுமாறும் கணத்தில் தன்னையழித்து தன்னால் தன்னைப் புனரமைப்பது ஒரு சமூகம் முன்னேறும் வழியென்பதைப் புரிந்து கொள்ளாத என்னைப் போன்ற போலிகள், அறிஞர்கள் என்ற முகமூடிக்குள் அவதிப்பட்டுத் தானும் அழிந்து சமூகத்தையும் அழிக்கும் முயற்சியில் ஈடுபட்டு கொண்டிருக்கும் போது மாற்றுவழி எவ்வாறு தோன்றப் போகின்றது?

பட்டிமன்றம் நடாத்தும் பண்டிதர்கள், பேச்சுவன்மையால் கருத்துமழை பொழியும் கற்றறிந்தோர் கூட்டம். கவிஞர்கள், எழுத்தாளர்கள் நிறைந்த எனது இனமும் நானும் இன்னுமேன் அறியாமையிலும் அடிமைத்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

RUDY AUTO ECOLE FORMATION

எங்கள் சேவையில் முறையான பயிற்சியில் பலநூறு பேர் சாரதி பத்திரம் பெற்றுவிட்டார்கள். தமிழ் மொழியில் மிக இலகுவாக கற்றுத்தருகிறோம். பயிற்சி வகுப்புகள் தொடர்ந்து நடைபெறுகின்றன. நம்பிக்கையோடு நாடுங்கள்...

Cours En Francais
Tamoul Anglais




**RUDY AUTO ECOLE FORMATION**

17, Rue Perdonet
75010 Paris

**Tel Fax : 01 42 05 95 63**

**M°: La Chapelle**


தனத்திலும் உழல்கின்றோம்? இவர்களின் அறிவாற்றல் சமூகத்தை மாற்றியமைக்கும் அளவிற்குப் பலம் வாய்ந்ததில்லையா?

**எத்தனையாயிரம் பட்டிமன்றங்கள் நடைபெற்றுவிட்டன. இதிகாசங்களிலும் புராணங்களிலும் எடுத்துக் காட்டுகளைக் காட்டி எத்தனையோ பேர் முழங்கினார்கள். சீதனம் வாங்காதே என்று சிரசில் அடித்துச் சொன்னார்கள். ஒவ்வொரு பட்டிமன்றத்திலும் ஒவ்வொருவன் உறுதி எடுத்திருந்தால் கூட இதுவரையும் பாதிச் சமூகத்திற்குமேல் திருந்தியிருக்கும்; அத்தனை யாயிரம் பட்டிமன்றங்கள் நடந்தேறிவிட்டன. அத்தனையாயிரம் பட்டிமன்றத் தலைவர்கள் சீதனம் வாங்குவது மானிட நாகரீகத்திற்கு முரணானது என்று தீர்ப்பளித்துவிட்டார்கள்.**

சுதந்திரத்தைச் சூறையாடி விட்டவர்கள், சுயநலத்திற்காய் சுதந்திரப் போராட்டம் ஆரம் பித்தவர்கள், இவற்றையெல்லாம் கண்டு நிஜமாகவே சுதந்திரம் வேண்டுமென்று சூள்கொட்டி நிற்பவர்கள், தன்னிடம் இருந்து தானே சுதந்திரம் பெறமுடியாத போதும் நடப்பது நமது புரட்சி என்று பெருமிதத் தோடும், புளகாங்கிதத்தோடும், நாளை மலரும் புதிய சமூகத்தை அசிங்கப்படுத்த எண்ணுபவர்கள், இவையெல்லாவற்றிற்கும் மத்தியில் கோழைத்தனமாக விடுதலையடைந்து, ஒதுங்கி, ஒரு குசினியின் மூலையில், சர்வதேச மனித உரிமைகள் சாசனத்தைப் பிரகடனம் செய்த தேசத்தவர்கள் சுதந்திரம் கொண்டாடும் நாளில் நான் அடிமையாச் சிதைகின்றேன்.

புரட்சியைத் தனது ஆழ்மன உணர்வு களில் ஏற்படுத்தத் தவறிய எனது சமூகம் தனது முயற்சியில் ஒருவேளை தோற்று விடுமோ என்று எண்ணும்போது "ஏதோ" வொன்று நெஞ்சைப் பிழிகின்றது.

அசாத்தியங்களை அத்திவாரமாக ஏற்றுக் கொண்ட அறியாமை நியாயங்கள் சமூகத்தின் தலைவிதியைத் தறிகெட்டுப் போகும் வகை யில் தண்டிக்கும்போது விழித்தெழாத மனித உணர்வுகள் விடிவுக்குப் பாதை சொல்லும் நாதியற்றவை.

வெளியில் வெடிச்சத்தம் கேட்கின்றது.

சுதந்திரம் வேண்டிப் போராடும் எனது சமூகத்தின் தூரத்துத் துப்பாக்கி வேட்டுச் சத்தத்திலும், இதோ என்னருகே சுதந்திரம் கொண்டாடுவதற்குக் கொளுத்தப்படும் வெடிச் சத்தத்திலும் குழம்பிப் போய் கூரையும், சுவர்களும் அற்ற சிறையின் கைதியாய், உணர்ச்சிகளின் வீதியில் அநாதையாகக் கைவிடப்பட்டு, உண்மை எனும் குளிர் காற்றில் உடல் நடுங்க வரட்டுக் கௌரவப்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படிகளுக்குள் ஒடுங்கிப்போய் கற்பனைகளைப் பிச்சையாய்த் தேடிக் கொண்டிருக்கும் நான் யார்?

நிஜ உலகில் என்னை நிரந்தர நோயாளியாக்கியது யார்?

**பெற்றுப்போட்ட அன்றே தனது குறுகிய மனிதாபிமானமற்ற சிந்தனைகளை ஊட்டத் தொடங்கிய, பாடசாலை ஆசிரியையான, அவ்வாறு ஆசிரியையாயிருந்து பலரது சிந்தனையைப் பழுதடைய வைத்ததை ஏற்க மறுக்கும் எனது தாய். படித்துப் பட்டம் பெற்று, மேலை நாட்டுக், கீழை நாட்டுச் சரித்திர, அரசியல், சமூகப் பொருளாதாரத்தில் பேரறிவு பெற்ற எனது தந்தை. என்னைப் பட்டதாரிப் பாமரனாக்கிய இவர்களைப் பொறுத்த வரையில், இவர்களும் பாமரர்களே என்று சொல்லுவதில் என்ன தவறிருக்கின்றது? ஆயிரம் சாதி புகட்டினாள் அன்னை. ''அடுத்த வீட்டில் சென்று தண்ணி குடியாதே - அவர்கள் சாதி குறைந்தவர்கள்'' என்று கூறிய எனது தந்தை, நல்லறிஞர்.**

இவர்களைப் போன்ற ஆயிரமாயிரம் தாய் தந்தையர்களை, வேதனையில் விழிப்புறும் சுய உணர்வுள்ள எந்த மனிதனால் சமூகக் குற்றவாளிகள் என்று ஏற்றுக் கொள்ளாதிருக்க முடியும்.

**கசப்பான, காயப்படுத்தும் இவ்வுண்மைகளைக் கோழைத்தனமின்றி என்னால் ஏற்றுக் கொள்ள முடியாதெனில், நானும் ஓர் சமூகக் குற்றவாளிதான் என்பதை உணர்கிறேன்.**

விண்ணைப் பிளக்கும் வெடிச்சத்தம் என்னைப் பிளந்து, எனது முகமூடிகளைச் சின்னாபின்னமாக்குகின்றது.

இப்போது நான் கிளாஸ் துடைத்துக் கொண்டிருக்கின்றேன். இவ்வேலை முடிந்தவுடன் சலாட் இலை கழுவவேண்டும் என்பது எனது முதலாளியின் கட்டளை. நிறைவேற்றாவிட்டால் கழுத்தைப் பிடித்து வெளியே தள்ளிவிடுவார்கள். என்னை வெளியே தள்ளிவிட்டால் வரப்போவது வேறு யார்? இன்னொரு தமிழன். தன் மொழிப்பற்று நிறைந்த எனது சகோதரன் ஒருவன் இந்நாட்டு மொழியில் ''வேலையுண்டா ஐயா?'' என்று மட்டும் கேட்கத் தெரிந்த துணிவில் மறுநாள் காலை எனது இடத்தை நிரப்பிக் கொள்வான்.

மகளுக்குச் சீதனம் கொடுக்கவேண்டும் என்பவர்கள், சகோதரிக்குச் சீதனம் கொடுக்க வேண்டும் என்பவர்கள், யார் எப்படிப் போனால் என்ன - வங்கியில் பணம் இருக்க வேண்டும் என்று எண்ணுபவர்கள், எதைப் பற்றியும் உணர்ச்சியற்ற பெரியவர்கள் (?) காட்டிய வழியில் வாழவேண்டும் என்று அடம்பிடிப்பவர்கள்;


எம். அரியநாயகத்தின்
நாடக விழா சிறக்க
வாழ்த்துகிறோம்!

**CAFE BHARATH**

அன்பு கலந்து அறுசுவை
விருந்தளிக்கக் காத்திருக்கிறோம்!

**CAFE BHARATH**

சுவை மிகுந்த
உடன் தயாரிப்பு
உணவு வகைகளின்
பல்சுவை உணவுக் களஞ்சியம்!



**67, RUE LOUIS BLANC**
**75010 PARIS**
**TEL : 0158200620**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எமது சொந்த உள்ளங்கைகளைப் பார்ப்பதற்கு முகக்கண்ணாடி தேடும் நானும் இவர்களும் மூவாயிரம் ஆண்டுகளுக்கு மூத்தது எமது நாகரீகம் என்று புளகாங்கிதம் அடைந்து கொள்கின்றோம்.

அயல்வீட்டில் பொரிக்கும் மீன் வாசனையில் பழஞ்சோறு உண்ணும் புத்தி ஜீவிகள்.

வெளியில் வெடிச்சத்தம் ஓய்ந்து விட்டது.

எதேச்சை வெள்ளத்தால் எத்தி வீசப் பட்டுக் கரையில் வீழ்ந்து துடிக்கும் மீனைப் போல் நான் துடிக்கிறேன்.

உடல்வலியொருபுறம், உளவலி யொருபுறம் – வாழ்வின் அவலங்களை நிஜங்களின் முகங்களிலே பார்க்க நேர்ந்த கசப்பு ஒருபுறம்... நான் மணிக்கூட்டைப் பார்க்கிறேன்.

பன்னிரண்டு மணி முப்பது நிமிடம்.

கழுவுவதற்கு இன்னும் சில சமையல் பாத்திரங்கள் மீதியுள்ளன.

ஏதோவொரு முடிவுக்கு வந்தவனாய், ஆரம்பத்தில் தனியே வேலை செய்யத் தூண்டிய ஆனாலும் வேறு விதமானவோர் குருட்டுச் சக்தியினால் உந்தப்பட்டு வேலை அங்கியை மாற்றிக் கொண்டு முன்னால் வருகின்றேன்.

உணவு பரிமாறும் ஒய்யாரக் கன்னி யுடன் வம்பளந்து கொண்டிருந்த எனது முதலாளி ''அதற்கிடையில் வேலைகளை முடித்துவிட்டாயா?'' என்று கேட்டு முடிப் பதற்கு முன்னர், ''நான் நாளையிலிருந்து வேலைக்கு வரமாட்டேன்; நாளை காலையில் கணக்கைத் தீர்த்துச் சம்பளம் வாங்க வருவேன்'' என்று கூறிவிட்டுப் பதிலுக்குக் காத்திராமல் வெளியேறுகின்றேன்.

வெளியில் விழா முடிந்துவிட்டது. ஜனங்கள் கலைந்து போய் விட்டிருந்தார்கள். சுதந்திரம் பெற்ற மக்கள், சுதந்திரக் களிப்பில் தங்களை மறந்து நடத்திய குதூகலக் களியாட் டங்களைக் கண்ட மமதையில் செய்ன் நதியின் சிற்றலைகள் என்னைப் பார்த்துச் சிரிக்கின்றன.

கோடை காலத்தின் இதமான குளிர்க் காற்றைச் சுவாசித்தவாறு, நாளையைப் பற்றிய நிஜங்களை இழந்து நான் அறையை நோக்கி நடந்து கொண்டிருக்கிறேன்.

**(ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் 'ஒன்றியம்' 1988இல் வெளியிட்ட 'நம்பிக்கை நாற்றுகள்' என்ற சிறுகதைத் தொகுப்பிலிருந்து.)** ●


**OCEAN INDIAN**

உடலுக்கு ஊட்டத்தையும்
நாவுக்கு நல்ல சுவையையும்
தரக்கூடிய
தரமான கடல் உணவுகளுக்கு
நாட வேண்டிய நிறுவனம்



**Ocean Indian**

**OCEAN INDIAN :**
195, Rue du Fbg. St. Denis
75010 - Paris Tel : 0142093150
M°: Gare du Nord - La Chapelle

**EXO - OCEAN**
7, Alexis Varagne
95400, Villiers Le Bel
Tel : 0134194697

சிறுகதை

# தாயகத் தாகம்

– ஜெயா – சிறி

**க**ண்ணுக்கெட்டிய தூரம் வரை கானல் நீரைத் தவிர ஒன்றையும் அங்கே காணமுடிவதில்லை. ஆனால் அந்தக் கானல் நீரையே பருகி, தங்கள் தாகத்தைப் போக்கிக் கொள்ளத் தவிக்கும் ஆயிரமாயிரம் ஜீவன்கள் அங்கே. தென்றல் என்பது இவர்கள் வாழ்வில் இன்னும் வீசவில்லை. அதனால் அதைப்பற்றித் தெரிய இவர்களுக்கு நியாயம் இல்லை. அங்கே வீசுகின்ற அந்தத் தூசிபடிந்த காற்றுகூட இவர்களுக்குச் சொந்தமில்லை. ஆனால் அதைச் சுவாசிக்கின்ற உரிமையை மட்டும் இன்று வரை எவரும் பறிக்க முன்வரவில்லை. அது இயற்கையின் படைப்பு என்பதனால் தானோ என்னவோ!

பரந்த அந்தப் பாலைவனப் பிரதேசத்தில் ஆங்காங்கே தெரிகின்ற சிவந்த மலைகள், காற்றால் அள்ளிக் கொட்டப்பட்டு வெய்யிலுக்கு இறுகிப்போன மண் குன்றுகள், தொடர்ந்து மழை பெய்தாலும் தாகம் தணியாத அந்தப் பூமியின் மலையடிவாரங்களில் குடிசைகளில் வாழ நிர்பந்திக்கப்பட்ட ஒரு சமூகத்தின் சோகமான வாழ்க்கை. வேதனையும், விரக்தியும், சோகமும், பறிக்கப்பட்ட உரிமையை மீட்கப் புறப்பட்ட இவர்களுக்கு ஏற்பட்ட மன வைராக்கியமும், வீரமும் எவராலும் இவர்களிடமிருந்து பறிக்க முடியாத சொத்துக்கள். **ஏகாதிபத்திய ஆசை கொண்ட ஐரோப்பியர்கள் அங்கேயும் சென்றதனால் இவர்களுக்கு ஏற்பட்ட மரண விழைவுகள் இவை. மனம் போல் தங்கள் வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருந்த இவர்கள் வெள்ளைக்காரர்களின் வெற்றுத் துப்பாக்கிகளுக்குக் கூடப் பயந்தார்கள். அம்பையும் வில்லையும் தவிர வேறு ஆயுதங்களைக் கண்டறியாததால் ஏற்பட்ட குழப்பம் இவர்களுக்கு. நீண்டு பரந்த இந்த வல்லரசுக்கே சொந்தப் பிள்ளைகளான இவர்கள், தாய் நாட்டிலேயே அகதிகளாக்கப்பட்டு விட்ட நியாயமற்ற நியதி** அது. மாலைநேரச் சூரியக் கதிர்பட்டு செந்தணலெனச் சிவந்திருந்த மலையடிவாரங்களின் செம்பொன்னிறம், மணல் மேலும் அந்த மணல் குன்றுகள் மேலும் படர்ந்து அதற்கப்பாலும் அந்நிறம் இவர்களது முகங்களிலே தெறிப்பதனால்தானோ 'செவ்விந்தியர்கள்' என்ற பெயர் இவர்களுக்கு வந்தது. *மொறிலியோ* தொடக்கம் *மெக்சிக்கோ* வரை தலையைச் சுற்றி இறக்கையை இணைத்துக் கட்டிய கட்டுடனும், வலக்கையில் ஈட்டியை உயரத் தூக்கிக் கொண்டு 'ஊ' என்ற உரத்த குரலுடன் ஆளுயரத்திற்குப் புழுதி எழுப்பிக் கொண்டு, குதூகலத்துடனும், வீரத்துடனும் குதிரைகளின் குளம்பொலி ஊரையெழுப்ப சவாரி செய்த தங்கள் மூதாதையரின் விடுதலை வாழ்க்கையை மீளப்பெறும் இலக்குடன் இயங்கும் எண்ணங்கள் இவர்களுடையவை.

செங்கதிரோனின் தாக்கத்தைத் தவிர்க்க பகல் முழுவதும் குடிசைக்குள்ளேயே தங்கியிருக்கின்ற இவர்கள், அந்திப் பொழுதுகளில் மலையடிவாரங்களில் ஒன்றாகச் சேர்வார்கள். அப்பொழுது அவர்களது மனங்கள் குளத்திலே குளித்துவிட்டு சூட்டைத் தணித்துக் கொண்ட ஒரு நிறைவு பெறும். ஏழ்மையின் சின்னங்களாக இயற்கையோடு எதிர்நீச்சல் போடும் இந்த ஒடுக்கப்பட்ட சமுதாயத்தின் நிறுத்தப்படாத சில பாரம்பரிய நியாயங்கள் மூலம் இவர்களுக்குக் கிடைக்கின்ற அற்ப சந்தோசங்களில் இதுவும் ஒன்று. தங்கள் நியாயங்கள் தண்டிக்கப்பட்டதால் இவர்கள் சோர்ந்து போகவில்லை. ஆம், இவர்கள் பதுங்கி வாழ்கிறார்கள். பயத்தினால் அல்ல; பாய்வதற்கான சந்தர்ப்பத்தைப் பார்த்துக் கொண்டு, எதிரிகளைப் பார்த்துப் பார்த்துச் சிவந்த இவர்கள் கண்கள், தங்கள் சிறுவர்களைப் பார்க்கவும் சிவக்கிறது. இவர்கள் போகும் பாதை மிகவும் கரடு முரடாகவும், கற்களும் முட்களும் நிரம்பினதாயும் இருந்தாலும் அதற்கு அப்பால் தெரிகின்ற பசும் தரையில் தங்கள் சிறுவர்கள் விளையாட்டுத் திடலை அமைப்பார்கள் என்ற எதிர்பார்ப்போடு வாழ்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த அந்திப் பொழுதில் மலையடிவாரத்தில் கூடியிருந்த ஒவ்வொருவரின் முகங்களும் அவர்களின் மன எண்ணங்களை அளந்து காட்டிக் கொண்டிருந்தன. முதியவர்கள் தங்கள் கடந்த கால வாழ்க்கையைப் பாடமாகச் சொல்லிக் கொண்டிருந்தார்கள். இவர்களின் அனுபவங்களும், எதிர்காலத்திற்கான சிந்தனைகளும் உடல் வலுவைவிடப் பலமிருந்தவைகளாயிருந்தன. இளைஞர்கள் திடீரென்று தாக்க வரும் எதிரிகளைக்கூட தோற்கடித்து விடுவதற்கான உஷார் நிலையில் இருந்தார்கள். அந்தத் தாயும் அவள் மகனும் வெகு தொலைவுக்கு தங்கள் பார்வையைச் செலுத்திக் கொண்டிருந்தார்கள்.



அந்திப் பொழுதாகியும் திரும்பி வராத தன் கணவனை எதிர்பார்த்து, அவள், அந்தப் பாவை வெளியில் தன் பார்வையை விட்டிருந்தாள். அந்தச் சிறுவனோ தூரத்தே தெரிந்த மலைகளில் காலம் போட்டிருந்த கோலத்தில் கவனத்தைச் செலுத்திக் கொண்டிருந்தான். தடுக்க முடியாத காற்றைத் தடுத்து நிறுத்த முற்பட்ட மலைகளின் அரிக்கப்பட்ட அமைப்புகள், கால ஓட்டத்தில் இவர்களுக்கு ஏற்பட்டிருந்த மாற்றத்தைக் காட்டி நின்றன. அந்தி வெளிச்சத்தில் அந்த மலைச்சாரலில் ஒரு முகத்தின் அமைப்பு செதுக்கப்பட்டிருப்பதை அந்தச் சிறுவன் கண்டு கொண்டான். தினமும் பார்த்துப் பழகிய அந்த மலைச்சாரலில் தெரிந்த அந்த மனித முகத்தின் அமைப்பை – தான், இதுவரையில் கண்டு கொள்ளாதது ஆச்சரியமாகவிருந்தது. இந்தச் செங்குத்துச் சாரலில் ஒரு மனித முகத்தை யார் எப்படி உருவாக்கினார்கள் என்ற கேள்வி அவனுள்ளத்தில் உந்தியதாலும், இதைப்பற்றி மேலும் அறிந்து கொள்ளும் ஆவலினாலும் அந்த மனிதமுகத்தைப் பற்றி அவன் தன் தாயிடம் வினவினான்.

அவள் தன் சிறுவனுக்கு அந்த முகத்தைப் பற்றி அறிந்தவற்றை சொல்லத் தொடங்கினாள். *"இந்தக் கல் முகத்தை சிறுவயதாக இருக்கும்போது நானும் கண்டு கொண்டேன். இந்த முகம் காலமாற்றத்தினால், மலைகளில் ஏற்பட்ட தாக்கத்தினால் ஒரு நீண்ட காலப் பகுதியில் ஏற்பட்டது.* **இந்த நீண்டு பரந்த அமெரிக்கா முழுவதுமே முன்னொரு காலத்தில் நமது மூதாதையர்களுக்குச் சொந்தமாக இருந்தது.** *எங்கள் மக்களில் யாருக்கு அதிக பொருட்பலம், படை பலம், அறிவு ஆற்றல், திறமையிருந்ததோ அவரே எங்களை வழி நடத்திக் காப்பவராகவும் மற்ற அனைவரும் எங்கள் சமூகத்தைக் கட்டிக் காக்க தலைவர் எடுக்கும் முயற்சிக்குத் தங்களாலான சகல உதவிகளையும் செய்பவர்களாகவும், இருந்தார்கள். இவ்வாறு மக்களை வழிநடத்துபவர்கள் இறைவனால் அனுப்பப்பட்ட பிரதிநிதிகளெனக் கருதப்பட்டார்கள். இந்தக் காலத்தில் தான் ஐரோப்பிய நாகரிகம் வளர்ச்சி பெற்றுத் தங்கள் களஞ்சியங்களை நிரப்ப கடல் வாணிபம் தொடங்கப்பட்டது.* **போர்த்துக்கீச கொலம்பஸ் மாலுமிக்குப்** *பின் அனேக வாரிசுகள் இங்கே வரத்தொடங்கினார்கள். எங்கள் தலைவர்களைப் பலவீனப்படுத்த எங்கள் மக்களையே பயன்படுத்தினார்கள். ஐரோப்பியர்களால் வழங்கப்பட்ட பணம், சில சலுகைகளுக்காக நம்மவர்களே எங்களுக்கெதிராக எதிரிகளுக்கு உதவினார்கள்.* **சமூக விரோத காட்டிக் கொடுத்தல்களாலும், அந்நியர்களின் நவீன ஆயுதங்களாலும் உயிருள்ளவரை போராடிய நமது வீரர்கள் அருகிக்கொண்டே போனார்கள்.** *போராட ஆயுதம் எதுவுமற்ற*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*நிலையில் நிராயுதபாணிகளாக்கப்பட்ட நமது மக்கள், காடுகளையும் மலையடிவாரங் களையும் குகைகளையும் தேடிப்பதுங்கி வாழ வேண்டிய நிலை ஏற்பட்டது. நமது மக்கள் இவ்வாறு திக்குத்திக்காக வாழ்ந்தாலும் அந்நியர்களைத் தாக்கி வெளியேற்றவே சந்தர்ப்பத்தைப் பார்த்தபடி இருக்கிறார்கள். இவ்வாறு உரிமைகளை இழந்துவிட்ட எங்களில் இந்தக் கல்லுமுகத்தின் முக அமைப்பைப் பெற்ற ஒருவன் பிறப்பான் என்றும், அவனே எங்களை மீட்க இறைவனால் அனுப்பப்பட்டவனென்றும், அவன் மூலமாகத்தான் நாம் மீண்டும் எழுச்சி பெற்று வீரம் மிகுந்த இளைஞர்கள் அவனுடன் சேர்ந்து எதிரிகளை வெளியேற்றி நமது நாட்டை மீளப் பெறுவார்களென்றும் நாங்கள் நம்பி எதிர்பார்க்கின்றோம்.''*

– தாயின் கதையைக் கேட்டுக் கொண் டிருந்த சிறுவனின் முகம் அந்தக் கல் முகத் தைப் பார்த்தபடி சிவந்திருந்தது. அந்த முகத் தில் பதிந்திருக்கும் பார்வையை அகற்றாமல் ''அப்படியானால் இன்றுவரை ஒருவரும் நமது உரிமைகளுக்காகப் போராட வில்லையா?'' என்று சிறுவன் கேட்டான்.

''ஆம், இன்று வரையில் பலபேர் நமது சமுதாய உரிமைகளை மீட்பதற்காகப் போராடினார்கள். பலப்பல புதிய வழிகளில் எதிரிகளை எதிர்த்து அனேக தடவைகளில் வெற்றியும் கண்டார்கள். நமது இன மக்களும் நம்மாலான சகல வழிகளிலும் நமது ஒத்துழைப்பை இந்தப் போராளிகளுக்குக் கொடுத்துதவினோம். இவர்களால் தான் நமது பறிக்கப்பட்ட உரிமைகள் மீளவும் நமக்குக் கிடைக்கும் என்று நம்பினோம். ஆனாலும் காலப்போக்கில் இவர்களும் சுயநலத்திற் காகவும், அரசியல் தந்திரங்களுக்காகவும், சந்தர்ப்பத்திற்கேற்ப தாங்கள் எடுத்துக் கொண்ட இலட்சியங்களையும், உறுதிகளை யும் கைவிட நேர்ந்தது. அப்போது நாம் எதிர் பார்க்கின்ற, இறைவனால் அனுப்பப்பட்ட, நமது உரிமையை மீட்டுத் தருகின்ற மீட்பர்கள் இவர்களில்லை என்று அறிந்து வருத்தப் பட்டோம். இதுவரையில் நமது கடந்துவிட்ட காலங்களைத் திரும்பிப் பார்க்கும் போது அந்நியர்கள் அவர்களின் ஆக்கிரமிப்பு நோக் கத்தால் நம்மிடமிருந்து பறித்த உரிமைகளை விட நாமே நமது சுயநலம். போட்டி, பொறாமை, சமூகங்களுக்கிடையிலான


**BOUCHERIE R.R.R.**



**R.R.R.**

**இறைச்சிக் கடை**

Specialite - AFRICAINE

எங்கள் இறைச்சி வகைகள்
உங்கள் மனங்களுக்கு
நிறைவைத் தரும்!
நாவுக்குச் சுவையைத் தரும்!!

(பிரதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில்
உடன் மாட்டிறைச்சி பங்கு
எங்களிடம் பெற்றுக் கொள்ளலாம்.)

**மலிவுவிலையில்**
**மனம் நிறைந்த சேவை!**

**BOUCHERIE R.R.R.**
**34, RUE PHILIPPE DE GIRARD**
**75010 PARIS**
**TEL : 0142050095**

**M° : LA CHAPELLE**
**M° : STALINGRAD**

**BUS N° - 48.**

பூசல்கள், நமது பிழையான போராட்ட முறைகள் மூலம் இழந்துவிட்ட உரிமைகள் அனேகம். இன்று பல பெரியவர்கள் நாம் நமது பலவீனங்களால் நமக்குள்ளேயே இழந்துவிட்ட உரிமைகளை மீளப் பெற்ற பின்புதான் அந்நியர்களால் பறிக்கப்பட்ட வற்றைப் பெறத் தகுதியாவோம் என்று கருதுகிறார்கள்.''

''அப்படியானால் எப்போது இந்த இறைவனால் அனுப்பப்பட்ட விடுதலை வீரன் பிறப்பான்'' என்று சிறுவன் தன் ஆவலையடக்க முடியாமல் கேட்டான்.

''நாம் விடுதலைக்குத் தகுதியுடையவர் களாகும்போது...'' என்று சொல்லிய தாய், தன் சிறுவனின் முகத்தை நிமிர்ந்து நோக் கினாள். தான் சொன்ன பதிலால் சிறுவன் திருப்திப்படவில்லை என்பதை அவனது முகக்கண்ணாடி காட்டியது. ''ஆம், மகனே நாமே நம்மிடையே ஏற்படுத்திய பிரச்சினை கள் அனேகம். **சமூகங்களுக்கெதிராக சமூகமும், குடும்பத்திற்கெதிராகக் குடும்ப மாகவும் எழும்பி அழித்துவிட்ட விடுதலைகள் அதிகம்.** நாம் எப்பொழுது இவ்வாறான பிரச் சினைகள் நீங்கி, நல்ல பழக்க வழக்கமுடைய வர்களாகவும், நம் இனத்தின் சிறந்த கலாச்சார ஒழுக்கங்களைப் பேணிப் பாதுகாப்பவர் களாகவும் வளர்ந்து நமக்கிடையே இழந்து விட்ட உரிமைகளைப் பெறப் போராட நாம் ஒன்று சேரமுடியும். அப்படியான ஒற்றுமைப் போராட்டத்தின் மூலம் பெறும் உரிமையும் விடுதலையும் தான் நமக்கு நிலைக்கும். இந்த ஒன்றித்த இலட்சிய நிலை உருவாவது தான், நாம் விடுதலைக்குத் தகுதியானவர் களாவது என்பது. இவ்வாறு நாம் ஏற்றவர் களாகும்போது இங்கே எங்கள் முன்னால் தெரிகின்ற இந்தச் சென்னிற மலையில் இயற்கையால் வரையப்பட்ட இந்தப் பெரிய 'கல்' முகத்தின் முக அமைப்பைக் கொண்ட விடுதலை வீரன் இறைவனால் அனுப்பப் படுவான் என்று எதிர்பார்க்கின்றோம். இன்று வரை அப்படி ஒருவனும் தோன்றாதது மிகப்பெரும் சோதனையும் தோல்வியும் தான் எனினும் வெகு விரைவில் இந்த மீட்பன் வருவான் என்றே எதிர்பார்க்கின்றேன்'' என்றாள்.

அவள் குரலில் வருத்தமும் ஏமாற்றமும் தொனித்ததைக் கேட்ட சிறுவன் தன் தாயின்


ஜீவனா!

JEEVANA !!

ஜீவனா சலூன்

உங்கள்
முகவசீகர
சிகை அலங்கரிப்பில்
என்றும்
சிறந்து நிற்பவர்கள்



JEEVANA
COIFFURE

203, Rue du Fbg. Saint Denis
75010 Paris
Tel : 0142 053142
M° : La chapelle ou gare du Nord




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முகத்தைக் கவலையுடன் ஏறிட்டான். தாயின் கண்களிலே தெரிந்த அவள் மனத்தினுள்ளே எரிந்த அந்த இலட்சிய எதிர்பார்ப்பு வேள்வியின் சுவாலையாகத் தெரிந்தது. 'ஆம், என் அம்மா சொன்னது கதையல்ல ஓர் தீர்க்க தரிசனம். இது எதிர்பார்த்து வீண்போகும் எண்ணமல்ல. நிச்சயமாக நிறைவேறுகிற இலட்சியம்' என்று அச்சிறுவன் நம்பிக் கொண்டான்.

"இன்று வரை பிறக்காவிட்டாலும் என்னுடைய காலத்திலாவது அந்த வீரன் இறைவனால் அனுப்பப்படுவானா?" என்ற சிறுவனின் எண்ணம் கேள்வியாகி, தாயின் பதிலை எதிர்பார்த்து நின்றது.

மகனின் இந்தக் கேள்வி தாயின் நெஞ்சத்தில் பாய்ந்தது. அவள் ஒரு கணம் தடுமாறி விட்டாள். 'என்ன பதிலை நான் சொல்லப் போகிறேன்? எந்தப் பதிலை என் மகன் என்னிடமிருந்து எதிர்பார்க்கின்றான்?' என்ற சிந்தனையில் அவள் மகனின் முகத்தை ஏறிட்டாள். **வீராவேசமாய் செஞ்சிவப்பாய் ஊற்றெடுத்து ஓடிக்கொண்டிருந்த இரத்த ஓட்டத்தின் வேகத்தை அவன் கன்னங்கள் காட்டி நின்றன. அவன் தோள்கள் புடைத்துக் கண்கள் ஒளிமிகுந்து காணப்பட்டன. தீர்க்கமான சிந்தனையின்றி அவிக்கப்படுகின்ற எந்தப் பதிலும் தன் இளவேங்கையின் இலட்சிய வீர எதிர்காலத்தை அழித்து விடுமென்று அறிந்து கொண்டாள். ஆம் அவள் தன்** மகனின் வீர எதிர்கால நினைவுகளை அழிக்க விரும்பவில்லை. "நிச்சயமாகவே உன் காலத்தில் நாமெல்லாம் எதிர்பார்க்கின்ற இந்த வீரன் இறைவனால் அனுப்பப்படுவான்" என்றாள்.

இப்பதிலைக் கேட்ட சிறுவனின் எண்ணங்கள் களிப்பு மிகுதியால் துள்ளிக் குதித்தன. "ஆம் மகனே இந்த வீரனுக்குதவியாக நீயும் எங்கள் இனவிடுதலைக்காக இணைந்து போராட வேண்டும்" என்று தன் ஆவலை வெளியிட்டாள்.

"ஆம்! அம்மா, நிச்சயமாக இந்த வீரனுக்கு நல்ல முறையில் உதவ வேண்டும் என்பதனால் தான் அவன் எனது காலத்தில் வரவேண்டும் என்று நம்புகிறேன்" என்றான்.

இந்த எண்ணங்களில் மூழ்கியிருந்தவர்களைத் தங்களுடன் மலையடிவாரத்தில் கூடியிருந்த மற்றவர்களின் ஆரவார ஒலிகள் மீட்டன. இந்த அவசரமான ஆரவாரித்தலுக்குத் தூரத்தே மலையடிவாரத்தில் தெரிந்த புழுதி மண்டலம் தான் காரணமென்பதை அவள் அறிந்து கொண்டாள். அந்தப் பெரிய புழுதி மண்டலம் பலபேர் குதிரைகளில் தங்களுக்கெதிராக வருவதைக் காட்டியது. கொஞ்சம் கொஞ்சமாக இவர்களை அணுகி வந்தது. இளைஞர்கள் ஆயுதங்களை எடுத்துக் கொண்டு குதிரைகளில் ஏறி எதிர்த்தாக்கத் திற்குத் தயாரானார்கள். பெண்கள் குழந்தைகளுடன் பாதுகாப்பான இடங்களுக்கு ஒளிந்தோடினார்கள்.

அவளும் தன் இளஞ்சிறுவனை அழைத்துக் கொண்டு மறைவிடம் தேடி ஓடினாள். அனிச்சத்தின் பூப்பட்டாலே நோகுகின்ற பரம்பரையில் பிறந்த அந்தப் பூங்கொடியாளுக்கு எதிரே கிடந்த நெருஞ்சி முள் காலில் தைத்தது கூடத் தெரியாத அளவுக்கு மனம் மரத்துப் போய் விட்டிருந்தது.

*(Nathaniel Hawthorne* என்பவரின் *The Great Stone Face* என்ற ஆங்கிலக் கதையின் கருமூலத்திலிருந்து எழுதப்பட்டது.)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாளைய அறுவடை...

**– 'முகதார்' எஸ். ஜேசுறட்ணம்**
*பிரான்ஸ், ஏ.பி.சி. தமிழ் வானொலி*



எம். அரியநாயகம் அவர்களைச் சொந்த மண்ணில், மேலோட்டமாக, அறிந்திருக்கிறேன்; ஆனால், அறிமுகமாகும் வாய்ப்பு எனக்குக் கிட்டியதில்லை.

முழுமையான ஒவ்வோர் கலைஞனுக்கும்; ஒவ்வோர் வகையில் ஒவ்வோர் திறமையிருக்கும். அவனது, திறமைகள், நேர்க்கோட்டில் வெளிப்படுமாயின், அவனது புலமைகள், வெளிச்சத்திற்கு வந்துவிடும்.

இந்நாடக விழா நாயகனை, ஒரு சிறந்த சிறுகதை எழுத்தாளனாக, நாடக எழுத்தாளனாக, நாடக நெறியாளனாக, பல கோணங்களில் நான் பார்க்கிறேன்.

ஐம்பது வருடங்களுக்கு மேலான எனது கலை வாழ்க்கையில், ஆயிரத்துக்கு மேற்பட்ட கலைஞர்களோடு, நெருக்கமாக உறவாடியிருக்கிறேன். ஆனால் அரியநாயகத்திடம் சற்று வித்தியாசமான, கவர்ச்சியான ஈர்ப்புச்சக்தி இருப்பது காணக் கிடக்கின்றது.

ஒரு குழந்தை, உலகிற்கு அறிமுகமாகும் போது, அதனோடு, கலையுணர்வும் ஒட்டிப் பிறக்கின்றதோ, இல்லை, அதன்தாய், பாலூட்டும் போது, பாடிய தாலாட்டிலே தளிர்விட்டதோ, இல்லை, குடும்ப விருட்சத்தின் விழுதுகளின் வேரூன்றல்களாலே, அக்குழந்தை, நாளடைவிலே, ஒரு கலைஞனாக உருப்பெறுகிறான் என்பதுதான் என் சிந்தனை. அப்படியான ஓர் கலையுணர்வு இவருக்கு இருந்திருந்ததால்தான், கல்லூரி காலத்திலேயே, கல்லூரி மேடைகளில் கால் பதித்து, சொந்த மண்ணிலே தொடர்ச்சியாகக், கலைப் படைப்புகளை மேற்கொண்டதனால், இன்று அரியநாயகம் ஓர் சாதனையாளராக – முதிர்ந்த முன்னணிக் கலைஞராக அடையாளம் காட்டியுள்ளார்!

''அரியம்'' அவர்களின் வானொலிப் படைப்புகளினாலே, இன்றும் என் மனத்தில் நிலைத்திருப்பது, ''புதிர்'', ''நல்ல மனங்கள்'', கல்யாணமாம் கல்யாணம்'' போன்றவை.

**நான் பெருமையோடு கூறிக்கொள்ள விரும்புவது நானும் அரியம் அவர்களின் உருவாக்கம் நெறியாள்கையின் தரவான "நாளைய அறுவடைகள்'' நாடகத்தில், நடித்துள்ளமை தான்!** 'முருகர் அம்மான்' என்னும் கிழட்டுப் பாத்திரம்! லாவகமாக நடிக்கக் கூடிய பாத்திரம் 1988ற்குப் பின்னர், நீண்ட கால இடைவெளியின்பின், 1994இல் இவ்வயோதிய பாத்திரம் அரியம் அவர்கள், எனக்களித்த 'அன்பளிப்பு!'

ஒரிரு வருடங்களின் முன், நான் பார்த்துப் பரவசமடைந்தது, இந்நாடக நாயகனின் சரித்திர

... Dans ma vie, j'ai pris connaissance avec plus de mille artistes. Mais j'ai éprouvé, seulement chez M.Ariyanayagam, une amitié qui est différente. M.Ariyanayagam est un très bon dramaturge et un très bon metteur en scène. Le rôle d'une personne âgée que j'ai joué dans sa pièce « Les moissons de demain » est un beau cadeau qu'il m'a offert...

**Muhathar S.J. Jesuratnam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகம், ஷேக்ஸ்பியரின் 'யூலியஸ் சீசர்' (*Julius Ceasar*) அந்தநாள் ஞாபகங்கள் அலைமோதின.

கல்லூரி நாட்களிலே 1949இல் கல்லூரி தின விழாவில், நான் புரூட்டஸ் (*Brutus*) பாத்திரம் ஏந்தியதையும், (ஆங்கில வடிவம்) இலங்கை வானொலியில் 1980இல் ஒரு மணித்தியால நாடகமாக நான் உருவாக்கி, *மார்க் அன்ரனியின் (Mark Auntory)* பாத்திரமேந்தியதையும் நினைவுபடுத்திப் பார்த்தேன். அரியம் அவர்களின் நெறியாள்கையை நான் பாராட்டாமல் இருக்க முடியாது. நாடக பாத்திரங்கள் அனைத்தும், நடித்த கலைஞர்களுடன் சங்கமமாகியது. அரியம் அவர்களின் அற்புதமான நெறியாள்கைக்கு, ஓர் சான்று.

'கலை' இன்று, 'விடுதலை'க்காக என்ற காலகட்டத்திலே வாழ்ந்துகொண்டிருக்கின்றது. எங்கள் சமுதாயத் தோப்பிலே, சாய்ந்த தென்னை மரங்கள், இன்னும் இருக்கத்தான் செய்கின்றது. தோலுரித்துக் காட்டுவது, காலத்தின் கட்டளை!

ஓர் எழுத்தாளன் கையிலிருக்கும் பேனா வளைந்தால் வில்லாகின்றது, நிமிர்ந்தால் வேலாகின்றது! அதனை முறியவிடாமலும், முறிபடாமலும் பார்த்துக்கொள்வது, "நாளைய அறுவடை"க்கான கட்டளை!

இன்றைய மூத்த முன்னிலைக் கலைஞர்கள் இன்றைய இளங்கலைஞர்களை, வளர்ந்துவரும் கலைஞர்களை இனம் கண்டு முறையான கலைப்பாதையிலே, வழிநடத்திச் செல்வார்களானால், எதிர்காலத்திலும், இடைவெளியெதுவுமில்லாது தொடரும் நம் கலைப்பயணம்.

**"எப்படிச் செய்தால் வெற்றி**
**இயலுமென்றறிந்து கொண்டீர்!**
**தப்படி யெதுவு மின்றி**
**தழைக்கின்ற அடிகள் வைப்பர்**
**சொற்படி கதைகள் ஆகும்,**
**சுவையுள்ள கலைகள் தாறீர்!**
**இப்படித் திறமை பெற்றீர்,**
**'இறையருள் காக்க, காக்க!"**

என வாழ்த்துகிறேன்.


சுத்தமான, தரமான ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழி, கோழிக்கால் மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும் நாடுங்கள்...

**YALPPANAM BOUCHERIE**

**யாழ்ப்பாணம் இறைச்சிக் கடை**

உங்கள் தேவைகளை நிறைவாகப் பூர்த்தி செய்யும்





**YALPPANAM BOUCHERIE**

**5, Rue Perdonnet -75010 Paris**
**Tel : 0140059291**
**M° : La Chapelle / Gare du Nord**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழும் கலைஞனை வாழ்த்துதல் கடன்!



**- எஸ்.பி. யோகரட்ணம் (இலண்டன்)**
*சட்ட ஆலோசகர், ஊடகவியலாளர்*

சிறுபிள்ளையின் எதிர்காலம் அதன் மண் விளையாட்டில் தெரியும் என்பர். அரியநாயகம் அவர்களும் தன் விளையாட்டில் பல அரங்குகளையும், உருவங்களையும்தான் உருவகித்திருக்கலாம் என்று ஊகிப்பது கடினமன்று. ஏனெனில், 1965இல் 'எழில்' சஞ்சிகையினூடாகத் தன் கருத்துக்களைக் கூறப் புறப்பட்ட அந்தக் கலைஞன் ஈழத்தில் நாடகத் துறையில் தடம் பதித்ததுடன் நில்லாது, தன் புலம் பெயர்ந்த வாழ்விலும் பன்முக சாதனைகள் புரிந்து வருவது தனது எண்ணக் கோலங்களின் வெளிப்பாடேயாகும்.

சிதறிப்போயிருந்த ஐரோப்பியவாழ் ஈழத் தமிழ் எழுத்தாளர்களை இற்றைக்கு இரு சகாப்தங்களின் முன், ஒரு குடையின் கீழ் கொண்டு வந்த பெருமை இந்தக் கலைஞனின் தனிப் பெருமையாகும்.

1986இல் 'மண்ணைத் தேடும் மனங்கள்' என்ற தன் நூல் வெளியீட்டினூடாக இது சாத்தியமானது மட்டுமல்ல; ஈழத்தின் மூத்த எழுத்தாளர் எஸ். அகஸ்தியர் அவர்களால் 'நாடக ஆசிரியர்' எம். அரியநாயகம் என்று தான் முதலில் அழைக்கப்பட்டது தான் பெற்ற மிகப் பெரிய கௌரவம் என்பதை அவர் இன்றும் நன்றியுடன் கூறுவதும் குறிப்பிடத் தக்கதாகும். கற்றாரைக் கற்றாரே காமுறுவர் அல்லவா?

புலம் பெயராதோரது ஏக்கமும், புலம் பெயர்ந்தோரது தாக்கமும் இவர் கதாபாத்திரங்களின் மூலம் பலரது சிந்தனையைத் தொடுவது, கலைஞன் தன் சமுதாயத்திலிருந்து வேறுபடுபவனல்ல என்ற யதார்த்தமாகும்.

இன்று நாடகம் என்று நாம் கூறும்போது நம் மனக்கண்முன்னே வருபவர்களில் அரியநாயகமும் வருவதானது காலத்தின் பதிவுகளிலிருந்து அவர் விடுப்படப் போவதில்லை என்பதையே காட்டுகிறது. *கலையரசர் சொர்ணலிங்கம் முன்னிலையில் எடுத்து வைக்கப்பட்ட கால்கள் அல்லவா!*

எம். அரியநாயகம் அவர்களின் நாடகப் பெருவிழாவினை நடாத்த முன்வந்த *கிறீன் கிங்ஸ் கழகத்தினரையும் (GIFT) பிரான்ஸ் தமிழர் கலை கலாச்சார ஒன்றியத் தினரையும்* நன்றியோடு பார்க்கிறேன்.

கலைக்குடும்பங்களின் உறவானது இறுக்கமானது. அந்த ரீதியில் வெறும் ரசிகனாக மட்டும் நின்றுவிடாது அகஸ்தியரின் குடும்பத்தின் சார்பிலும் அரியநாயகம் அவர்களை வாழ்த்துவது எமது கடமை. இந் நாடக விழா சிறப்புறவும் அவர் கலைப்பயணம் மேலும் மேலும் செழித்திடவும் வாழ்த்தி நிற்கின்றேன்!

... M.Ariyanayagam qui a commencé à exprimer ses idées dans le journal artistique et littéraire « EZHIL » en 1965, a remporté de grands succès dans le domaine du théâtre dans son pays natal, Srilanka. Sa grande passion pour les arts se manifeste aussi par ses succès remarquables dans plusieurs domaines en France où il a émigré...

S.P.Joharatnam, Londres



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனம் மாற்றும் 'சக்தி' நாடக வடிவங்களுக்குண்டு!

'மண்வாசனைக் கலைஞர்'
**– அப்புக் குட்டி T. இராஜகோபால்**

**எ**னது மதிப்புக்குரிய நாடகத் தந்தை எனது ஆசான் கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் தலைமையில் எம். அரியநாயகம் தனது முதல் நாடகத்தை எழுதி இயக்கி, அரங்கேற்றி யிருப்பது வரவேற்புக்குரியது; வரலாற்றுப் பதிவு நிறைந்தது. ஆரம்பமே அத்தகையதாக அமைந்தது, அரியநாயகத்தின் நாடகப் பெருவெற்றிகளுக்கு, அஸ்திவாரமாக விளங்குவது, கண்கூடு.

ஈழத்து நாடகக் கலையின் முன்னோடிகள் 'சானா' மரியசேவியர் அடிகளார், ஆர். பேரம் பலம், சில்லையூர் செல்வராஜன் போன்றவர் களுடன், நாடக வரலாற்றில் பங்குகொண்டவர் என்றறியும்போது, நான் பயணித்த பாதையிலேயே என் நண்பர், கலைஞர் அரியநாயகமும் பயணம் செய்து மக்கள் மத்தியில், வரவேற்புப் பெற்றிருப் பதும் அவரது ஆற்றலுக்கும், ஈடுபாட்டிற்கும் சான்று பகர்கின்றது. சிந்திக்கும் திறன் கொண்டவர்; சந்திக்கும் அன்றாட சமூகப் பிரச்சனைகளை, நாசூக்காக, நாடக வடிவத்தில் எடுத்துச் செல்லும் போது அது மக்களிடம் நேரடியாகவே சென் றடைந்து, அவர்களையும் சிந்திக்க வைக்கும், என்ற தாரக மந்திரத்தை முழுமையாக அரிய நாயகம் உணர்ந்து பிறந்த மண்ணிலும், புலம் பெயர்ந்த தமிழ் உறவுகள் மத்தியிலும், தளராது தனது பல படைப்புக்களை அனுபவமிக்க, கலைஞர்களோடு இளைய தலைமுறைகளை யும் இணைத்து, அரங்கேற்றி பெருவெற்றி கண்டவர்.

1974இல் நடைபெற்ற உலகத் தமிழ் ஆராய்ச்சி மகா நாட்டில், நாடகங்கள் சார்ந்த சிறப்பு மலரின் ஆசிரியர் குழுவில் அரியநாயகம் அங்கம் வகித்தபோது, நானும் அந்த நிகழ்வில் எனது குழுவினருடன் நாடகமொன்றில் பங்களிப்புச் செய்திருப்பதுவும் குறிப்பிடத்தக்க மகிழ்ச்சி.

நண்பர் அரியநாயகம், நாடகங்களை அரங்கேற்றுவதோடு, நின்றுவிடாமல் கவிதைத் தொகுப்புக்களையும், மரபுவழி கூத்திசை நாடக வடிவங்களையும் அரங்கேற்ற விளைந்ததன் மூலம் இவர் ஒரு பன்முக சாதனையாளராகவும் பதிவு செய்யப்படுகின்றார்.

புலம் பெயர்ந்தும், பல பிரச்சனைகளுக் கும் மத்தியில், தமிழர் புகழ்சொல்லும் நாடக வடிவங்களை, **கூத்திசை மரபுகளை, அழிய விடாமல் காப்பாற்ற வேண்டுமென்ற அவரது முனைப்புக்கும், அவரைச் சார்ந்த கலைஞர் களுக்கும் நன்றி.** அவரது அத்தனை படைப்புக் களையும், புதிய பரிமாணங்களில் இளைய தலைமுறைகளுடன், கூத்திசை நாடகங்களையும், ஒரே அரங்கில் தொடர்ச்சியாக, நாடக விழாவாக நடத்த முன்வந்திருக்கும் அவரது துணிச்சலையும், அவருக்கு ஆதரவுக் கரம் வழங்கும் அனைவரை யும் நன்றியுடன் பாராட்டி, புலம்பெயர் நாட்டில் அவரது வானொலி ஆக்கங்களில் பங்கு கொள்ளும் வாய்ப்பும் எனக்குக் கிடைத் திருப்பதையும் நினைத்து, பெருமகிழ்ச்சியோடு மேன்மேலும், மக்கள் மத்தியில், நிறைவான, செய்திகளோடு பல ஆக்கங்களை, அவர் மேடை யேற்ற வேண்டிய சகல தைரியத்தையும் எல்லோர்க் கும் பொதுவான ஆண்டவன் வழங்க வேண்டி, நண்பர் அரிய நாயகத்தின் முயற்சிக்கு, என் இதயத் தின் அடித் தளத்திலிருந்து வாழ்த்துகிறேன்.

...Les problèmes socioculturels quotidiens qu'on présente sous forme des pièces de théâtre influencent directement les gens et les incitent à réfléchir. Ayant bien compris cette vérité, M.Ariyanayagam a écrit et mis en scène, sans cesse, de belles œuvres artistiques en collaboration avec les jeunes expérimentés, d'abord dans son pays natal, le Srilanka, et puis dans le pays où il a émigré, la France. **- Appukuddy T.Rajagopal**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாளைய சிந்தனையாளர்!

**லீனா ஜெயக்குமார்**

அண்ணன் அரியநாயகம் அவர்களை எனக்கு 1987முதல் தெரியும். சமூகச் சிந்தனையுள்ள, இலக்கியத் தாகமுள்ள, அவரைப் பல சந்தர்ப்பங்களில் பல மேடைகளில் கண்டு கொண்டதில் ஆச்சரியம் எதுவும் இல்லை.

இவர் சிறுகதை, கவிதை, எழுத்தாளராக, தொகுப்பாளராக, நடிகராக, சிறந்த நாட ஆசிரியராக, இயக்குநராகவும் சம காலத்தில் அவர் தம் திறமையை வெளிக்காட்டியதும் யாவரும் அறிந்ததே. அப்படியாக பல திறமைகளைத் தன்னகத்தே கொண்ட அண்ணனின் இயக்கத்தில் 1993இல் முதல் முறையாக ''நாளைய அறுவடை'' என்னும் நாடகத்தில் நடித்ததும்; அது பலராலும் பேசப்பட்ட, வரவேற்கப்பட்ட நாடகமாக பலர் மனத்திலும் பதிந்ததும், பழைய கதை. ஆனாலும் 10 வருடங்களுக்கு முன் எழுதப்பட்ட இந்த நாடகத்தின் கரு, கதை இன்று நிதர்சனமாக உள்ளது என்பதே அண்ணன் அரியநாயகத்தை நாளைய சிந்தனையாளர் என எழுத வைத்தது.

அவரது அந்த 'நாளைய அறுவடை' நாடகத்தை இன்று அவரது நாடக விழா மூலம் மீண்டும் மேடையேற்றுவது, காலத்தின் தேவை என்றும், அவர் கற்பனைக்குக் கிடைத்த விருது என்றே எண்ணி மகிழ்கின்றேன்.

அதேபோலவே 'தீர்ப்பு' என்னும் நாடகமும் அண்ணன் அவர்களால் பல வருடங்களுக்கு முன் எழுதப்பட்டு மேடையேற்றப்பட்டதாயினும், அது இன்று புலம்பெயர் மண்ணில் இருந்து தாயகம் செல்லும் நம்மவரின் மனோநிலையும், அங்குச் செல்வதற்கான முக்கிய நோக்கத்தையும் அப்படியே படம் பிடித்துக் காட்டுவதாகவே அமைந்துள்ளது. நாடக ஆசிரியரின் தீர்க்க தரிசனத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

அதனைத் தொடர்ந்து அவரது இயக்கத்தில் உருவான 'விளம்பரம்' நாடகம் பாரிஸில் பல தடவைகளும், ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் மேடையேறி பலரது பாராட்டுகளைப் பெற்றது. இந்த நாடகத்தில் சொல்ல வேண்டிய ஆழமான விடயத்தை மிக லாவகமாக எடுத்துச் சொல்ல அவர் கையாண்ட முறையும், நாடக நடையும் பலராலும் நயந்து பேசப்பட்டது. அவர் சொல்ல வந்த விடயத்திற்கும் நாடகத்தின் தலைப்பிற்குமே சம்பந்தமில்லாதது போன்ற ஆரம்ப உரையாடலும், முடிவும் யாராலும் எதிர்பாராத சிந்தனைக்குரிய கருக்கொண்டதாக உள்ளது எழுத்தாளருக்குக் கிடைத்த பெருவெற்றியும், வரவேற்பும் என்றே கூறுவேன்.

இந்த நாடகத்திலும், அதனைத் தொடர்ந்து 'மாறாத மாற்றங்கள்' என்ற ஓரங்க நாடகத்திலும் அவரது இயக்கத்தில் நடித்ததும் எனக்கும் பெருமை சேர்க்கும் விடயமாகும். இனி அவரது இயக்கம் பற்றி கூறுவதாயின், அவர் சற்று வித்தியாசமான இயக்குநர் என்றே கூறுவேன். அவர் இயக்கும் எந்த நாடகமாயினும் முழுமையுடன் மேடையேற வேண்டும் என்பதில் மிக முனைப்பாகவும், கண்டிப்பாகவும் இருப்பார். அதுதவிர நாடகம் எப்படிப் பார்வையாளர்களின் மனத்தைச் சென்றடைய வேண்டும், அவர்களின் மனத்தில் எத்தகைய தாக்கத்தையும் மாறுதலையும் ஏற்படுத்த வேண்டும் என்பதிலும் கருத்தாக இருப்பார். சில வசனங்களை ஏற்ற இறக்கத்துடன் எப்படிச் சொல்ல வேண்டும் என்று கூறி பயிற்சி அளிப்பார். ஒரே வசனத்தைப் பல தடவை கூறியும் அவர் திருப்தி கொள்ளாமல் நான் சினந்து கொண்டாலும் கோபப்படாமல் சரி என்றும் விட்டுவிடாமல், ''நாளைக்குவடிவாய் சொல்லிப் பார்த்துக்கொண்டு வா பிள்ளை'' என்றுதான் சமாதானம் கூறுவார். அவருடைய நாடகங்களில் நடிப்பதென்றால் எனக்கு ஒரு நாடகப் பட்டறைக்குப் போன அனுபவமே கிடைத்துவிடும்.

... J'ai joué le rôle d'un des personnages principaux de la pièce de théâtre de M.Ariyanayagam, « Le nouvel essai ». Cette pièce a été jouée plusieurs fois dans les pays européens comme la France, l'Allemagne, la Suisse, le Danemark. La mise en scène de la pièce et le message que la pièce véhiculait à l'intention des Tamouls émigrés étaient bien accueillis par le public. En plus, on m'a décerné aussi un prix pour avoir joué le rôle du personnage principal... - **Mme Leena Jeyakumar**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனங்களை ஊடுருவ நாடகமே நல்ல ஊடகம்!

**ஜெ.ஏ. சேகர், பாரீஸ்**



**நா**டகக் கலையில் ஓர் ஆழமான பற்று இந்த எம். அரியநாயகம் என்னும் மனிதனுக்கு, தாயாகத்திலிருந்தே அதனைத் தெரிந்து கொண்டவன் நான்.

அரியநாயகம் அவர்களின் சிரிப்பில்கூட ஓர் அர்த்தம் இருக்கும்.

''நாடகம் போடப்போகிறேன்'' என்பார்.

''அப்படியா?'' என்பேன்.

அப்போது, ஒரு சிரிப்பு சிரிப்பார்...

''மேடையில் வந்து பார்'' என்று அந்தச் சிரிப்பு சொல்லும்.

உண்மைதான், 'யூலிய சீசர்', 'உயிர்ப்பு 2000' போன்ற நாடகங்கள் மெய்சிலிர்க்க வைத்தன. இருபது முப்பது நடிகர்களுடன் மேடைக்கு வெளியே அவரை நிஜக் கதாநாயகனாகக் காண முடியும்.

1970இல் யாழ் 'நவசர நாடகாலயத்'தின் இயக்குநராக இலங்கையில் யாழ் மண்ணில் மிக பிரமிக்கத்தக்க வகையில், மேடை ஏற்றிய 'யூலிய சீசர்' நாடகத்தைப் பாரீசில் இவ்வளவு சிரமத்திற்கு மத்தியிலும் மிக அற்புதமாக மேடை ஏற்றிக் காட்டிய அவருக்காக எனது பேனா அப்பவே எழுதத் துடித்தது. ஓர் விமரிசனத்தில் நல்லதைத் தீயதை எழுதுவதே விமரிசனத்திற்கு மரபும் அழகும், அந்த வகையில் அவரின் பல நாடகங்களை விமரிசன கண்ணோட்டத்தோடு அணுகியிருக்கிறேன். தனித்தனியாக இவரின் நாடகங்களை விமர்சனம் செய்ய வேண்டும் என்று என் மனதில் ஓர் ஆதங்கம் உண்டு...

இந்த இடத்தில் அதைச் செய்யவில்லை பிறிதொரு நேரத்தில் அதைக் கட்டாயம் செய்வேன். செய்யப்படவேண்டிய ஒன்று. அதற்கான நீண்டதொருஆவணத் தேடலும் வேண்டும்.

ஈழத்தில் நாட்டுக்கூத்து, காத்தான் கூத்து, இசை நாடகம், நவீன நாடகங்கள், சமூக நாடகங்கள் போன்றவற்றைத் தங்கள் ஜீவனாய் நினைத்து அதோடு வாழ்ந்த படைப்பாளிகள், பாடகர்கள், நடிகர்கள்... எந்த ஆவணப் பதிவும் இல்லாமல் மேடையோடு கரைந்து காணாமல் போய்விட்டார்கள். அவர்களுக்கான ஆவணத் தேடலை நாங்கள் யாழ் மண்ணில் நிறைய


... Au Srilanka, les dramaturges, les chanteurs et les acteurs considéraient le théâtre folklorique, le théâtre musical, le théâtre social, le théâtre historique et le théâtre moderne comme la base même de leur vie... A cette époque il n'y avait aucun système d'archives pour conserver leur vie et oeuvre. Ils se sont donc disparus dans les scènes mêmes. Il est à noter que, lorsque nous avons commencé notre recherche sur l'histoire du théâtre au Srilanka, le nom de M.Ariyanayagam figurait dans la liste des hommes de théâtre.


**- J.A.Segar, Paris.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிகுந்த பொருட் செலவில், 120 அடி அகன்றஅரங்கில், 71 நடிக, நடிகைகையரை ஒருங்கிணைத்து உருவான 'சிலுவை மரணம்' நாடகம் – எம். அரியநாயகம் அவர்களின்தயாரிப்பு, வசனம், இயக்கம் ஆகியவற்றால் 1978ல் தாயக மண்ணில் உருவானது. அதற்கான அழைப்பிதழ் கீழே...**


யாழ். நவரச நாடகாலயம்
அளிக்கும்
சிலுவை மரணம்
( இசை, உரைச்சித்திரம் )
CRUCIFIX
( PASION PLAY )
பிரதம அதிதிகள் :
காலம்: 18, 19 - 3 - 1978
இடம்: கோப்பாய்
பிரவேசம் ரூ





வாத்தியக்குழு:
இசையமைப்பு:
வரவேற்புக்குழு:
தயாரிப்புநிர்வாகம், துணை இயக்குனர்:
தயாரிப்பு, வசனம், இயக்குனர்
ம. அரியநாயகம்
முக்கிய குறிப்பு :
காட்சி சரியாக இரவு 7 மணிக்கு ஆரம்பமாகும்.
இடவசதிக்கு முந்துங்கள்,
பஸ் வசதிகள் ஒழுங்குசெய்யப்பட்டுள்ளது.
உங்கள் அன்பிருக்கும்வரை எங்கள் வளர்ச்சியின் உயர்ச்சியில் பெரும் மகிழ்ச்சி !
தேவி அச்சகம், யாழ்ப்பாணம்.

சேகரித்திருந்தோம். அப்படித்தேடும் பொழுதுகளில் எம். அரியநாயகம் அவர்களுடைய பெயரும் எங்கள் பட்டியலில்... இருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.


எம். அரியநாயகம் அவர்களின் நாடகங்களில் வரும் பாத்திரங்கள் ஜீவனோடு உலா வரும் மல்லிகைப் பூப்பந்தலைக் கடந்து செல்லும் போது ஏற்படும் வாசனை நீண்ட தூரம் சென்ற பின்பும் எங்கள் நாசியில் நறுமணம் வீசிக் கொண்டே இருக்கும்; அதுபோல், நாடகம் முடிந்த பின்பும் நீண்ட நாளைக்குப் பின்பும் அந்தப் பாத்திரங்கள் எங்கள் மனதில் ஆணியடித்து மாட்டப்பட்டிருக்கும்.

ஒரு நாடகத்தை அரங்கேற்ற எவ்வளவு அர்ப்பணிப்புகள் வேண்டும் என்று எனக்குத் தெரியும். அது மன அவஸ்தையுடன் கூடிய வேதனை... இரவு கண்களை மூடியபடி நாங்கள் விழித்திருப்போம். பகலில் கண்களைத் திறந்தபடி கனவில் இருப்போம் – ஏறக்குறைய பிரசவத்திற்குப் போகும் கர்ப்பிணி பெண்ணைப் போல பயம், ஏக்கம், தாகம், சந்தோஷம் இவை எல்லாம் கலந்த கலவையாக அந்தப் படைப்பாளி அந்த நாடகம் முடியும் வரை நோயாளியைப் போல காணப்படுவான்... அப்படி இவரைப் பல தடவைகளில் கண்டிருக்கிறேன். இவரின் நாடகங்கள் கற்பனை வளத்திற்கும், கடின உழைப்புக்கும் பிறக்கின்ற குழந்தையாகவே காட்சி அளிக்கும். அவர் கலைப்பசி இன்னமும் ஆறவில்லை.

காரணம், மனித மேம்பாட்டிற்கான சிந்தனைகளை மகிழ்ச்சியினூடாக சொல்லக் கூடிய ஓர் உன்னதமான ஊடகம் நாடகக் கலை என்பதில் அனுபவ ரீதியாக நம்பிக்கையை அவர் கொண்டிருப்பதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடக மேதை...

'ஒலிபரப்பாளர்' எஸ்.கே. ராஜன்

ஃபிரான்ஸில் நாடக விழா மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. நாடக விழா ஏற்பாட்டாளர்களுக்கு வாழ்த்துகள்.

அரங்கியற் கலைகளில் மனிதத்தின் வெளிப்பாடுகளை நிகழ்த்திக் காட்டுவதில் நாடகம் மிகமுக்கிய பங்கு வகிக்கின்றது.

யாழ்ப்பாண வளாகத்தில் 'நாடகவியல் ஒரு கற்கை' நெறியாக்கப்பட்டு அதிலே பலர் ஈடுபட வழிவகுத்துள்மை நாடகக் கலையின் முக்கியத்துவத்தை எடுத்தியம்பி நிற்கின்றது.

யாழ் மண்ணிலே இற்றைக்கு இரண்டு, மூன்று சகாப்தங்களுக்கு முன்னர் 'நாடகம்' எந்நிலையில் இருந்தது என்பதை நாம் அறிவோம். ஆனால், இன்று இருப்பதுபோன்ற வரவேற்பும், நாடகம் தொடர்பான ஆய்வுகளும் அன்று பெருமைப்படத்தக்க வகையில் அதிகமாகவில்லை. இப்படியான கால கட்டத்தில் அயராது நாடகப் பணி செய்பவர்களில் ஒருவர்தான் நாடகக் கலைஞர் எம். அரியநாயகம்.

வாய்ப்புகளுக்காகவோ அன்றி வரவேற்புக்களுக்காகவோ அவர் நாடகம் செய்திருப்பார் என எண்ணத் தோன்றவில்லை. நாடகத் துறையின் அவசியத்தை உணர்ந்தே அதில் ஈடுபட்டார்.

தாயக மண்ணின் வாழ்க்கைக்குப் பின்னர் எம். அரியநாயகம் அவர்களின் நாடகப் பங்களிப்பினை புலம் பெயர் வாழ் சூழலில்தான் நான் அதிகம் கண்டிருக்கின்றேன். 'சொந்தமண்' என்ற நாடகத்தைத் தான் முதன்முதலில் பார்த்தேன்.

'சொந்தமண்' நாடகத்தைத் தொடர்ந்து பல நாடகங்களை எழுதி - இயக்கி - நடித்து வருகின்றார்.

நாடகத்துறைக்காக உழைப்பவர்கள் மிகக் குறைவு. அதுவும் புலம்பெயர் வாழ்வில் மிகமிகக் குறைவு. விரல் விட்டு எண்ணக்கூடிய ஒருசிலர்தொடர்ச்சியான நாடக மேடையேற்றங்களை நிகழ்த்திக் கொண்டிருக்கின்றார்கள். அந்த வகையில் எம். அரியநாயகம் அவர்களின் பங்களிப்பு பாரீஸ் நகரத்தில் குறிப்பிடத்தக்கது.

புலம் பெயர் வாழ்வில் இரண்டு சகாப்த கால எல்லைக்குள் பத்து நாடகங்களைச் செப்பனிட்டு அரங்கேற்றியிருக்கின்றார் என்றால் அது பாராட்டப்பட வேண்டியவிடயமே.

நாடகத்துறை சார்ந்த தேடல்களை மேற்கொள்ளும் எம். அரியநாயகம் எண்ணக் கிடக்கையாயிருந்த நாடக விழா செயல்வடிவம் பெறுவது மகிழ்ச்சிக்குரியது. விழா அமைப்பாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். ஃபிரான்ஸ் தமிழர் கலை கலாசார ஒன்றியத்தினருக்கும், கிறீன்கிங்ஸ் கழகத்தினருக்கும் வாழ்த்துக்கள்.

நாடகக் கலையில் எம். அரியநாயகம் அவர்களின் நாடகப்பணி தொடரட்டும், இன்னும் பல நாடக விழாக்கள் ஈழத்தமிழ் மக்கள் வாழும் தேசங்கள் எங்கும் நிகழ்த்தப்பட வேண்டும் என வாழ்த்துகிறேன்.

... Il n'y a que peu de gens qui s'intéresse au développement du théâtre.

Seuls quelques uns aussi ne cessent pas d'écrire et de les monter en scène.

M.Ariyanayagam est un de ces dramaturges. Sa contribution à la vie théâtrale à Paris est remarquable...

**S.K.Rajan** I.B.C. Tamil Radio, Londres



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

BOUCHERIE GABARINA

கபறீறினா இறைச்சிக்கடை

சுத்தமான, தரமான
ஆட்டிறைச்சி, மாட்டிறைச்சி, கோழி — கோழிக்கால்
மற்றும் அனைத்துத் தேவைகளுக்கும்
நாடுங்கள்

62, Rue Lovus Blanc
75010 Paris
Tel : 01 40 34 05 35
Fax : 01 40 34 09 76

207, Rue fbg St Denis
75010 Paris
Tel : 01 46 07 46 35
Fax : 01 46 07 41 30

தரமான அச்சு வேலைகளை
குறித்த நேரத்தில் செய்துதர வல்லவர்கள்

கிருஷ்ணா அச்சகத்தார்

Imprimerie KRISHNA

73, RUE DOUDEAUVILLE,
75018 PARIS
M° : Marcadet Poissonniers
Tel : 01 42 51 29 92



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நம்மை நிமித்திய நல்ல கலைஞர்!

வண்ணை தெய்வம்

குப்பைகளை எரித்து பூமியைப் புனித மாக்குகின்றபோதும் நெருப்பு தனது புனிதத்தை இழந்துவிடுவதில்லை அது நெருப்பாகவே இருக்கும்!

அண்ணன் அரியநாயகம் அவர்கள் எந்த இடத்தில் நின்றாலும், வானொலி நாடகங்களா! மேடை நாடகங்களா! சமூகமா! சரித்திரமா! கவி அரங்கங்களா! கதைச் சுரங்கங்களா! இப்படியாக அவர் எந்த இடத்தில் நின்றாலும் தனது பெயரைக் கல்வெட்டுப்போல் அந்த இடத்தில் பதிய வைத்துவிடுவார்.

எந்தப் படைப்பை உருவாக்கினாலும் அது முழுமையாக இருப்பதற்காகக் கடுமையாக உழைப்பவர்.

இவரின் **'சொந்தமண்'** என்னும் நாடகத்தில் நடித்திருக்கின்றேன். இவர் இயக்கும்போது அந்த மாசிமாதக் குளிரிலும் வியர்வை என்னைக் குளிக்க வைத்தது! ஆம், தான் நினைத்ததை என்னிடம் இருந்து பெறும்வரை இவர் நெருப் பாகவே இருப்பார்!


இவரின் 'யூலியர் சீஷர்' எனும் நாடகத் தைப் பார்த்துக் கொண்டிருந்தேன். மதுவிற்குள் மயங்கிக் கிடந்த வண்டினைப்போல் மது அருந் தாமலேயே நாடகம் முடிந்தபின்னும் மயக்கம் தெளியாது நான் நிலைகுலைந்து நின்றேன்!

நடிகர்களைப் பாத்திரமாக மாற்றுவது; ரசிகர்களைக் கதிரைகளோடு கட்டி வைத்தது போல் அரங்கத்தை விட்டு நகராது இருக்க வைப்பது; இந்த மந்திர வித்தைகளையெல்லாம் எங்குக் கற்றார் என் எண்ணிப்பார்த்தேன்!

இவர் கடந்து வந்த பாதைகள் அப்படி யானவை எனப் புரிந்துகொண்டேன்.

ஷேக்ஸ்பியரைப் பற்றி இங்கர்சால் சொன்னதுபோல... பூமி உருண்டையைக் கட்டிப்பிடிக்க நினைப்பதுபோலத்தான் இவரைப் பற்றி எழுதுவது!

இவரின் படைப்புகளின் உயரத்தைக் கழுத்து வலிக்க அண்ணாந்து பார்த்து வியந்து நிற்கின்றோம்! கழுத்து வலித்தாலும் பரவாயில்லை தமது படைப்புகளால் எம்மையெல்லாம் நிமிர்ந்து நிற்க வைக்கின்றாரே அந்த முதிர்ச்சி தான் இவரது உயர்ச்சி!



அரியநாயகத்தின் 'சொந்த மண்'ணில் வண்ணை தெய்வம்.

... Que ce soit une pièce lue à la radio ou un récital de poésies, M.Ariyanayagam y participe activement de sorte que son nom soit engravé dans les annales. M.Ariyanayagam est quelqu'un qui vise à la perfection dans la création et dans la réalisation de toute œuvre artistique...

**- Vannai Deivam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புலம்பெயர்ந்த மண்ணில் நாடகமும் விழிப்புற்றது

A.T.A. **செல்வராஜா, பாரீஸ் (சீசர் செல்வா)**

**பு**லம்பெயர் நாடுகளிலே குறிப்பாக ஐரோப்பாவில் தமிழ் மக்கள் மத்தியில் இன்று பெரும் வெற்றி கண்டிருந்தும் ஊடக வளர்ச்சி எதுவும் இல்லாத அன்றைய எண்பதுகளிலேயே எமது அன்புக்குரிய எம். அரியநாயகம் அண்ணன் அவர்கள் பிரான்ஸ் மண்ணில் தனது கலை உலாவை ஆரம்பித்திருந்தார். பல புதிய யுத்தி களைக் கையாண்டார். வெற்றியும் பெற்றார். நாடக உலகமும் இவரால் விழிப்புறத் தொடங்கியது.

என்னைப் பொறுத்தமட்டில் வெறும் எழுத்து மட்டுமே ஒரு நாடகமாக இருக்க முடியுமா? இல்லை, அதாவது அதைச் சொல்லு கின்ற முறை, அந்தக் கதையின் கரு, கருவைச் சுற்றி வருகின்ற பாத்திரங்கள், பாத்திரங்கள் உலா வரும் பின் தளங்கள், பின் தளங்களை வடிவமைக்கும் தன்மை, பின்னணி இசை, ஒளி போன்றவையே ஒரு சிறந்த நாடகத்தின் குணாம்சங்களாக இருக்க முடியும் என்பது என் கருத்து. இவற்றை அரியநாயகம் அண்ணன் அவர் களின் நாடகத்தில் கண்டிப்பாகப் பார்க்கலாம்.

அவற்றோடு, விளம்பரம் கொடுப்பது முதல், நாடகம் தொடங்கி, முடித்து திரை மூடும் வரையான நிகழ்வுகளை, முன்னமே பார்த்துத் திட்டமிட்டு வைப்பது இவரின் வெற்றிக்கு மேலும் உரம் சேர்ப்பவை என்று நினைக்கிறேன்.

அவரது இயக்கத்தில் நடிப்பதற்கான வாய்ப்பினை நான் எதிர்பார்த்துக் கொண்டிருக்க 90களில்எனக்கு மிகப் பெரிய வாய்ப்புகளை தந்ததையிட்டு நான் அவருக்கு இவ்வேளையில் நன்றி கூறுகிறேன்.

அவரது பிரம்மாண்டமான தயாரிப்புகளை ''யூலியசீசரில்'' சீசராகவும், உயிர்ப்பு 2000இல் முற்றிலும் மாறுபட்ட யேசுக் கிறிஸ்துவாக நடிக்கவும் வாய்ப்புத் தந்திருந்தார். இவை எனக்கும் அவருக்கும் மக்கள் மத்தியில் நல்ல பெயரைக் கொடுத்தவையாகும்.

இதுதவிர அவரது படைப்புக்களான, நாளைய அறுவடைகள், கடிவாளம், விளம்பரம், சிலுவை இப்படியே சொல்லிக் கொண்டு போக லாம் எல்லாம் ஒன்றுக்கொன்று மாறுபட்ட வித்தியாசமான படைப்புக்கள். கூடியவரை, எளிமையான வசனங்களைப் புகுத்துவார் : மிகைப்படுத்தாத புதிய முயற்சியில் காட்சிகளை அமைப்பார். இவரின் அனைத்து நாடகங்களுமே ஓர் அரங்க காட்சிகளாக இருப்பதே அவரது தனிச் சிறப்பாகும்.

இதுதவிர அவரைப்பற்றி சொல்வதனால் பார்க்கும்போது சுமாராக இருப்பார், பழகும் போது எளிமையாக இருப்பார், நாடகம் பழக்கும்போது மிகவும் கடுமையாக இருப்பார். எவ்வளவு காலம்தான் சென்றாலும் தன்னுடன் பணிபுரிந்த கலைஞர்களை மறக்காத மனம் கொண்டவர்.

இவரை வாழ்த்த என் வயதோ, என் கலைப் பயணமோ போதாது. இருப்பினும், அண்ணன் அவர்கள் மேற்கொள்ளும் இம்முயற்சி வெற்றி பெறவேண்டும். இதன்மூலம் மேலும் பல சாதனைகளைப் புரிந்து புதிய படைப்புக் களைப்படைத்து இளைய கலைஞர்களை உள் வாங்கி தனது கலைப்பசியைத் தணித்துக்கொள்ள எல்லாம் வல்ல இறைவன் தனது நிறைவான ஆசிகளை அவருக்கு வழங்க வேண்டும்.

'அவருக்கு நிகர் அவரே.'

... Vers les années 80, il n y avait pas d épanouissement littéraire tamoul, dans la plupart des pays où vivent les Tamouls émigrés , plus particulièrement dans les pays européens, comme on a aujourd'hui. Déjà, à cette époque, M.Ariyanayagam se lançait dans les arts et lettres. Il a remporté de grands succès en y introduisant de nouvelles perspectives. C'est lui qui a donné un renouveau au Théâtre Tamoul à Paris. Même aujourd'hui, ce peuple parisien se rapelle de la pièce « Jules César » qu'il a écrite et mise en scène en 1990 et dans laquelle j'ai joué le personnage de César. Preuve ? – Le fait qu'on m'appelle encore « César Selva »...


**A.T.A. Selvarajah**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயக்குநர் நாயகம்

– இரா. குணபாலன்



ஈழத்தில் ஆரம்பித்த கலைப்பயணம் பாரிஸ் வந்தும் தொடர்கின்றது. பாரிசுக்குப் பழையவர் இவர், ஆனால் இவரின் கற்பனைத் திறன் என்றும் எதிர்காலம் நோக்கியதாய், நம்மவர்க்குத் தேவையானதாய் அமைந்துள்ளது.

ஈழத்து கலைஞர்களின் படைப்பு உலகம் முழுவதும் வியாபிக்க வேண்டும் என்ற நல் நோக்கோடு ஆரம்ப காலத்தில் இருந்து இன்று வரை அயராது பாடுபடும் இவரின் திறமை எப்போதோ உலக மக்களுக்குத் தெரிந்திருக்க வேண்டும்.

நம்மவர்கள் திறமைகள் பொருளாதாரப் பிரச்சனை காரணமாகப் பின்தங்கி இருப்பது கண்கூடாகக் கண்டு கொண்டிருக்கின்றோம்; இவரின் படைப்புக்களும் அதுபோன்றே, இவரின் அத்தனை நாடகங்களும் திரைப்படமானால் தரமான திரைப்படமாக அமையும் என்பதில் ஐயமில்லை. தயாரிப்பாளர்கள் முன்வந்தால் இவரை உலகம் அறியும்.

எவ்வளவோ பிரச்சனைகளுக்கு மத்தியில் ஆரம்ப காலங்களில் அடிக்கடி கலைஞர்களை ஒன்றுகூட்டி ஒன்று கூடல்களை நடாத்தி, ஆர்வலர்களை அணுகி, திறமையானவர்களைத் தேடி, கடுமையான ஒத்திகைகளை நடத்தி, தனியொரு மனிதனாக ஊடகங்கள் இல்லாத காலத்தில் பெரும் பொருட்செலவில், நாடகங்களை மேடையேற்றி, வெற்றி கண்டவர். இன்னமும் வெற்றிப்பாதையை நோக்கி ஓயாமல் உழைக்கும் உழைப்பாளி இவர்?

பழையனவற்றை திரும்பிப் பார்க்கும் சந்தர்ப்பம் இன்று, 1983 என எண்ணுகிறேன். பாரிஸ் 'Bellville Metro'வில் நான்சென்று கொண்டிருக்கும்போது ''தம்பி'' என்றொருவர் அழைத்தார், நீர்தானா சென்றவாரம் அந்த அறிவிப்பு செய்தனீர்'' என்று கேட்டார். நான்தான் என்றேன். அருகில் அமரும் என்றவர், தன் கலை உலக வரலாறுகளை என்னோடு பகிர்ந்து கொண்டு, உங்களைப்போன்ற இளைஞர்கள் நாடகக் கலையில் ஈடுபட முன்வரவேண்டும் என்றார். என் மனத்தில் அளவிட முடியாத ஆனந்தம் பெரும் உற்சாகத்தையும் கொடுத்தது. காரணம் அன்றைய காலகட்டத்தில் கலைஞர்களை இனம் கண்டுகொள்ளும் சந்தர்ப்பங்களின்றி தவித்த வேளையில், இவரது நட்பு எனக்குக் கிடைத்தது. என் கலைப்பசிக்குத் தீனி கிடைத்தது போல் இருந்தது. அதன்பின்பு இருவருக்கும் நெருக்கமான உறவு. அவ்வேளையில், இவர் *ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தை* உருவாக்கி அதன் முதல் நூல் வெளியீடன்று அரங்கேற்றிய *'சொந்த மண்'* நாடகத்தில் நடிக்கும் வாய்ப்புக் கிடைத்தது. பின்பு இவரது அனைத்து நாடகங்களில் நடித்து வந்தேன். இவரது ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தின் சகல நிகழ்வுகளிலும் கலந்து கொண்டேன். பல கலைஞர்களின் அறிமுகமும் கிடைத்தது. இவரது நாடகங்களைப் பார்த்தவர்கள் பாராட்டினார்கள். இவருக்கு மேலும் புகழைத் தேடித் தந்த நாடகங்களாக நாளைய அறுவடைகள், தீர்ப்பு, விளம்பரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

அன்றிலிருந்து இன்றுவரை தனது அயராத முயற்சியால் கலைப் பொக்கிஷங்களைப் படைத்துக் கொண்டிருக்கும் இவர் **நாடகத் துறையில் முதிர்ச்சி பெற்ற சிறந்த இயக்குநர்களில் முக்கியப் பங்கு வகிக்கின்றார்.** இவரது கடுமையான உழைப்புக் காலத்தின் தேவைக்கேற்ப கதைத்தெரிவு, கதைக்கேற்ப கலைஞர்கள் தெரிவு இதன்மூலம் புகழ்பரப்பும் எம். அரியநாயகம் அவர்கள் திரைப்படத்திலும் சாதனைகள் படைக்கவும், இன்றைய நாடக விழா சிறப்புறவும் பின்னணியில் நிற்கும் *கிறீன் கிங்ஸ் கழகத்தினரையும்* மனமார வாழ்த்துகின்றேன்.

... Je crois que c était en 1983. J attends le métro à la gare Belleville. C est là que je rencontre M.Ariyanayagam pour la première fois et fais connaissance avec lui. Depuis ce jour il ne cesse pas de m'encourager et de me faire participer dans ses pièces. Cela me fait un grand plaisir, voire un grand honneur, de jouer des rôles dans ses pièces...

**R.Gunabalan.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எனது நாடகப் பாசறை...

## சின்னக்குட்டி த. தயாநிதி

மனித மனங்களை அழகுறப் படுத்துவதே ஒவ்வோர் சார்ந்த கலையின் குணாம்சமாகும். இதனைச் சிறப்புறச் செய்யும் கலைஞன் இறைவனால் அனுப்பப்பட்டவன் என்று இதிகாசங்கள், புராணங்களில் படித்தறிந்த நினைவிருக்கிறது. இப்படியானவன் உண்மையில் மக்களால் பாராட்டைப் பெறவேண்டியவனாகின்றான். இவனுக்கு இறப்பென்பது கிடையாது. காலகாலமாக இவனது படைப்பும் ஆற்றலும் வாழ்ந்து கொண்டே இருக்கும் ஆனால், ஈழத்துக் கலைஞர்களைப் பொறுத்த வரையில் அந்த நிலைமை கூடக் கிட்டுவதில்லை. அதற்கான காரணத்தை கண்டுபிடிக்க வேண்டிய பொறுப்பும் எம்மிடத்தில்தான் இருக்கின்றது.

இருப்பை அழித்து விருப்பை நிறைவேற்றிய பல கலைஞர்கள் எம்மோடு வாழ்ந்தார்கள்; வாழ்கின்றார்கள். இனியும் வாழ்வார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கும் கால கட்டத்தில் அதிர்ச்சி தரும் செய்தியாக பாரிசில் **OCT 31**இல் நடைபெற இருக்கும் எம். அரியநாயகத்தின் நாடக விழா! வெற்றி பெற வாழ்த்துகின்றேன்.

இந்த அரிய முயற்சிக்கு உறுதுணையாகச் செயல்பட விழைந்திருக்கும் *பாரிஸ் கிறீன் கிங்ஸ் கழகம், பிரான்ஸ் தமிழர் கலை கலாச்சார ஒன்றியம்* இவர்களையும் வாழ்த்திக்கொள்ள முந்திக் கொள்கின்றேன்.

இனி, ஐரோப்பாவில் நாடகங்கள் மேடை ஏற்றுவதில் உள்ள சுகங்களைப் பகிர்ந்து கொள்வோம். நாளாந்தம் இனம்புரியாதவோர் இயந்திர வாழ்வுக்குள் தள்ளப்பட்டு விடுகிறோம். இதையும் தாண்டி கலைத்துறையில் கால்பதித்து, அதிலும் ஓர் படைப்பாளியாகப் பணியை ஆரம்பித்து, நாடகங்களை எழுதி, இயக்கி, நடித்து ஒப்பேற்றுவது என்பது பிரசவ வலியை விஞ்சி விடும். குடும்பங்களில் குழப்பங்கள், நட்புக்களில் விரிசல். இன்னும் அதிகமாகச் சிரமங்களைச் சந்தித்து ஒத்திகை பார்த்து மேடை ஏற்றம் வரையில் பொறுப்பேற்ற கலைஞர்கள் சந்திக்கும் இன்னல்கள் கணக்கற்றவை. இத்தனைச் சுகங்களையும் அரியநாயகம் அவர்களும் அறியாதவரல்ல.

எம். அரியநாயகம் அவர்களுடன் பரிச்சயம் ஏற்பட்டதே ஓர் கலை அரங்கில்தான். நிகழ்வுகள் என்ற எனது நாடகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தவரில் அருகில் இருந்த தன் நண்பருக்கு யார் இந்தப் புதுமுகம், நல்ல எதிர்காலம் தெரிகிறது என்று வாழ்த்தியிருக்கின்றார். அது மட்டுமில்லாமல் தனது படைப்புக்களிலும் என்னையும் பங்கேற்க வைத்தார் *தீர்ப்பு, நாளைய அறுவடை* போன்ற நாடகங்களில் இணைந்து பங்காற்றி இருக்கின்றேன். அது ஒரு பட்டறைப் பயிற்சிக் களமாக எனக்குத் தோன்றியது. பல நெளிவு சுளிவுகளை அவரிடம் இருந்து நானும் கற்றுக் கொண்டேன். என்பது மறக்க முடியாத உண்மை.

**முழுமையான கலைஞனால் எந்தக் காலத்திலும் ஓய்வு எடுத்துக் கொள்ள முடியாது.** என்பதற்கு அரியநாயகம் எடுத்துக்காட்டாக விளங்குகின்றார் என்பது OCTஇல் நடைபெறவிருக்கும் நாடக விழாவே சான்று...

... Ayant assisté à une représentation théâtrale de ma pièce « Les évènements » M.Ariyanayagam m'a félicité en disant que j'aurais un bon avenir. Il m'a ensuite demandé d participer dans ses pièces. Cela m'a donné l'occasion de collaborer avec lui. C'était vraimen une expérience, un atelier. Il m'a fait apprendre beaucoup de choses – c'est une vérit indéniable...

**- Sinnakuddy T. Thayanith**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைப்பணி புரியும் அல்போன்ஸ் அரியநாயகம்



– பெஞ்சமின் இம்மானுவேல்


**வா**ழும்போது ஓர் கலைஞன் கௌரவிக்கப்படவேண்டும்; பாராட்டப்படவேண்டும். ஏனென்றால், ஓர் கலைஞன் சமூகத்தின் பல பரிமாணங்களை எடுக்கின்றான்.

நாம் வாழும் சமூகத்தில் பலர் பலவிடயங்களை நினைப்பதோடு நிறுத்திக் கொள்கிறார்கள். பலர் நினைப்பதைச் செயல்படுத்துகின்றார்கள். சிலர் செயற்படுத்துவதில் பல படிகளைத் தாண்டி வெற்றி பெற்றிருக்கின்றார்கள். அந்த வரிசையில் எனது நண்பன் **அல்போன்ஸ் அரிய நாயகம் தனது வாழ்வின் பெரும்பகுதியைக் கலைவாழ்வுக்காக அர்ப்பணித்துக் கொண்டிருப்பவர்.**

*1963*ஆம் ஆண்டு பாடசாலை வாழ்வில் எனக்கும். அவருக்கும் இடையே கலைவாழ்வில் ஏற்பட்ட தொடர்பு இன்றுவரை நீடித்து வருகின்றது. அவர் எழுதி – இயக்கிய பல நாடகங்களில் நானும் நடிப்பிசைக் காவலர் அமரர் **களகறி தங்கராசா** அவர்களும் இணைந்து நடித்துள்ளோம்.

மாணவப் பருவத்திலே யேசுவின் திருப்பாடுகள் காட்சியில் அல்போன்ஸ் அவர்கள் கைப்பாசாவும், நான் முடவனாகவும் சேர்ந்து நடித்துப் பாராட்டப்பட்டோம். அவைகள் இப்போது என் நினைவுகளில் பட்டாம் பூச்சியாய்ப் பறந்து கொண்டிருக்கின்றது.

மாணவப்பருவத்திலேயே **யூலியஸ்சீசர்** என்ற நாடகத்தை எழுதி – இயக்கி மேடையேற்றிவர். நாடகம் போடுவதற்குத்தான் எல்லோரும் மேடை போடுவார்கள். ஆனால் இவர் **நாடகம் பழகுவதற்கே ஓர் வெற்றுக்காணியில் மேடை போட்டு ஆறு மாதங்களாகத் தொடர்ந்து பழகி மேடை ஏற்றி வெற்றி கண்ட எழுத்தாளர்; இயக்குநர்; நடிகர்** என்றால் அது **'அல்போன்ஸ் அரியநாயகம்'** என்றால் பலருக்கு, தெரிந்திருக்க நியாயமில்லை. அவர் பல பரிமாணங்களைப் பெற்றிருப்பது ஓர் பெரும் சிறப்பு என்பதை நான் திட்டவட்டமாகக் கூறிக் கொள்கின்றேன்.



அரியநாயகத்தின் 'தீர்ப்பு' நாடகத்தில்
டி. தயாநிதி, இரா. குணபாலன்.

... Dans notre société, les uns pensent à faire de belles choses dans la vie. Ils ne font qu penser. Les autres essaient au moins de les réaliser, mais sans succès. Il n'y a que très peu d gens qui remportent des succès remarquables en franchissant tous les obstacles. Ainsi, mo ami et collègue, M.Ariyanayagam a sacrifié une grande partie de sa vie pour devenir quelqu'u dans le genre théâtral...

**- Benjamin Emmanu**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



1970 – எம். அரிநாயகத்தின் 'யூலியஸ் சீசர்'ரில் பெஞ்சமின் இம்மானுவேல்

அல்போன்ஸ் அரியநாயகம் அவர்கள் இன்னும் பல சிறப்புகளுக்கு உரியவர். அதாவது சிறந்த மேடைப் பேச்சாளன், கவிஞன், விமரிசகன். புலம்பெயர் வாழ்வில் அவரின் இந்தச் சிறப்புக்களைப் பலர் நேரில் கண்டிருக்கின்றார்கள். எந்த வயதிலும் சமூகப் பொறுப்போடு இயங்கவேண்டும் என்ற ஆதங்கம். அதனால் தான் தனியாளாக இருந்தும் பலதைச் செய்து கொண்டிருக்கின்றார். அதனால் நாம் அவரைப் பாராட்டுதல், உரிய கடமை.


**திருமறைக்கலா மன்றம்** தாயகத்தில் ஆரம்பிக்கப்பட்டபோது இயக்குநர் மரிய சேவியர் அடிகளாரோடு இணைந்து அவரது மேடை நாடகங்கள், வானொலி நாடகங்களில் நடித்துப் பாராட்டுப்பட்டவர் என்பது பலருக்குத் தெரியாவிட்டாலும் அவரது **கலைவாழ்வுப் பதிவுகள் பிற்காலச் சந்ததிக்காவது பதிவு செய்யப்படவேண்டும்** என்பது எனது கோரிக்கை.

தமிழும், தமிழ் இனமும் அழிந்து போகாமல் காப்பாற்றப்படுவது கலைமூலம்தான் என்பதை இங்கு உறுதியாகக் கூறிக்கொள்கிறேன். கலை வாழ வேண்டும்; கலைஞர்கள் வாழ வேண்டும் என்பது எனது வேண்டுகோள்.

**அல்போன் அரியநாயகம் அவர்கள் எழுதி இயக்கிய பல நாடகங்கள் பாரிசில் ஒரே மேடையில் மேடையேறி ஒப்பிடப்படுவது சாலச் சிறந்த ஓர் நிகழ்ச்சி. இவரது கலைவாழ்வை, கலைச்சேவையைப் பல படிகள் இன்னும் உயர்ந்திடும் என்பது எனது நம்பிக்கை.**

தளராது அவரது முயற்சி, தழைக்க வேண்டும் என எனது வாழ்த்துகளும்; பாராட்டுகளும்.

**கலைவாழ்வில் களிகூர்ந்த நாட்கள் பல**
**காலத்தால் அழியாத செல்வம் அவை**
**நிலைவாழ்வில் பெற்றுவிட்ட நிர்மலங்கள்**
**நீசராலும் அழித்துவிடா நிஜங்கள் அவை**
**உயர்வான பணிக்கு உழைத்திட்ட உத்தமரை**
**உதறி எறிந்து விடலாமா?**
**வாருங்கள் (அவரை)**
**வாழ்த்துவோம்! போற்றுவோம்!**




2000 ஆண்டில் அரங்கேற்றப்பட்ட 'உயிர்ப்பு' நாடகத்தில் யேசுவாக ஏ.டி.ஏ. செல்வராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வானொலி நாடகங்கள்



**- எழில் துஷியந்தி**

**த**மிழில் முப்பெரும் பிரிவாகி, இயல், இசை, நாடகத்தில் – மக்களை இலகுவில் கவரக் கூடிய நாடகத்தைப் பற்றிய விடயங்களை ஆராய்வது ஒரு சுகம்தான். அதிலும் வானொலி நாடகங்கள் எனும்போது உருவத்தினை விடுத்து, குரல் வளத்தால் மட்டும் மக்களுக்குத் தேவையான விடயங்களை மக்கள் மனத்தில் பதிய வைப்பது என்பது இலகுவான விடயம் அல்ல. மேடை நாடகங்கள் எனும்போது நடிப்பின் அசைவுகள், உடை, உருவக்கவர்ச்சி, காட்சி அமைப்பு போன்ற விடயங்களால் ரசிகர்களின் மனதில் நிலைத்துவிட முடியும். தவிர, தற்போதைய காலத்தில் குடும்பச் சுமை, சோகம் என்பதை மட்டுமே காட்சிகளாகக் கொண்ட சின்னத் திரைத் தொடர்களையும் அதிகமாகக் காணமுடியும். ஆனால், வானொலி நாடகம் என்பது மேற்கண்ட மேடை நாடக, சின்னத் திரைத் தொடர்களுடன் ஒப்பிடும்போது மிகக் குறைந்த தகவல்களைக் கொண்டிருந்தாலும் விரிவாக, மக்களைச் சென்றடைவது பெருமைக் குரிய விடயமே.

ஈழத்தில் இருந்தபோது பல வானொலி நாடகங்களையும் கேட்டிருக்கிறேன். அப்புக் குட்டி, முகத்தார், சில்லையூர் செல்வராசன், அப்துல் ஹமீது போன்ற பல வானொலிக் கலைஞர்களின் குரல் வளத்தினால் கவரப்பட்டு, நிகழ்வுகளுக்குக் காத்திருந்தது இன்றும் நினை விருக்கிறது. இவ்வாறான நாடகங்களில் எனது குரல் எப்போது ஒலிக்கும் என எண்ணியதும் உண்டு.

1999ஆம் ஆண்டின் இறுதிக் காலப் பகுதி யில், டி.ஆர்.டி. வானொலியில் அறிவிப்பாள ராக அறிமுகம் ஆனவேளையில், முகத்தார் எஸ். ஜேசுரட்ணம் அவர்களின் அகத்திலும் நெறி யாள்கையிலும் உருவான 'ஆகாயக் கனவு' என்ற நாடகத்தில் இரண்டு குரல்களில் நடித்திருந்தேன். இந்நாடகத்தில் ஜேசுரட்ணம் அவர்களின் ஆக்கத்தி லும் நெறியாள்கையிலும் உருவான 'ஆகாயக் கனவு' என்ற நாடகத்தில் நடித்திருந்தேன்.

இந்நாடகத்தில் ஜேசுரட்ணம், அப்புக் குட்டி ராஜகோபால் ஆகியோருடன் நடித்திருந்தது மட்டில்லா மகிழ்ச்சியைத் தந்தது என்றே சொல்லலாம்

இதே வானொலியில் பல நாடகத் தயாரிப்பாளராகவும், 'இன்றைய தேடல்' என்ற நிகழ்ச்சித் தயாரிப்புடனும் இணைந் திருந்த அரியநாயகம் அவர்களுடன் பணி யாற்றியது ஓர் அரிய சந்தர்ப்பம் என்றே கருது கிறேன். இவரின் நாடகங்களில் பலவிதமான பாத்திரங்களில் நடித்திருக்கிறேன். **இவரின் நாடகங்களின் தனித்துவமே கூடுதலாகப் புலம் பெயர்ந்த நாடுகளில் நடைபெறும் நிகழ்வுகளைக் கருப்பொருள் ஆகக் கொண்டிருப்பதுதான்.**


இவரது நெறியாள்கை பற்றிக் கூறுவது அவசியம். தான் விரும்பும் வகையில் நாடகம் அமையவேண்டும் என்பதற்காக வசன ஏற்ற இறக்கங்களைச் சொல்லித் தருவதுடன், தனக்குத் திருப்தி ஏற்படும் வரையில் ஒலிப்பதிவில் ஈடு படுவதே அவரது வானொலி நாடக வெற்றிக்குக் காரணம்.

திரைப்படம், தொலைக்காட்சி, மேடை நாடகம்போன்வற்றினைப் பார்ப்பதற்குச் செலவு செய்யும் நேரத்தில் வேறு வேலைகளைச் செய்வது சிரமமாக இருக்கும். வானொலி நாடகத்தினைப் பொறுத்தவரை வீட்டில் வேறு வேலைகளில் ஈடுபட்டுக் கொண்டே நாடகங்களைக் கேட்டு மகிழலாம் என்பதே வானொலி நாடகத்தின் தனிச் சிறப்பாகும்.

ஊடகங்களின் ஆரம்பக் காலங்களில் நாடகங்கள் அடைந்த வளர்ச்சி, ஊடகங்கள் பல வளர்ந்த இந்தக் காலத்தில் நாடகங்களுக்கு இல்லை என்பது மிகவும் வேதனைக்குரிய விடயமே. இந்தியக் கலைஞர்கள் நம் மக்கள் மத்தியில் ஊடுருவிய அளவிற்கு இந்தியர் களாலேயே போற்றப்படும் நம் கலைஞர்கள் நம் மக்கள் மனங்களில் சென்றடையாதது வேதனையே. 2004ஆம் ஆண்டைப் பொறுத்தமட்டில் வானொலி களில் மிகக் குறைவான நாடகங்களே இடம் பெற்றிருக்கின்றன. இந்நிலை மாற அரியநாயகம், முகத்தார் அப்புக்குட்டி போன்ற கலைஞர்களும் வானொலிகளும் ஒன்றிணைந்த நல்ல தயாரிப்புகள் பலவற்றினை வெளிக்கொணர வேண்டும் என்பதே எனது அவா. இந்நிலை தோன்ற நமது கலைஞர்களை வாழ்த்தி வரவேற்று கௌரவப் படுத்த வேண்டியது ஈழத்தவர் கடமை அல்லவா!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடக நாயகன்!

– முத்து. ஜெயசிங்கம்

இன்றைய நாள், ஒரு பொன்னாள்; நன்னாள்; நாடக நாள்.

ஒன்றல்ல, இரண்டல்ல, பத்து நாடகங்கள் பாரிசில் முதல் முறையாக ஒருவரே எழுதி இயக்கி, அனுபவநாயக நாயகிகளையும், அறிமுகநாயக நாயகிகளையும் சங்கமப் படுத்தும்.

'நாயகம்' – எம். அரியநாயகம்!


இன்றைய சங்கமத்தில் 'கடிவாளம்' என்ற புதிய முயற்சி நாடகத்தில் நானும் சங்கமிக் கிறேன்.

முதல்முறையாக மேடை ஏறியபோது அதில் முக்கிய வேடம் ஒன்றை எனக்களித்து பலரும் பாராட்டும்படி என்னை நடிக்க வைத்தார்.

இவரது படைப்புகளான யூலியஸ் சீசர் – தீர்ப்பு – கிறிஸ்துவுக்கு பின் இரண்டாயிரம் ஆகிய நாடங்களில் நடித்ததற்கும் மிகப்பெரிய பாராட்டுகள் கிடைத்தன.

ஒரு நடிகனுக்கு எல்லா நாடக கதாபத்திரங் களும் பாராட்டைப் பெற்றுத் தருவதில்லை – ஆனால், அரியநாயகத்தின் நான்கு நாடகங் களிலும் எனக்கு பாராட்டுக்கள் கிடைத்தன. அதற்காக அவருக்கு நன்றி கூறி வாழ்த்துகிறேன்.

மேலும், இன்னும் அவர் பல புதிய முயற்சிகளைச் செய்யவேண்டும்; அதில் நானும் பங்கு பெற வேண்டுமெனக் காத்திருக்கிறேன்.




புனித இயூஜின் மசனெட் இளைஞர் மன்ற கிளை நிகழ்ச்சியில் பங்குபெற்ற கலைஞர்களுடன்
எம். அரியநாயகம், முத்து. ஜெயசிங்கம்

... Un acteur peut être capable de jouer n importe quel rôle et il peut même jouer tous ces rôles. Mais, seuls dans quelques rôles il devient célèbre. Quant à moi, le cas est différent : on m'a félicité pour avoir joué dans les quatre pièces de M.Ariyanayagam. Il faut que je lui sois reconnaissant...

**- Muthu Jeyasingam.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தேடல் ஒரு வரம்!

நடிகவினோதன்
**டி. யோகராஜா**

**நா**டகத்தின் தொட்டில் கிரேக்கம் என்பது ஆய்வாளர்களின் கருத்து. ஆரம்பத்தில் ஆலய மண்டபங்களில்தான் கிரேக்க நாடகங்கள் நடித்துக் காண்பிக்கப்பட்டன. தமிழர்களின் புராதன கலையான பரத நாட்டியமும் ஆலய மண்படங்களில் தான் ஆடப்பட்டன. ஆரம்ப காலக் கிரேக்க நாடகங்கள், தெய்வங்களைப் பற்றியும், பழைய மன்னர்களைப் பற்றியும் இசை வடிவில் அமைந்தன போன்று, தமிழ்க் கலைஞர்களும் கோயில் சார்ந்த இடங்களிலும், களத்துமேடுகளிலும், நடுத்தெருக்களிலும் இறைவன் பற்றிய நாடகங்களை இசையுடன் கலந்து கூத்து வடிவில் நடித்தார்கள். கிரேக்கத்திலிருந்து மேற்கத்திய நாடுகளுக்குப் பரவிய நாடகங்கள் பெரியளவில் வளர்ச்சியடைந்திருக்கும் நிலையில், தொல்காப்பியம், அகத்தியம் போன்ற பழம்பெரும் நூல்கள் நாடகத்திற்கென இலக்கணம் வகுத்தும், தற்காலத் தமிழ் நாடகங்களின் வளர்ச்சி சற்றுக் குன்றிப் போயிருப்பது வேதனைக்குரிய விடயம். தமிழ் எழுத்தாளர்களோ, கலைஞர்களோ மற்றைய இனத்துக் கலைஞர்களைவிடத் திறமை குறைந்தவர்களென்று மதிப்பிட முடியாது. எனினும், நேரமின்மை, வேலைப்பளு, பொருளாதாரமின்மை என்பன தமிழ் நாடக வளர்ச்சிக்குத் தடையாக இருக்கிறது என்பதை அறிய முடிகிறது.

**ஒரு மணிநேர டெனிஷ் நாடகத்தை நாங்கள் குறைந்தது ஐந்து மாதங்கள், தினமும் நான்கு மணித் தியாலங்கள் பாத்திர ஒப்பனையோடு ஒத்திகை பார்த்தபின்புதான் மேடையேற்றுகிறோம். நாடகத்தின் வெற்றிக்கு இவ்வகையான ஒத்திகை மிகவும் பிரதானமாகும்.** இப்படிப்பட்ட மேற்கத்திய நாடகங்களுக்கீடாக 1976ஆம் ஆண்டு, யாழ் நகரில் ஐந்து மாதங்கள் தொடர்ந்து ஒத்திகை பார்த்துப் பல்சிறந்த கலைஞர்களைப் பங்கு பெறச் செய்து, 'யூலியஸ் சீசர்' என்றவொரு பிரம்மாண்டமான நாடகத்தைத் தயாரித்து மேடையேற்றி அதில் வெற்றியும் கண்ட எம். அரியநாயகம் அண்ணாவை பாராட்டாமல் இருக்க முடியாது. 1976ஆம் ஆண்டு, ஆவரங்காலில் ஒரு நாடகப் போட்டி. என்னுடைய தயாரிப்பான 'தூய உள்ளம்' என்ற சமூக நாடகமும், போட்டியில் கலந்துகொண்டது.



*1970இல் 'யூலியஸ் சீசர்' நாடகத்தில் மார்க் அன்ரனியாக எம். அரியநாயகம்*

அழகான, முகம், மிடுக்கான தோற்றம் கொண்ட ஒருவர் பிரதம நடுவராக அமர்ந்திருந்தார். 'தூய உள்ளம்' முதற்பரிசான தங்கப் பதக்கத்தைத் தட்டிக்கொண்டது. அந்த நாடகப் போட்டிக்குப் பின்புதான் பிரதம நடுவராக இருந்த அரியநாயகத்துடன் என்னுடைய சந்திப்பு மிக நெருக்கமாயிருந்து எப்பொழுது நாங்கள் சந்தித்துக் கொண்டாலும் நடிப்பைப் பற்றியும் நாடகத்தைப் பற்றியுமே பேசிக்கொண்டோம். மேடையை, ஒரு நடிகன் எப்படிப் பாவிக்க வேண்டுமென்று எனக்கு ஆலோசனைகள் வழங்கிய ஆசான்களில் அவரும் ஒருவர். நான் ஐரோப்பிய மண்ணில் ஒரு தொழில் நடிகனாகக் கடமையாற்றுவதற்கு இன்றும் அவரது ஆலோசனைகள் எனக்குப் பயன்படுகின்றன. புலம்பெயர்ந்து வந்தும் அந்நியச் சூழலில் தமிழுக்கும், தமிழ்க் கலைகளுக்கும் இவர் செய்யும்பணி அளப்பரியது. அசோகனாக மேடையிலே அவர் வந்த காட்சி இன்றும் என் கண்முன் அசையாமல் நிற்கிறது. தேடல் இவருக்குத் தெய்வம் தந்த வரம். ஏறக்குறைய நாற்பது வருடங்களாக இவர் நாடகத்துறைக்களித்த பங்கினை நன்றியுடன் நினைத்துப் பார்க்கிறேன். சாதனைகள் பல புரிந்தும் சத்தமின்றியிருக்கும் ஒரு மகத்தான கலைஞன் அரியநாயகம் – ஈழத்திலும், பிரான்சிலும், இவரால் அநேகமான கலைஞர்கள் உருவாக்கப்பட்டார்களென்றால் அது மிகையாகாது. இப்படிப்பட்ட ஒரு பெரிய கலைஞனது நாடக விழாவில் நானும் பங்கு பெறுவதைவிட்டு ஆனந்தமடைகிறேன். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நாடக அரங்கியலும் அதில் நெறியாளரின் பங்கும்...

– **சுமதி யசோதரன்**, லண்டன்

**நா**டகம் என்பது ஒரு கருத்தை வெளிப் படுத்துவதற்கு பல் துறை சார்ந்த துறைகளையும் அதாவது நாடகம் முழுமைபெற்று நாம் கூறவந்த மையக் கருவை வெளிப்படுத்தத் தேவையான கலைகளையும் கலைஞர்களையும் இணைத்து மேடைமேல் பார்வையாளர் முன்நடிகர்கள் மூலம் அறிக்கை செய்வது, அல்லது ஆற்றுகை செய்யும் ஒரு கலை வடிவம் ஆகும். இந்த நாடகம் எனும் ஊடகத்துக்கு நடிப்பு என்பது முக்கிய செயற்பாடாக அமையும். நடிப்பு என்பதன் வரைவிலக்கணம் குறிக்கப் பட்ட ஒன்றின் பண்புகளை தற்காலிகமாக ஏற்று செய்யும் ஒரு கலைவடிவம் என்பார்கள். இந்நடிப்பை அடிப்படையாகக் கொண்டு **வெளிப்படுத்தப்படும் விடயங்கள் சரிவர மக்களிடம் சென்றடைய வேண்டும் என்பதனை தனது கருத்திற் கொண்டு, செயற்படும் ஒரு முக்கிய நபர் நெறியாளர் எனவும்,** *(Dirrector)* **அவரது செயற்பாடுகளை நெறியாள்கை** *(Dirrection)* **எனவும் மரபுவழி கூறும்.**

இவ்வாறு பாரம்பரியமாக உலகெங்கும் வழங்கி வரும் இந்நாடக ஊடகத்துக்கு பின்வரும் நாடக வரலாறுகளும் உண்டு அவற்றின் பெயர்களை மட்டும் வெளிப் படுத்திவிட்டுத் தொடர்ந்து நாடகத்தில் நெறியாளரின் பங்குகளையும், இந்நாடகம் எனும் ஊடகம் மக்களுக்கு எவ்வாறு பயன் பாடாக உள்ளது எனவும் நோக்குவோம். சமூக ஊடகமான இந்நாடகத்துக்குரிய வரலாற்றுக் காலங்களாவன.

கிரேக்கநாட்டுநாடகவரலாறு.

உரோமைநாட்டுநாடகவரலாறு.

மத்திய காலநாட்டுநாடகவரலாறு.

எலிசபெத்காலநாடகவரலாறு.

மறுமலர்ச்சிகாலநாடகவரலாறு.

சீனயப்பான் நாடகவரலாறு.

அமெரிக்கநாடகவரலாறு.

இந்தியநாடகவரலாறு.

நவீனகால நாடகவரலாறு.

மேற்படி கால நாடக வரலாறுகள் அவ்வக்கால, சூழ்நிலை பற்றிய நாடக வடிவங்களாக வழங்கியமையை அவை பற்றிய நூல்களில் விபரமாக வெளிப்படுத்தப் பட்டுள்ளன.

நெறியாளர் என்றால் யார்? எனப் பார்ப்பின் நடிப்பு எனும் கலை வடிவத்தைத் திறம்பட நடிகர்களுக்குப் பயிற்றுவித்து, மேடையில் திறம்பட நடித்து கருத்துக்களை வெளிப்படுத்தச் செய்பவர் ஆவார். இவரது செயல்பாடுகளே நெறியாள்கை எனப்படும். நெறியாள்கை எனும் செயற்பாடும் அதனைத் திறம்பட செய்யும் நெறியாளருமே நாடகக் கலையின் முதுகெலும்பு. பல்வகைக் கலை களையும் ஒன்றிணைத்து பார்வையாளர் முன் தியேட்டர் வடிவில் நாடகத்தை ஆரம்பம் முதல் இறுதிவரை நகர்த்திச் சென்று காட்சிப் படுத்தும் ஓர் முகாமைத்துவ செயற்பாடான நெறியாள்கைக்குள் நாடகத்தின் அத்தனை அம்சங்களும் இடம்பெற்று விடுகின்றது. இத்தகைய பொறுப்புள்ள நெறியாளருக் குரிய சில பண்புகளும் காணப்படவேண்டும். அதாவது, **நாடகத்தைப் பிரதி செய்தல், நடிகர் தெரிவு, நடிக்கும் கருத்தைத் தெரிவு செய்தல், நடிகர்களின் நடிப்பைக் கணிப்பிடல், ஒலி, ஒளி அமைப்பைக் கவனிப்பு, ஒப்பனை அரங்கேற்ற அமைப்பு, ஒத்திகை, மேடை யேற்றம் எனும் அத்தனை விடயங்களிலும் நெறியாளர் கவனம் செலுத்த வேண்டும்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்படி கூறப்பட்ட விடயங்கள் அனைத்தும் சரிவர திறம்பட நெறிப்படுத்து வதன் மூலமே நாம் சமூகத்துக்குக் கூறவந்த கருத்தைச் சரிவர சமூகத்துக்குப் போய்ச் சேர வைக்க முடியும். அதாவது, ஒரு நாடகத்தை மேடையேற்றும்போது முக்கியமாக கருத்தில் கொள்ள வேண்டிய விடயங்களாக ஓவியம், ஒப்பனை, சிற்ப அமைப்புகளை வைத்து பார்வையாளர், மேடையேறும் கருத்துகளை இலகுவில் உணர முடியும். அதேபோல் ஒப்பனை மிகவும் முக்கிய விடயம்; அதாவது ஒப்பனையும் பாத்திரத்துக்குப் பாத்திரம் வேறுபட்டும், அத்தோடு பாத்திரத்தோடு ஒன்றிப்போவதும் முக்கியம். அதேபோல நாடகக் கருத்துக்கும், முகபாவனைகளுக்கும், சூழ்நிலைக்குமேற்ப இசையமைப்பும் அமையவேண்டும். அத்தோடு கருத்துக்கும் நடிப்புக்கும் ஏற்ப ஒளியூட்டும்போது நிற வேறுபாடுகளோடு ஒளியூட்டுவது நாடகத் துக்கு மெருகூட்டும். மேலே நாடகம் என்றால் என்ன, நடிப்பு என்றால் என்ன! என்றும், நெறியாளர் பற்றியும் பார்த்தோம்.

**இவ்வாறு நெறியாளராலும்,** அவரது குழுவினராலும் சுவைத்திறனைப் பயன் படுத்தி வெளிப்படுத்தப்படும் நாடகம் என்னும் ஊடகம் சமூகத்திற்கு எவ்வாறு பயன்படும் என்பதைக் கூறி முடிக்க விழைகிறேன்.

நெறியாளரும் நடிகருமாக மேடை யேற்றப்படும் நாடகங்கள் பயனுள்ள கருத்துக்களைப் பொழுது போக்கினூடாக வெளிப்படுத்த உதவத்தூண்டும் ஓர் அறிவியல் சாதனமாகவும், ஒரு பிரச்சார ஊடகமாகவும், சமூக ஒன்றிணைப்பூடகமாகவும், பண்பாட்டு விளக்க ஊடகமாகவும், ஓர் போதனை யூடகமாகவும், மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படும் ஊடகமாகவும் உதவும்.

**இவ்வாறு சமூக ஊடகமாக அமையும் நாடகத்தின் ஆரம்ப வடிவம் கூத்துக்கள் ஆகும். இதுவே படிப்படியாக வளர்ந்து நாடகம். தாள, லயம், நடனம், நாட்டியம் எனப் பல வடிவில் வளர்ந்து தற்காலச் சினிமா வரை மேம்பட்டு வளர்வது, நாடகத்தின் பரிணாம வளர்ச்சியே!**




'நாளைய அறுவடைகள்' - நாடகக் காட்சி.



பிரீமன் தமிழ்க் கலை மன்றம் நடாத்திய நாடகப் போட்டியில் நடுவராக எம். அரியநாயகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தொலைநோக்குச் சிந்தனையாளர்...

**– நாச்சிமார் கோயிலடி இராஜன்**

**புகலிட வாழ்வில் ஈழத்தமிழர்கள் தமது முகமிழந்து விடக் கூடாதென்ற தொலைநோக்கும் இளைய சந்ததிக்கு நாம் யார்? எமது முகவரியென்ன என்ற தரவுகள் எங்கள் கலைகளூடாக கையளிக்கப்படவேண்டுமென்ற சிந்தனையும் எண்பதுகளின் தொடக்கத்தில் புகலிட நாடுகளில் பல கலை ஆர்வலர்களிடையே தோன்றிய போதிலும், அதை முன்னெடுத்துச் செல்ல முயன்றவர்கள் மிகச் சிலரே. அந்தச் சிலரில் முதல் வரிசையில் வைத்து எண்ணப்படக் கூடியவர்களில் ஒருவர்தான் எம். அரியநாயகம்.**

ஐரோப்பிய தமிழர் எழுத்தாளர் ஒன்றியத்தினூடாக புகலிட சிறுகதைகளை அச்சுவாகனமேற்றி, பாரிய இலக்கிய முயற்சியை முன்னெடுத்தது மட்டுமன்றி, புலம்பெயர் வாழ்வின் சுமைகளினூடே நாடக அரங்கேற்றங்களையும் சுகமான சுமைகளாகச் சுமந்து பல நாடகங்களை எழுதி, இயக்கி சிறந்த நடிகர்கள் பலரை உருவாக்கிய பெருமைக்குரியவராகத் திகழும் அரியநாயகம், இன்னும் தொடர்ந்து தேடலுள்ள கலைஞராகவே வாழ்கிறார். அதை உறுதி செய்ய, நான் பார்த்து, கேட்டுச் சுவைத்த இரு நிகழ்வுகளை உங்களிடம் பகிர்ந்துகொள்கிறேன்.

தாயகத்திலிருந்து, ஐரோப்பாவுக்கு வாழ்க்கைத் துணைகளை நாடி நம்பிக்கையுடன் வரும் கன்னியரை ஏமாற்றும் மனப்போக்குக் கொண்டவர்களையும், புகலடத்தில் வாழும் பெண்கள் ஏமாளிகளாக இல்லாமல் எச்சரிக்கையுடையவர்களாக இருக்க வேண்டும் என்ற செய்தியையும் வைத்து இரண்டே இரண்டு பாத்திரங்களினூடாக 'விளம்பரம்' என்ற நாடகத்தை எழுதி இயக்கியிருந்தார்... கடுகைத் துளைத்து ஏழ் கடலைக் காட்டிய வித்தையாகவே அந்த நாடகம் அமைந்திருந்தது. பார்த்தேன், ரசித்தேன், வியந்தேன்.

உற்றாரும் உறவினரும் நட்பும் ஒன்று கூட, சடங்குகள் சில சம்பிரதாயமாக்கப்பட்ட தமிழர் வாழ்வின் ஒரு கூறு விகாரமாக்கப்பட்டு வருவதை – பெற்றோர்களின் பாத்திரங்களூடாகவும், காலமாற்றம் கலாச்சார மாற்றங்களினால், புகலிடத்தில் வாழும் இளைய தலைமுறையின் மனநிலையை பருவமடைந்த ஒரு சிறுமியின் பாத்திரத்தினூடாகவும் செதுக்கி 'சங்கடம்' என்ற நாடகத்தைப் படைத்திருந்தார். வானொலியில் கேட்கும்போதே நேரில் பார்க்கும் உணர்வைத் தந்து சிந்தனைப் பொறியைத்தட்டி, புகலிடத் தமிழனே, விழி... என்று சொல்லும் பாங்கான – படைப்பு அது...

பார்த்து, கேட்டு, ரசித்த இந்த நாடகங்கள் மட்டுமன்றி, 'அறுவடை' நாடக நூலில் தொலைநோக்குத் தளத்தில் நின்று அரியநாயகம் படைத்திருந்த 'அறுவடை' என்ற நாடகம் புகலிடத்தில் வாழும் தமிழீழத்தமிழர்களுக்குச் சமூக பொருளாதார அரசியற் சிந்தனை விழிப்புக்கான கட்டியமொன்றினை விடுத்திருப்பதையும் படித்துச் சுவைத்தேன்.

வாழ்வோடு ஒட்டாத, எமது பிரச்சினைகளை எட்டியும் பார்க்காத, கதைச் சுருக்கத்தை அச்சிட்டுக் கையில் கொடுத்தும்கூட ரசிகனால் புரிந்துகொள்ள முடியாத மொழிபெயர்ப்பு நாடகங்களை காலங்காலமா மேடையேற்றும் நம்மவர்களைப் பாராட்டும் அறிவுஜீவி ரசிகமணிகள், பார்க்க, கேட்க, படிக்கவென எமது பிரச்சினைகளை நாடகங்களாக்கி அரங்கேற்றி இப்போது நாடக விழாவாக வழங்க முன்வந்திருக்கும் அரியநாயகம் போன்ற கலைஞர்களை வாழ்த்த, பாராட்ட உற்சாகப்படுத்த முன்வருவார்களா? யாரோ அமைத்த அரங்கிலேறி சுயதம்பட்டம் அடிப்போர் சிலரின் நடுவே, தனது படைப்புக்கு தானே அரங்கமைத்து, நெறிப்படுத்தி நாடகவிழா நடாத்தத் துணிந்த கலைஞர் அரியநாயகம் அவர்களின் பணிசிறக்க நெஞ்சார வாழ்த்துகிறேன். ●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரமிக்க தமிழ் நாடகம்...

## – எம்.எம். ஜெயரத்னம்



அரியநாயகம் அவர்களும் நானும் யாழ் புனித பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவர்கள். பன்மொழிப் பண்டிதர் அருட்பணி எச். எஸ். டேவிட் அடிகளாரின் மாணவர்கள்.

அரியநாயகம் எம் தாய்நாட்டில் எழுத்து, நடிப்பு, நாடகத் துறைகளில் அதிகம் ஈடுபாடு கொண்டு செயல்பட்டு வந்தது பற்றி பல சமயங்களில் கேள்விப்பட்டேன். எனக்கு இத்துறைகளில் அதிகம் ஈடுபாடு இருக்கவில்லை.

புலம் பெயர்ந்த நிலையிலும் எம் தாய் நாட்டில் கையாண்ட அதே யுக்திகளை, மாற்று மொழி, கலை, கலாச்சார சூழல் மத்தியிலும் நிலைநாட்டி தொடர்ந்து செய்து வருவது மிகவும் பாராட்டக்கூடியதாகும். பிரான்ஸ் இலங்கைத் தமிழ் கத்தோலிக்க ஆன்மிகப் பணியகத்திற்கு இவரின் முழு ஆக்கத்தில் உருவான *'கடிவாளம்'*, *'உயிர்ப்பு 2000'* போன்ற நிகழ்ச்சிகளில் நான் ஈடுபட்டு செயல்பட்டு வந்தேன். விசேடமாக 'கடிவாளம்' புலம்பெயர்ந்த இளம் சமூகத் தினருக்காகத் தயாரிக்கப்பட்டது. நடிகர்கள் புதிய இளைஞர்கள் இவர்களைக் கொண்டு தத்ரூபமாக நடிக்கப் பண்ணி தன் கருத்துக்களை மக்கள் முன் வெளிக்காட்டிய திறமை, யுக்தி யாவும் இவரையே சாரும். பாராட்டுக்களும் பெற்றுள்ளார்.

புலம் பெயர்ந்த நிலையிலும் பல சிறந்த கலைஞர்கள், எழுத்து, நடிப்பு, நாடகம், புகைப் படம், ஒப்பனை, இசை போன்ற துறைகளில் இலைமறை காயாக இருப்பது கண்கூடு.

**முன்னேற்றம் அடைந்துள்ள வேற்றுமொழி நாடகத் துறையின் தரத்திற்கு தமிழ் மொழி நாடகத்தை முன்னேற்றும் நோக்குடன் செயல்பட்டு வரும் (GIFT) பிரான்ஸ் தமிழ் கலை கலாச்சார மன்றம் இன்னும் அதிக சக்தியுடன் செயல்பட்டு அப்புனித இலட்சியத்தை அடைய வேண்டுமென்று பொதுச் செயலாளராகப் பணிபுரியும் அரியநாயகம் அவர்களால் இப்பணியை நிறைவாகச் செய்ய முடியும் என வாழ்த்தி இவ்விழா சிறப்புற நல்வாழ்த்து களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.**



அமரர் நடிப்பிசைக் காவலர் டி. கிறகறி தங்கராஜாவின் 'சங்கமம் கலைக்கூடத்'தில் புதிய நாடகப் பிரதி வெளியீட்டு விழா பீலிக்ஸ் மனோதாஸ், பி.பி. ரஞ்சன்

... M.Ariyanayagam et moi-même, nous étions des étudiants du Professeur, le père H.S. David au Collège St. Patrick de Jaffna. Il est ensuite entré avec enthousiasme dans le domaine des Arts et Lettres au Srilanka. … A Paris, nous avons collaboré dans la production de quelques pièces. Il a encouragé les jeunes à entrer dans la scène théâtrale – ce qui a été applaudi par tout le monde...

**- M.M.Jeyaratnam**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடகங்களில் மகளிர் நிலை!


- இராஜன் முருகவேல்
பிரேமன் தமிழ்க்கலை மன்ற செயலர்

**நா**டகர் அரியநாயகம் அவர்களின் நாடகங்கள் பல ஒரே மேடையில் அரங்கேற்றப் படவிருக்கும் நாடகவிழா பற்றிய செய்தியறிந்து மகிழ்வடைகிறோம்.

1996இல் தமிழர் புனர்வாழ்வுக் கழகம் யேர்மனியில் நடாத்திய ஐரோப்பிய நாடக விழா விற்கு வந்து நடுவர் குழுவில் ஒருவராகப் பணி யாற்றி எமது **'நீர்க்கோலம்'** நாடகத்திற்கு முதற் பரிசளித்து, எமது கலைஞர்கள் அனைவரையும் தனித்தனியாக மனம் திறந்து பாராட்டிய வேளையில்,

**''நாடகங்களில் நடிப்பதற்குப் பெண்கள் பெரும் சிரமங்களுக்கிடையேதான் முன்வரு கிறார்கள். அப்படி நடிக்க முன்வருபவர்களையும் எமது சமூகத்தில் சில கோணல் பார்வைக்காரர் களும், குரூரமனம் படைத்தோரும், கொச்சைப் படுத்தி தடுத்து விடுகிறார்கள். இத்தகையோரின் வக்கிரமான கருத்துகளுக்கு மதிப்பளிக்காமல் தொடர்ந்தும் நாடகங்களில் பங்கேற்று உங்கள் திறமையை வெளிப்படுத்துங்கள், நாடகங்களி னூடாக எம்மாலான பணியை எங்கள் சமூகத் திற்கு ஆற்றுவோம் என்ற மனஉறுதியை வளர்த்துக் கொள்ளுங்கள்''** என அவர், எங்கள் மன்ற நடிகைகளுக்குத் தந்த உற்சாகத்தை எண்ணிப் பார்க்கிறோம்.

ஒரு நாடகப் படைப்பாளன் எத்தனையோ சிரமங்களுக்கு முகம்கொடுத்து அரங்கேற்றும் நாடகங்களுக்கு எமது சமூகம் உரிய மதிப்பளிக் கிறதா? என்ற வினா நாடகக் கலைஞர்கள் முன் எழுந்து நிற்கின்ற நிலையில், பாரிசில் நாடக விழாவொன்றினை நடாத்த முனைந்திருக்கும் எம். அரியநாயகம் அவர்களின் மாபெரும் முயற்சி, சிறப்புடன் வெற்றி பெற **யேர்மனியி லிருந்து பிறேமன் தமிழ்க்கலை மன்றமும் வாழ்த்துவதில் மகிழ்கிறது.**



எம். அரியநாயகத்தின் 'வீரத்தாய்' தென்மோடி கூத்திசை நாடகம் நடிப்பிசைக்காவலர் அமரர் கிறகறி தங்கராஜா மற்றும் திருமதி ஜெயம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு யாத்ரா

## எஸ்.பொ.

**த**மிழ் இலக்கியத்தில் புலம் பெயர்ந்தோர் இலக்கியம் என்கிற ஒரு தனி வகை பற்றி அண்மைக் காலமாகப் பேசப்படுகின்றது. பிறந்த மண்ணினைச் சில வலோற்கார நிர்ப்பந்தங்களினாலே துறந்து, முற்றிலும் மாறுபட்ட கலாசாரம் பயிலப்படும் அந்நிய நாடு ஒன்றிலே வாழத் தலைப்பட்டு, தந்தையும் தாயும் குலவி மகிழ்ந்த மண்ணின் தவனத்தைச் சுவாசமாக்கி, தமது இனத்துவத் தனி அடையாளம் தமிழ்த் தாய்மொழியிலிருந்து பெறப்படுகின்றது என்கிற பிரக்ஞையை வாலாயப்படுத்தி, இலக்கிய சல்லாபங்களிலே ஈடுபடுவோருடைய படைப்புகள் புலம்பெயர்ந்தோர் இலக்கியமாக வகைப் படுத்தப்படுகின்றது. ஏடேறும் படைப்பு முயற்சிகள் என இலக்கியத்தின் பொருள் சுருக்க மடையாது. நிகழ்த்துதல் கலைகளுக்குப் பற்றாதாரமாகக் கொண்ட எழுத்து முயற்சிகளையும் இலக்கியம் தன்னுள் சேர்க்கும், புலம்பெயர்ந்தோர் இலக்கியம் புதிய தேடல்களையும் சுருதிகளையும் தகைய வைக்கும் என்பது அனுபவம்.

இலக்கிய ஊழியத்திலே ஈடுபட்டுள்ள புலம்பெயர்ந்தோருள் அநேகர், பிறந்த மண்ணிலேயே அத்தகைய ஈடுபாடு ஊன்றியவர்கள், ஓரளவு பயிற்சி பெற்றவர்கள். ஏனையோர் புகலிடத்தில் தமிழ் நேசிப்பின் வடிகாலாகவும், தனி அடையாளம் ஒன்றுடன் இணையும் முனைப்பாகவும் இலக்கியத்தினை அணுகுபவர்கள். முன்னையவர்களுடைய ஆக்கங்கள் ஒரு வித்தையின் தொடர்ச்சி, பின்னையவர்களுடைய ஆக்கங்கள் ஒரு வித்தையின் தீட்சை. தீட்சை பெறுபவர்களுடைய இலக்கிய ஆளுமை பற்றிய முறையான விமர்சனத்துக்கு ஒரு காலக் கூறு தேவைப்படும். ஆரம்ப முயற்சிகள் என்கிற சலுகையை உண்ட பாராட்டுகள் பிழையான தர மதிப்பீடுகளை நிறுவுதற்கு ஏதுவாகும். அதே சமயம், புதிய நாற்று ஒரு வகை போஷக மனப் பான்மையுடன் பாதுகாக்கப்படுதல் வேண்டும்.



காட்டமான விமர்சனத்தின் காங்கை அவற்றை வாட்டிச் சாகடித்து விடுதல் சாத்தியம். புலம் பெயர்ந்தோரின் இலக்கியத்தினை மதிப்பீடு செய்யும்பொழுது, இந்த எச்சரிக்கைகளை நினைவில் வைத்திருத்தல் சேமம்.

'புலம்பெயர்ந்தோர்' என்பதுகூட வசதிக்காகத் தோற்றுவிக்கப்பட்ட சொற்பிரயோகமே. அஃது ஒருத்துவம் சார்ந்த ஒரு குழுவினைக் குறிக்க மாட்டாது. அவர்களுடைய இழப்புகள் – ஏக்கங்கள் – கனவுகள் ஒத்த சாயல் உடையன எனக் கற்பிக்கப்படுகின்றன. வாஸ்தவம் அதுவல்ல. சார்பு – பக்குவம் ஆகியன மட்டுமல்ல, தேவைகளும் வேறுபாடுகளின்றன. இவை ஒருத்துவதைக் கெடுக்கும். பழைய கல்லூரி மாணவர் சங்கங்கள் – அவற்றிற்கிடையே நடாத்தப்படும் விளையாட்டுப் போட்டிகள், மெல்லிசைக் குழுக்கள், தமிழ் வீடியோக்கள் பார்க்கும் மோகம், பரதநாட்டியப் பயிற்சி வகுப்புகள் ஆகியன கேலிக்குரியன அல்ல. அவற்றை அபக்குவர் நடத்தும் தேடல்கள் என விளங்கிக் கொள்ளலாம். இவற்றிற்கு அப்பாலான முயற்சிகளும் எத்தனங்களும் சரியான திசையிலே எடுக்கப்படும் கலாசார நிகழ்ச்சிகளாக மாறலாம். அவற்றை வரவேற்றலும் ஊக்கப் படுத்தலும் இலக்கியப் பணியின்பாற்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த உண்மைகளை உள்வாங்கிக் கொண்டு இந்நூலுக்குள் சஞ்சாரஞ் செய்தல் சுவைப்புக்கான பாட்டையாகும். இதன் ஆசிரியர் எம். அரியநாயகம் இலங்கையிலே நியாயமான நாடக அநுபவம் பெற்றவர். எனவே, பிரான்ஸ் நாட்டின் வாசத்தின்போது, அவருடைய கவனம் நாடகத் துறையிலே குவிந்தது இயல்பான தாகும். அவர் பிரான்ஸ் நாட்டிலே மேடை யேற்றிய மூன்று நாடகங்கள் இந்நூலிலே தொகுக்கப்பட்டுள்ளன. 'விளம்பரம்', 'தீர்ப்பு' ஆகிய இரண்டும் சிறியன. முற்று முழுக்க ஓரங்க நாடக வகையைச் சேர்ந்தன. 'நாளைய அறுவடைகள்' பல காட்சிகளிலே விரிகின்றது. ஆனால், ஒரே அரங்கத்திலே நிகழ்வதாகச் செய்துள்ளார். இந்த மூன்று நாடகங்களிலும் ஊடுபாவான சரடு நாளைதான். நாளைய ஒரு நாளிலே நடைபெறக்கூடிய ஆண்பார்க்கும் படலந்தான் விளம்பரம். புலம்பெயர்ந்த நாடு களிலே இத்தகைய திருமண ஏற்பாட்டுப் படலம் சாத்தியம் என்பதே கற்பனை. நகைச்சுவை இழையோடியுள்ளது. வார்த்தைகளிலே இரட்டை அர்த்தம் சொருகப்பட்டு நிகழும் தமிழ்ச் சினிமாத் தாக்கத்திற்கு இதிலே பரிமாறப்படும் நகைச் சுவை உட்படாதிருத்தல் இதன் குணமாகும்.

'ஈழம் கிடைக்குமா? கிடைக்காதா?' என்கிற பட்டிமன்றம், புலம் பெயர்ந்தோர் வாழும் சூழலிலே, 'அதுவும் பாவித்து' நடைபெறும் விருந்துகளிலே முதன்மை பெறும் பாடு பொருளாம். சமர்க்களத் துயரங்களிலும் கோரங் களிலும் விலகித் தூரமாக, பாதுகாப்பான சூழலிலே வாழும் ஒரு வகை மேட்டிமை மண்டிய பொழுது போக்கு அது! மனித இழப்புகள் – துயரங்களை மட்டுமல்ல, போராளிகளின் ஓர்மத்தையும் நம்பிக்கைகளையும் நிராகரிக்கும் செயலுமாகம். இத்தகைய இருளார்ந்த மன இயல்பைத் துறந்து, ஈழம் கிடைத்துவிட்டது என்கிற கற்பனா உலகிலே சஞ்சாரஞ் செய்தல், பிரகாசம் உள்வாங்கும் கற்பனையாகும். ஆடுவோமே பள்ளுப் பாடு வோமே என்று பாரதியார் விடுதலை கிடைக் காத இந்தியாவிலே பாடினால் தீர்க்கதரிசனம என்று பாராட்டிச் சொல்மாலை சூட்ட முந்து கிறோம். எனவே, ஈழம் கிடைத்துவிட்டதான பாவனையிலே படைக்கப்படும் இலக்கியத் தினை அதீத கற்பனை என நிராகரித்து விட முடியாது. இத்தகைய கற்பனைகள் மனப் புண்களை ஆற்றும்; விடுதலை பற்றிய நம்பிக்கைகளைப் பெருக்கும். அது மட்டுமன்றி, ஏக்கங்களைத் தாங்கி வெதும்பி வாழும் நிலைக்குள் தள்ளப்பட்டவர்களக்கு இத்தகைய கற்பிதங்கள் ஔடதமுமாகும். ஈழம் வென்றுவிட்ட புதியதோர் இனிய சூழலிலே, புலம் பெயர்ந்தோர் எதிர்நோக்கும் பிரச்சினை களும் முரண்பாடுகளும் எவையென இனங் கண்டு, அவற்றிற்கு முகங்கொடுக்கும்பொழுது எழும் அவலங்கள் தொற்றிய நகைச்சுவையே, தீர்ப்பு, நாளைய அறுவடைகள் ஆகிய இரு நாடகங்களிலும் முதன்மைப்படுத்தப்பட்டு உள்ளன. புதியதோர் உலகத்திற்கு – இன்றைய யதார்த்தங்களுக்கு அப்பாலான – அத்தகைய உலகத்திலேதான் சகல விமோசனங்களும் பாலிக்கப்படும் என்று நம்பப்படும். நாளைய உலகத்திற்கு இவ்விரு நாடகங்களும் அழைத்துச் செல்கின்றன. காணி சம்பந்தப்பட்ட வியாச்சி யங்களுக்கு நீதிமன்றங்களக்கு ஓடோடிச் செல்லுதல் யாழ்ப்பாணக் கலாசாரத்தின் ஒரு பகுதியாகும். இத்தகைய மரபினை ஆறுமுக நாவலரும் ஏத்தினார். ஈழத்திலே, ஆரம்ப கட்டங்களிலேனும், இத்தகைய வழக்குச் சித்தாயங்களிலே நமது காலமும் கவசனமும் விரயமாக்கப்படும் என்பது உண்மை. அவ்வாறே, பல தலைமுறைகளாகப் பேணப்பட்ட சில பழக்க வழக்கங்களை, புதிய தேவைகளை அநுசரித்துத் துறத்தல் மிகவும் ஆக்கினையாக இருக்கும். அத்தகைய வேடிக்கையான சம்பவங் கள் ஊடாக ஒரு யாத்ராவை இந்த நாடகங்கள் சாத்தியமாக்கின்றன. இது யதார்த்தம் சார்ந்ததும் அல்ல, Fantacyயும் அல்ல. இரண்டுக்கும் இடைப்பட்ட வித்தியாசமான உலகம்.

இந்த வித்தியாசமான உலகத்திலே புதிய நம்பிக்கைகளையும் அழகுகளையும் காட்டு வதிலே நண்பர் எம். அரியநாயகம் அடையும் வெற்றியே அவருடைய இலக்கிய வெற்றி யாகவும் பாராட்டப்படும். அவற்றை இனங் கண்டு சுட்டும் பாலபோதினி முயற்சியில் நான் ஈடுபடவும் இல்லை. பிரான்சு தமிழர் கலை கலாச்சார மன்றத்தின் தமிழ் முனைப்பு களையும், நாடகக் கலையிலே அரியநாயகம் ஊன்றியுள்ள அக்கறைகளையும் பாராட்டி வாழ்த்துகிறேன்.

சுவை என்பது தனிப்பட்ட பக்குவ நிலைகளைப் பொறுத்தது.


---

எம். அரியநாயகத்தின் 'அறுவடை நாடக நூலுக்கு' எஸ்.பொ. அவர்கள் வழங்கிய அணிந்துரை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடக அறுவடைகள் எம். அரியநாயகத்தின் நாடக விழா 2004



## பங்குகொள்ளும் கலைஞர்கள்

### நாளைய அறுவடைகள்

விவசாயி பண்பட்ட நிலத்தில், பயிர் செய்து, நாளை அறுவடைக்கான நாளுக்காகக் காத்திருப்பது இயல்புதானே? அதுபோல, புலம்பெயர்ந்த நாளைய அறுவடையாகிய பலனை, எதிர்பார்த்துக் காத்திருக்கும் 'கரு'வே இந்நாடகம்! புலம்பெயர்ந்தவர்கள் சொந்த மண்ணுக்குக் கொண்டு சேர்க்க வேண்டிய வற்றை இன்றே சொல்கிறது.
ஓரங்க நாடகம்!



முகத்தார் ஜேசுரட்ணம்



இரா. குணபாலன்



T. தயாநிதி



லீனா ஜெயக்குமார்

மற்றும் யாழ் தேவன்,
லிவிங்ஸ்ரன் ராஜி,
M. பொபித்தா,
உமா சந்திரமோகன்.



சுதா



லொயலா



சேகர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடிவாளம்

இன்றைய இளைஞர்களுக்கு உலகம் முழுதும் யாரும் கடிவாளம் போட இயலாது. தங்களுக்குத் தாங்களே அதனைப் போட்டுக் கொண்டால் மட்டுமே வெற்றி பெற இயலும். அதுவே சாத்தியம் என்பதை வலியுறுத்தும் கதை - இந்நாடகம் ஒரு நவீன வடிவம்.





முத்து ஜெயசிங்கம்



யாழ். தேவன்



டாவிஸ்



மனோஜ்



டெஸ்மிலா



கொண்ஸ்ரன்ரைன் எஸ்தாக்கி



பாஸ்கரன்

மற்றும் லிவிங்ஸ்ரன்ராஜி, M. பொபித்தா, M. பெலிக்சியா, ஜஸ்ரின், J. ஜஸ்மின், P. கொட்வின், J. டெனிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சிவிகை (தனி நடிப்பு)

நாற்காலி மோகமே – பதவிப் போட்டிகளே – மக்கள் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்க முடியாமல், புலம்பெயரக் காரணங்கள் ஆகின்றன என்பதை மையமிட்டுக் காட்டுகின்ற கதை!





## தம்பட்டம்

கலைகளை, முறையாக இல்லாமல், முழு ஈடுபாடு இன்றிப் பயிற்றுவிக்கப்பட்டு – அரங்கேற்றம் என்ற பெயரில், தங்களிடம் இருக்கும் பொருள்களை வாரி இறைத்து 'தம்பட்டம்' அடித்துக் கொள்ளும் விதமாக அமைகிறது, இங்குள்ள வாழ்க்கை முறை என்பதே இந்நாடகம்.







## சங்கடம்

அர்த்தமில்லாத, கைவிடப்படவேண்டிய சடங்கு சம்பிரதாயங்களை அறிவுப்பூர்வமான நாட்டில் நடத்துவது முறையா? அதனை அகற்றும் முயற்சியே நாடகம். நகைச்சுவை, நையாண்டி முறையில் நாடகத்தை நகர்த்திச் செல்கிறார்கள். இது ஒரு மரபு சார்ந்த நாடக வடிவம்!





## அம்மா

புலம் பெயர்ந்தவர்களிடையே வாழ்க்கை முறை மாறி வருகிறது.

குழந்தைகளிடையே ஓர் ஏக்கம்! பிள்ளைகளைக் கவனிக்கும் தன்மை குறைந்து வருகிறது.

குழந்தை ஒரு பொம்மையோடு பேசிக் கதைப்பதாக கதை நகர்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



லீனா ஜெயக்குமார்

## மாறாத மாற்றங்கள் (தனி நடிப்பு)

ஆண்பிள்ளைகள் இல்லங்களுக்கு கால தாமதமாக வருவதில் எவ்விதப் பிரச்சினைகளும் இல்லை. ஆனால், அதுவே பெண்பிள்ளைகள் அவ்வாறு வருவது எவ்வளவு பிரச்சினைகளைக் குடும்பங்களில் ஏற்படுத்துகின்றன. ஒரு தாய் மகளாக இருந்த சூழலுக்கும்; அவளே பின் தாயாகி, ஒரு மகளை ஈன்று, அவளை வளர்த்து, அவளைக் காணுகிறபோதும் ஏற்படுகிற மாறுபாடான மனநிலை.

இரா. குணபாலன்
லீனா ஜெயக்குமார்

## விளம்பரம்

உலக நாடுகள் பலவற்றில், பரபரப்பாகப் பேசப்பட்ட நாடகம் இது. நவீன நையாண்டி நகைச்சுவை பாணியில் இந்நாடகம் நகர்கிறது.

**'சுவிசில்** நிரந்தர வசிப்பிட உரிமை பெற்றவர். 'இலங்கை' காசுக்கு 1 இலட்சம் சம்பளம் பெறும் 30 வயது நிரம்பிய குலம், கோத்திரம் எல்லாம் உடைய சீதனத்தோடு கூடிய பெண் இவருக்குத் தேவை' என்று ஈழத்து நாளிதழில் விளம்பரம் வருகிறது.

புலம்பெயர்ந்த நாட்டில் வாழ்வோர் ஈழ மக்களின் மனங்களில் ஏற்படுத்துகிற மாயையை, இந்தப் புதிய முயற்சி நாடகம் உடைத்தெறிகிறது.

## பின் அரங்கக்கலைஞர்கள்



சாம்சன்



யோகராஜா



நாதன்



மனோதாஸ்



அருள்



ரஞ்சன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என் பாத்திரங்களுக்கு உயிரூட்டி, எனக்குப் பெருமை சேர்த்து, என்றும் என் நெஞ்சில் நிலைப்பவர்களில்... இவர்கள் சிலர்...

அன்புடன்,

### எம். அரியநாயகம்

### A. இரகுநாதன்

தமிழீழக் கலையுலகப் பிதாமகர்களில் ஒருவர். தமிழீழக் கலைஞர்களின் வரலாற்றுப் பக்கங்களில், பலநூறு இவருக்கு உரியவை. நாடக, திரைப்பட நடிகர், இயக்குநர், தயாரிப்பாளர், விமர்சகர், எழுத்தாளர், என ஈழத்தில் இவர் சாதித்த சாதனைகளை எல்லாம் முந்திக்கொண்டு புலம்பெயர் வாழ்விலும் வலம் வருபவர்.

அவை அறிந்து அழகுறப் பேசும் பேச்சாளர், காணும் குறைகளை அன்போடு சுட்டிக்காட்டி, நிறைகளை உயரப் புகழ்ந்து வளர்த்துவிடும் கலைத்தாயின் பாலகர். எனது நாடகமான 'சிவிகை' யில் இவர் ஏற்றிய நாடெல்லாம் பவனி வருவது. நாற்பது வருட கால எனது கலைப்பணிக்குக் கிடைத்த மிக உயர்ந்த பரிசு.

### கத்தார் எஸ். ஜேசுரட்ணம்

இவர் ஒரு கலைமுகம். ஒரு கலைஞனுக் குரிய பண்பாங்கை கற்றுத் தரும் கலைக்கூடம் இவர். ஆயிரம் அரங்குகளைக் கண்டும், இன்றும் ஒத்திகை என்றால் குறித்த நேரத்தில் வந்து நிற்பது, இவரிடம் நான் கண்டு வியந்தது. ஒரு கலைஞனுக்கு வயதோ வரம்போ இல்லை, அவன் என்றும் கற்றுக் கொள்ளும் குழந்தை, முகத்தாரின் முகம் என்றும் அதைத்தான் சொல்லும். தமிழ் மனங்களில், அழுத்தமாய் பதிந்த முகம் முகத்தார். 'முருகன்' வயதோகர் பாத்திரம் 'அரியம்' கொடுத்த பிச்சை என்கிறார். அவர் தந்ததுதான் அந்த பாத்திரம் அவர் எனது நாடகத்தில் நடித்ததால் அள்ள அள்ளக் குறையாத பெருமை எனக்கு.

### இரா. குணபாலன்

பாலன் என்றால் குழந்தை. குணபாலன், குழந்தையின் குணம் கொண்டவர். அவரிடம் கலைத்துவம் நிரம்பியுள்ளது. அவருடனான முதல் சந்திப்பிலேயே புரிந்துகொண்டேன். அதனால்தான், எனது அனைத்து நாடகங்களிலும் முதல் பாத்திரமாய் அவர் இருப்பார். "அண்ணே!" என்று அவர் என்னை அழைக்கும்போதெல்லாம் பாசம் முகத்தில் பளிச் சிடும். அன்றுநான் கொண்ட கணிப்பும், விருப்பும் வீண் போகவில்லை. இன்று உலகளாவிய கலைஞனாக தமிழ் ஈழவர் மனங்களில் குடியேறி வருகிறார். எனக்குள்ளே ஓர் உற்சாகம் அது இவரால் வருவது!

### T. தயாநிதி

தனி ஒருவராக நின்றே, அரங்கைக் குலுங்க வைக்கும் அதிரடி வைத்தியத்தின் மேதை அப்புக் குட்டி இராஜகோபால். அவரின் தம்பி சின்னக் குட்டி தயாநிதி. நடிப்பு, நாடக ஆக்கம், இயக்கம் என அரங்குகளில் மட்டுமன்றி, வானொலி, தொலைக்காட்சி வரை... எப்படி இவரால் முடிகிறது!? அதைவிட இவரைக் காணும்போதெல்லாம், ஒரு சாதாரணனாக முகம் மலரக் காட்சி தருவதுதான் எனக்கு வியப்பு! முதல் முதலாக இவருடைய 'நிகழ்வுகள்' நாடகத்தைப் பார்த்து வியந்து போனேன். இன்றைய காலச் சூழலுக்கும் தேவைக்கு மேற்ப, இவர் கையாளும் அதிரடி அரங்க முறையும், ஒருநாள் நாடகவியலாளர்களை வியப்பிலாழ்த்தும்.

### பெஞ்சமின் இம்மானுவேல்

எங்களை வளர்த்துவிட்ட ஒப்பனைக் கலைஞர் பெஞ்சமினின் புதல்வன். எனது சமகாலக் கலைஞர். எனது நாடகங்களில் இணைந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எம். அரியநாயகத்தின்
நாடகவிழா சிறக்க
எமது வாழ்த்துகள்!



SUGI
COIFFURE

சிகையலங்காரமும்
ஓர் அற்புதமான கலையே
முகத்தை அழகு படுத்தும்
முத்தான கலையிது...
இக்கலையில் தேர்ச்சி
பெற்றவர்கள் சுஜி என்பதும்
அனைவரும் ஒப்புக்கொண்ட
உண்மை!

நீங்களும் உங்களை
அழகுபடுத்திக் கொள்ள...

SUGI
COIFFURE

4, Rue ordeneur,
75018 Paris
Tel : 01 04 09 75 80
M°: Marx Dormoy - Bus 60, 65
சிகை அலங்கரிப்பு : 7• மட்டுமே

நடித்தவர். 1970இல் எனக்கு பாரிய வெற்றியைத் தேடித்தந்த 'யூலியஸ் சீசர்' நாடகத்தில் சீசராகவே மாறியவர். இன்றுவரை தனது சிறந்த நடிப்பால் மக்களை ஈர்த்து வருபவர். திருமறைக் கலா மன்றத்தின் வளர்ச்சியில் இவருக்கு மிகுந்த பங்குண்டு. எனது மனதில் பதிந்தது இவர் 'நீரோ' மன்னனாக நடித்த அந்த அற்புத நடிப்புத்தான்.

### முத்து ஜெயசிங்கம்

நடிப்பின்போது வசனங்கள் முத்து முத்தாய் வரும். பாத்திரத்தின் தன்மைகளை உள்வாங்கி நடிக்கும் உன்னதக் கலைஞர். கலையை ஆத்மார்த்தமாக நேசிப்பவர். அதனால், ஆரவாரமில்லாமல் அருமையான ஒத்துழைப்புகளை வழங்குபவர். எனது நாடக பாத்திரங்களில் என் மனதில் எப்போதும் இவருக்குத் தனியிடமுண்டு. 'கடிவாளம்' இவரது நடிப்பால் பெயர் சொல்ல வைத்தது. சேக்ஸ்பியரின் "காஷியஸ்" உயிர் பெற்று வந்ததுபோல் தனது உழைப்பால் எல்லோரையும் வியப்பிலாழ்த்தியவர்.

### T. சாம்சன்

எல்லோரையும் நேசிப்பது சுலபம்; எல்லோராலும் நேசிக்கப்படுவது கடினம். சாம்சன் எல்லோருடைய அன்பையும் சுமப்பவர். கலையின் பல பரிமாணங்களையும், தன்னகத்தே கொண்டவர். இவரது சிறந்த ஓவியர்; நடிகர் துணைவியார், பிள்ளைகள் உட்பட இவரது குடும்பமே ஒரு பல்கலைக் களஞ்சியம்!

ஒரு கருவை உருவாக்கி அதை நாடக வடிவமாக்க நான் அசைபோடும் போதெல்லாம் சாம்சனையும் சேர்த்துக் கொள்வேன். அவர்தான் எனது நாடகங்களின் வெற்றிக்குக் கலை வடிவம் தருபவர். 'யூலியஸ்சீசர்' நாடகத்தில் இவர் 'புரூட்டஸ்' ஆக நடித்த நடிப்பைக் கண்டிருந்தால், அதை உருவாக்கிய சேக்ஸ்பியரே கட்டித்தழுவியிருப்பார்.

### N. அருணகிரிநாதன்

அமரர் டி. கிளாறி தங்கராஜாவின் நாடகமொன்றில் "டாக்டர்" பாத்திரமேற்று, பாரிஸ் கலைஞர்களால் இன்று 'Doctor' என்று அன்போடு அழைக்கப்படுபவர். வானொலி, தொலைக்காட்சியினூடாக, இன்று ஐரோப்பிய தமிழ் மக்கள் மத்தியில் பேசப்படுபவர். எங்கள் மண்சார்ந்த சமூக அக்கறையாளர். எனது வானொலி நாடகங்கள் இவர் நடிப்பால் பாராட்டுப் பெற்றன. எல்லாவற்றிற்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலாக, எனது பாரிய முயற்சிகளான 'உயிர்ப்பு', 'யூலியஸ் சீசர்' ஆகிய நாடகங்களுக்கு என் வலக்கரமாக நின்று செயல்பட்டவர். அவற்றின் வெற்றிக்கு இவரின் பங்களிப்பே காரணம்.

### க. பகீதரன்

1982இல், ஒரு நிகழ்வில் வந்திருந்தோரை உற்சாகப்படுத்துவதற்காக 'வீரசிவாஜி'யாக நடித்துக் காட்டியபோது, முகபாவத்தோடு கச்சிதமான சொல்லாளுமையோடு, எல்லோரையும் பிரமிக்க வைத்தார். அன்றிலிருந்து, 'சொந்தமண்' நாடகத்தில் போராளியாகவும், பின், நாதரராகவும் நடித்து நல்ல பாராட்டைப் பெற்றார். யூலியர் சீசர் மார்க் அன்ரனியாக நடித்து, இன்றுவரை எனது எல்லா முயற்சிகளுக்கும் பக்கத் துணையாக நின்று ஒத்துழைப்பு நல்கும் என்றும் எனது நன்றிக்கும், பிரியத்துக்குமுரியவர்.

### வண்ணை தெய்வம்

இவர் குரலில் எப்போதும் எனக்கு ஒரு மயக்கமுண்டு. 'சொந்த மண்' நாடகத்தில் சிங்கள ராணுவத்தினரால் அடிபட்டுத் துன்புறும் காட்சியில் இவர் நடித்த நடிப்பு மிகவும் இயல்பாக, அனைவரது கண்களையும் கசிய வைத்தது. பாத்திரங்களை உள்வாங்கி உணர்வுகளை வெளிப்படுத்தக் கூடிய ஆற்றல் உள்ளவர் எனது வானொலி நாடகப் பாத்திரங்களுக்கு இவர்தான் உயிரூட்டியவர். கலை, இலக்கிய நண்பர்கள் மீது மிகுந்த பற்றுக் கொண்டவர். அவர்களுக்காக இவர் ஆற்றி வரும் பணி மகத்தானது; போற்றுதற்குரியது. இன்று பல துறையாளர்களின் கவனத்தையும் ஈர்த்து வருபவர்.

### A.T. செல்ராஜா

பாரீஸ் நகரில் தமிழர் கல்வி நிலையத்தினரால் நடத்தப்பட்ட நாடகப் போட்டியில் நடுவர்களுள் ஒருவராக நான் பணியாற்றியபோது, மிக இயல்பாக பாத்திரத்தோடு ஒட்டி, அரங்கை ஆளுமை செய்த இவர் நடிப்பைக் கண்டு வியந்தேன். நாடகக் கலைக்காகத் தன்னை அர்ப்பணிக்கின்ற மனப்பக்குவம் உள்ளவர். கடினமான வேலைப் பளுக்களுக்கு மத்தியிலும் 'யேசு'வின் பாத்திரம் ஏற்றமைக்காக தன்னைக் கட்டுப்படுத்தி வருத்திக்கொண்டவர். சீராக இவரின் நடிப்பைக் கண்ட மகிழ்ச்சியில் அன்று முதல் இவர் "சீசர் செல்வா" என்று எல்லோராலும் அழைக்கப் படுவது எனக்குத் தேடித்தந்த பெருமையாகும்.

தமிழ் நாடக விழா
சிறக்க
வாழ்த்துகிறோம்...!

GANESHA
CORNER


Restaurant Inden et Srilankais

Salon de the

சுவையுடன் தரம் மிகுந்த
தாயக உணவுகளைத் தரும்...

கணேசா கோர்னர்

(பாரீஸ் மாநகரில் பலநூறு
மனங்களில் பதியம்பெற்றவர்கள்)



16, Rue Perdonnet
61, Rue Louis Blanc,

75010 Paris

Tel : 0146073532

M° : La Chapelle
Gare du nord

Ventee a Emporter



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமதி வளர்மதி துரைஸ்

பிரியாலயம் துரைஸ் - இந்தப் பெயர் புலம்பெயர் வாழ் தமிழ் நெஞ்சங்களில் மிக ஆழமாகப் பதிவு பெற்ற பெயர்.

அழகு தமிழின் அரங்க, வானொலி, தொலைக் காட்சிகளின் அறிவிப்பாளர், நடிகர், புலம்பெயர் வீடியோ திரைப்படங்களின் முன்னோடிகளில் ஒருவர், கவிஞர், ஓவியர் - நிகழ்ச்சித் தயாரிப்பாளர்... கலைகளை, கலைஞர்களை நேசிக்கின்றவர் - துரைஸ். இத்தகையவரின் துணைவியார் கலையை நேசிப்பது ஒன்றும் ஆச்சரியமில்லை. இன்று பெண்கள் நாடகக் கலையை நேசிக்கத் தொடங்கியிருக் கிறார்கள். நடிக்க முன்வருகிறார்கள். என்றால் அவர்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்பவர் வளர்மதி. தான் ஏற்ற பாத்திரங்களுக்கு தன் சிறந்த நடிப்பால் முத்திரை பதிப்பவர். எனது வானொலி நாடகங்கள் இவர் நடிப்பால் மக்கள் மனங்களை வருடியிருக்கின்றன. 'தெளிவு' பெற்றிருக்கின்றன.

## யாழ்தேவன்

யாழ் மண்ணில் நாடகக் கலைக்குள் என்னால் அழைத்து வரப்பட்டவர்களுள் இவரும் ஒருவர். 'அண்ணே!' என்று நான் கூப்பிட்ட போதெல்லாம் ஓடிவந்து, நான் கொடுக்கும் எந்தப் பாத்திரத்தையும் ஏற்று நடிக்கக் கூடிய தகைமை உள்ளவர். எனது எல்லா நாடகங்களிலும் இவர் இருப்பது, இவர் நடிப்பாற்றலில் எனக்குள்ள நம்பிக்கையே.

## திருமதி லீனா ஜெயக்குமார்

ஓர் ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள் என்று எல்லோராலும் சாதாரண மாகச் சொல்லப்படுவதொன்று. ஆனால், லீனாவின் சமூக அக்கறைக்கு ஊக்குவிப்பாக அவர் கணவர் ஜெயக்குமார் இருப்பதுதான் உண்மை.

பாரிஸ் மண்ணில் தாய்மொழிக் கல்வியின், அவசியம் உணர்ந்து, அவற்றைத் தோற்றுவிப்பதில் முதல் வரிசையில் நின்று செயல்பட்டவர். சமூக அக்கறை கொண்டோர் எடுக்கும் முன்னெடுப்புக் களில், ஜெயக்குமாரின் பங்களிப்பு நிச்சயம் இருக்கும். பக்குவப்பட்ட உள்ளம் கொண்டவர். அவருடைய செயல்பாடுகள் எல்லாம், அதன் வெளிப்பாடாகவே இருக்கும்.

அந்த வகையில், லீனா அவர்களும் மனித மேம்பாட்டிற்கான நாடகக்கலையில் காட்டும் ஆர்வம், கற்றுக்கொள்ளுகின்ற மனப்பான்மை, தான் ஏற்றுக் கொள்ளும் பாத்திரத்தினூடாக சொல்லக் கூடிய செய்திகள், தனது சிறந்த நடிப்பால் மக்களிடம் போய்ச் சேர வேண்டும் என்பதில் அவர் காட்டும் அக்கறை போன்றவற்றை எனது நாடகங்களினூடாக அவரில் கண்டு உள்ளூர நான் புளகாங்கிதம் அடைவதுண்டு. காரணம், எந்த உணர்வோடு ஒரு நாடகத்தை நான் எழுதுகிறேனோ! அந்த உணர்வோடு அதை அவர் வெளிப்படுத்த முயற்சிப்பதே!

## திருமதி உமா சந்திரசேகரன்

சந்திரமோகன் - உமா. கணவன் மனைவி என்ற உறவுக்கு மேலாக, ஆத்மார்த்தமாக இணைந்த நல்ல நண்பர்கள், அதனால்தான் இருவரும் இணைந்தே இன்று நாடக அரங்குகளை ஆளுகிறார்கள்.

சமூக அக்கறையும், கலை உணர்வும் நாடகக் கலைமீது மிகுந்த பற்றும் கொண்ட இத்தகைய பெருந்தகையோர்களினால்தான் தமிழ்நாடகம் உயிர் வாழ்கிறது என்பதே உண்மை. "அம்மா" இந்த நாடகத்திற்கு தங்கள் பத்து வயது நிரம்பிய தங்கள் பிள்ளைச் செல்வத்தையும் பரிசாகத் தந்துள்ளார்கள் இனியும் வார்த்தைகள் எதற்கு!

## கே. சண்முகநாதன்

எனது 'தீர்ப்பு' நாடகம். சண்முகநாதன் ஒரு விவசாயக் கூலி, "ஆமிக்காரப் பாவியள் என்ர பிள்ளையை அநியாயமாச் சுட்டுப் போட்டுட்டாங்கள். எந்த மண்ணைக் கொத்திக் கிளறி பயிர் வைச்சனோ! அந்த மண்ணுக்குள்தானய்யா என்ர புள்ளையையும் புதைச்சுப் போட்டு அனாதையா நிக்கிறேன் சண்முகநாதன் இந்த வார்த்தையைச் சொல்லி நடித்தபோது கலங்கியது பார்த்தவர் கண்கள் மட்டுமல்ல என்னுடையதும்தான். "வன்னியை நோக்கி" எனக்கு இவர் நடித்த மற்றொரு நாடகம்.

"மனிதனைத் தொட்டுத் தூக்கி நடக்க வைக்கவல்லது நாடகம் நடிப்பு" என்பார்கள். அது உண்மைதானே!

## எம்.எஸ். நாதன்

இசையை நேசித்து வாழும் மென்மையான இதயங்கொண்டவர் ஓர் இசைக் கலைஞனுக்குரிய ஆழமான தேடலை இவரிடம் நான் பார்த்ததுண்டு, அதனால்தான் தனது சொந்த முயற்சியில் முனைந்து இன்று பல்வேறு இசைக் கருவிகளையும் இசைக்கும் திறமை பெற்றுத் திகழ்கிறார். கலைஞனுக்குரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாஞ்சையோடும், அக்கறையோடும் எனது அரங்கை தனது இசையால் மெருகேற்றுபவர்.

### பீலிக்ஸ் மனோதாஸ்

நாடகக் கலைக்குத் தனது சொத்தாக அமரர், நடிப்பிசைக்காவலர் டி.கிங்ஸ்லி தங்கராஜா அவர்களால் உருவாக்கப்பட்டவர். அரங்கின் பின்னால் நின்று அதனை இயக்கக் கூடிய ஆளுமை கொண்டவர்.

சமூக அக்கறையும், மனித மேம்பாட்டு நோக்கும் கொண்ட நிலைத்தளமே கொண்டவர்களால் தான் இந்த நாடகக் கலையை நேசிக்க முடியும் என்பதற்கு இவர் ஒரு முன்னுதாரணம். இவரே எனது நாடகங்களின் பின்னரங்க இயக்குநர்.

எனது நாடகப் பணிக்கு இவரது பங்களிப்பு மிகப்பெரிய வலு.

**விலிங்ஸ்டன் ராஜி, எம். பொபிதா,**

### ஜெ. ஜாஸ்மின்

வளர்ந்து வரும் கலைக் கொழுந்துகள், நாளைய நாடகக் கலைக்கு நம்பிக்கையூட்டும் புதிய வரவுகள். இவர்கள், முதல் அரங்கிலேயே தங்கள் நடிப்பின் ஆளுமையைப் பதித்தவர்கள். இவர்கள் மனம் கொண்டு முயன்றால் நாடகம் மேன்மேலும் வளர்ச்சிபெறும்.

### N.T. குணம்

யாழ் மண்ணில் அரியாலையூர், கலையைத் தன் சுவாசமாய்க் கொண்டது. அந்த மண்ணின் கலைஞன். ஆயிரம், ஆயிரம் அரங்குகளைக் கண்டவர். இருப்பினும் அடக்கத்தோடு நாடகக் கலையை நேசிக்கும் நல்ல கலை உள்ளம் கொண்டவர். வரலாற்று நாடகங்களில் வார்த்தைகளால் மயக்க வைப்பவர். நாடகக் கலையின் தனிச்சிறப்புக்கு இவர் போன்றவர்களே உதாரணதாரர்கள்.

### எழில் துஷ்யந்தி

வானொலியிலே தன் குரல் இனிமையால் பெருமளவு புகழ்பெற்று நிற்பவர். உள்ளத்தின் உணர்வுகளை வார்த்தையால் வடித்தெடுக்கும் வித்தையைப் பெற்றவர். அறிவிப்பாளர், நிகழ்ச்சித் தயாரிப்பாளர் என பக்கங்களை விரிவுபடுத்தி அறிவுப்பூர்வமான தகவல்களை மக்களுடன் பகிர்ந்துகொள்ளும் நல்ல சிந்தனையாளர் எனது வானொலி நாடகங்களுக்கு வலிமையும், வளமும் சேர்ப்பவர்.


முத்தமிழின் நாடக விழா காண வருவோரை வாழ்த்துகிறோம்!

**BABY BALOON DEC**

**பேபி பலூன் டெக்கரேஷன்**

கேக், மணவறை, வீடியோ, போட்டோ, அகன்ற திரை மற்றும் உணவு வகை, மண்டப ஒழுங்குகள்...

★ உங்கள் விழாக்களுக்கான ஒழுங்குகள் அனைத்திற்கும்... ★

**PACKIANATHAN**

**44, Rue de Crevecoeur,**
**93300 Aubervilliers**

Portable : 0613062029

Tel : 0148334059




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேர்காணல்



# மனிதனை மனிதனாக்கும் மகத்துவம் மிக்கதே நாடகம்!

**'சிறகுகள்' மாத சஞ்சிகைக்காக எம். அரியநாயகம் அவர்களுடன் அண்மையில் நிகழ்த்தப்பட்ட நேர்காணலிலிருந்து சில துளிகள்...**

◇ ***'நாடகம்' என்பது பற்றிய உங்கள் கருத்து?***

◆ மகிழ்ச்சிப்படுத்தலினூடாக மனித மனங்களைப் பக்குவப்படுத்தி - அவனை முழுமையாக்கும் அபூர்வ சக்தியை நாடகம் கொண்டிருக்கிறது. 1970-இல் நான்கு ஐந்து மாதங்களாக, **கலையரசு சொர்ணலிங்கம் ஐயா** அவர்களைச் சந்தித்துப்பேசிய காலப் பொழுதில், அவரிடம் கற்றுக் கொண்டேன்.

◇ ***எப்போதிலிருந்து நாடகத் துறையில் இருந்து வருகிறீர்கள்?***

◆ யாழ் புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் (St. Patrick's College) மாணவர்களைக் கொண்டு இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு தடவை இரண்டு நாட்களுக்கு யேசுவின் திருப்பாடுகளின் காட்சியை நடித்துக் காட்டுவார்கள். அதனைப் பார்க்க பல பாகங்களிலிருந்தும் பல்லாயிரக் கணக்கான மக்கள் வருவார்கள். 1963இல் நான் அதில் 'பரிசேயன்' முக்கிய பாத்திர மேற்று நடித்ததுடன், பாடசாலை முடிந்ததும் பிரத்தியேகமாகப் பாடம் சொல்லிக் கொடுப்பதுபோல் அதில் 'யேசுவாக நடித்தவருக்கு நடிப்புச் சொல்லிக் கொடுத்தேன். எனவே, **எனது முதல் ஈடுபாடே நடித்தலும் - சொல்லிக் கொடுத்தலுமாக அமைந்துவிட்டது.**

◇ ***பாடசாலை அனுபவம்தான் உங்கள் நாடக பிரவேசத்திற்கான காரணமா?***

◆ அப்படிச் சொல்லமுடியாது. நான் வளர்ந்த சூழல் கூத்திசைக் கலைஞர்களைக் கொண்டது. 50-60களில் எங்கள் பகுதிகளில் ஆலயத் திருவிழாக்கள், விளையாட்டுப் போட்டிகள், நடைபெறும் காலங்களில் சிறப்பு நிகழ்ச்சியாக தென்மோடி கூத்திசை நாடகங்கள் போடுவார்கள். அதிகமாக ஞாயிறு தினங்களில் எங்காவது கூத்திசை கேட்கும். அங்கே முன் வரிசையில் என்னைக் காணலாம். சின்ன வயதிலேயே கூத்திசையில் மிகவும் ஆர்வம் எனக்கு ஏற்பட்டு விட்டது. அந்தக் காலத்திலேயே **கூத்திசைச் சக்கரவர்த்தி என்று எல்லோராலும் புகழப்பட்ட "செம்பர் அப்பா"** என்பவர் பாடக் கேட்பதற்காக அவர் பின்னால் ஓடியிருக்கிறேன். பத்து வயதிலேயே கலையின் மீதும் - கலைஞர்கள் மீதும் எனக்குப் பாசம் ஏற்பட்டு விட்டது.

◇ ***ஆரம்ப காலத்திலிருந்து நீங்களாகவே நாடகங்களை எழுதி இயக்கி வந்தீர்களா?***

◆ எனது கல்லூரிக் காலங்களிலும், அதன் பின்னரும் கிறிஸ்தவ சமூக சேவை அமைப்புகளில் எனக்கு மிகுந்த ஈடுபாடு இருந்தது. அருட்திருப்பணியாளர்கள் ஜெயசீலன், பிலிப் பொன்னையா, தற்போது யாழ் ஆயராக இருக்கும் அதி.வண. தொமஸ் சவுந்திர நாயகம் ஆகியோர் தங்கள் பணிகளில் என்னையும் இணைத்துக் கொள்வார்கள். அவ்வேளைகளில், சின்னச் சின்ன நாடகங்கள் மூலம் நல்ல கருத்துக்களையும் சொல்லலாம் என்று எண்ணத் தோன்றியபோதுதான், நண்பர் எஸ். கிறிஸ்ரியுடன் உரும்பியராயில் பணியாற்றிக் கொண்டிருந்த மரிய சேவியர் அடிகளாரை நாடினோம். அவர் எனக்கு இரண்டு நாடங்களை எழுதித் தந்தார். **"ஒரு துளி", "இன்றிரவு"**! நானே அவற்றை இயக்கி நடித்துமிருந்தேன். அவை எனக்கு மக்கள் மத்தியிலும், அருட்பணியாளர்கள் மத்தியிலும் மிகுந்த பாராட்டைப் பெற்றுத் தந்தன. **"உரும்பராய் வரை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ, மரிய சேவியர் அடிகளாரிடம் போய் காத்திருந்து நாடகம் எழுதுவிப்பானேன்'' என்று என்னிடம் எழுந்த கேள்வியே என்னை நாடகம் எழுதத் தூண்டியது. இதில் ஒன்றை இங்கே குறிப்பிட விரும்புகின்றேன். இன்று பரவலாகப் பலநாடுகளிலும் பேசப்படு கின்ற மரிய சேவியர் அடிகளாரின் "திருமறைக் கலாமன்றத்தின்'' ஆரம்ப நாடங்களாக 'ஒரு துளி', 'இன்றிரவு', ஆகிய நாடகங்களும் பதிவு பெற்றுள்ளன.

◇ பின்னர் நீங்கள் நாடகத்தைக் கற்றுக் கொண்டு எழுதித் தயாரித்தீர்களா?

◆ கல்லூரியிலோ, பின்னரோ எனக்கு நாடகம் பற்றிக் கற்றுக் கொள்ளும் வாய்ப்பு கிடைக்க வில்லை. அத்தகைய வசதிகளும் அப்போதில்லை. பத்திரிகைகளில் கூட எப்போதாவதுதான் நாடகம் பற்றிய விமர்சனங்கள் வரும். அதுவும் கொழும்பிலே அரங்கேற்றப்படுகிற நாடகங்கள் பற்றியதுதான். ஆயினும் நாடங்களைத் தேடிச் சென்று பார்ப்பேன். அந்த நாடகங்களில் காணப்படும். குறை களை ஊன்றிக் கவனிப்பேன். எனது நாடகங் களில் அவற்றைத் தவிர்த்து அவற்றுள் நல்லவற்றைத் தேர்ந்து - மேலும் அதற்கு வளம் கொடுப்பேன். வளர்ச்சி என்பது ஒன்றிலிருந்து ஒன்றாக உயர்வதுதானே!

◇ நாடகத்திற்கான ஒரு கருவை எப்படித் தேர்ந்தெடுத்து வெளிப்படுத்துவீர்கள்?

◆ ஒரு கதாசிரியன் தன்னைப் பாதிக்கின்ற ஒரு விடயத்தை கருவாகக் கொண்டு தனது அனுபவங்களினூடாக அதற்கு வடிவம் கொடுத்து அதற்கான தீர்வும் கொடுக்க முயன்று, சிறுகதை, நாவல் என்று வடிவம் கொடுக்கிறானோ, அப்படித்தான் நானும் அதற்கு நாடக வடிவம் கொடுக்கிறேன்.

◇ உதாரணத்திற்கு?

◆ 1986-இல் வீரகேசரியில் பார்த்த ஒரு விளம்பரம் - அந்த விளம்பரம் எனக்குப் புதிதல்ல. ஈழத்தில் தினமும் படிப்பதுதான். ஆனால், புலம் பெயர்ந்து வாழ்ந்த நிலையில் அது என்னை மிகவும் பாதித்தது. "ஐரோப்பிய நாட்டில் வதிவிடம்பெற்று இலங்கைக் காசுக்கு ஒரு இலட்சம் ரூபாய் ஊதியம் பெறும் 30 வயது நிரம்பிய.......... குல வாலிபனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த அழகான மணப்பெண் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும்...'' ரசனையோடு மிக ஆழமாக இத்தகைய விளம்பரங்களின் பாதிப் பைச் சொல்லவேண்டுமென்று, நான்கு வருடங்களாக அசைபோட்டு, அசைபோட்டு இரண்டே இரண்டு பாத்திரங்களைக் கொண்டு 1990இல்தான் நாடகமாக்கினேன்.

◇ தற்போது தனி நடிப்பில் கூடிய அக்கறை காட்டி வருகிறீர்களே?

◆ இன்று பல அரங்க வடிவங்களைப் பற்றிப் பேசப்படுகின்றன. புதிய அரங்க வடிவாக் கங்களும் உருவாகின்றன. விஞ்ஞான வளர்ச்சியில் சமூக வாழ்வியல் மாற்றங்கள் பெறுவது போல, கலை முகங்களும் மாற்றம் பெறுவது தவிர்க்க முடியாததும் வரவேற்கப் பட வேண்டியதொன்றாகும். பாரிஸ் மாநகரில் எனது இயக்கத்திலான 'யூலியஸ் சீசர்' நாடகத்தை ஈழமுரசு வளர்ச்சிக்காக (Forum Theater) Forum அரங்கு என விமர் சித்தது. அதுபோல எமது 'விளம்பரம்' நாடகத்தை ஒரு புதிய முயற்சி என்று பாராட்டியது.

இப்படிப் பரீட்சார்த்த முயற்சிகளை நாடகக் கலையில் முயன்று பார்ப்பதற்கு என்போன்ற அக்கறையாளர்களுக்கு விருப்பம் தான். ஆயினும், நாளுக்கு நாள் ஐரோப்பிய நாடுகளில் நாடகங்களை அரங் கேற்றுவதற்கான வசதிகள் - மிகக் கடின மாகிவிட்டன. குறிப்பாக மண்டப ஒழுங்கு கள், பயிற்சிக்கான வசதிகள் இல்லாமை, பொருளாதாரச் சிக்கல்கள், வேலைப் பளுக்கள்... இப்படி அடுக்கிக்கொண்டே போகலாம். எனவேதான், எமக்குக் கிடைக்கக் கூடிய வசதிகளுக்கேற்ப, எமது சக்திக்குட் பட்ட நாடக முயற்சிகளை அரங்கில் கொண்டு வரவேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டுள்ளது. இருப்பினும் தனிநடிப்பும் ஓர் உன்னதமான கலை வடிவம்தான். அதிலும் புதிய முயற்சிகளைத் தேடவேண்டும். "சலோம்'' ஒற்றையரங்க தனி நடிப்பு நாடகத்தை ஐரிஸ் 'கவிஞர்' ஆஸ்கார் வொயில்ட் 1891இல் எழுதியுள்ளார் 1893இல் அது நூல் வடிவமும் பெற்றுள்ளது.

◇ ஒரு நடிகனுக்கு நாடகப் பயிற்சி எந்தள வுக்குப் பயன்படும்?

◆ இன்று நாடகப் பயிற்சிக் கூடங்களில் நடிகர் களுக்கு மூச்சுப் பயிற்சி, அசைவுப் பயிற்சி, எனப் பல பயிற்சிகளைச் சொல்லித் தருகின்றன. இதனைத்தான் கலையரசு சொர்ணலிங்கம் ஐயாவிடமும் 'சாணா' அவர்களிடமும் அவர்களின் அனுபவங் களினூடாக வாயிலாக ஓரளவு கற்றுக் கொள்ள முடிந்தது. "சாணக்கியர்'' ஆர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரம்பலம் என்னிடம் சொல்லியது எனக்கு இன்னமும் நினைவிலிருக்கிறது.

**''குறைந்தது, ஆறு மாத ஒத்திகையின் பின்னர்தான் நான் அரங்கிற்கு வருவேன் அப்போதுதான் அனைத்துப் பயிற்சிகளோடும் என்னையும் என் பாத்திரத்தையும் புரிந்து கொண்டு வரமுடியும்''**

இன்றைய அவசர வாழ்க்கைச் சூழலில் இவை சாத்தியமாகுமா?

◇ ***பாரீஸ் நகரில் நாடகத் துறையில் அக்கறை காட்டுபவர்கள் பற்றி?***

◆ **1986இல் ஐரோப்பிய தமிழ் எழுத்தாளர் ஒன்றியத்தினூடாக 'மண்ணைத் தேடும் மணங்கள்'** நூல் வெளியீட்டின்போது வானொலி நாடகமா ஒலிபரப்பிய எனது 'சொந்தமண்' நாடகத்தை மேடை நாடகமாக்கி அரங் கேற்றினேன்.

அந்தச் சமகாலத்தில் **கவிஞர் அருந்ததி, பரா ஆகியோர் நாடகத்தில் அக்கறை காட்டி னார்கள். பராவின் 'அவ்வையார்' அருந்ததி யின் 'பரிணாமம்' இன்னமும் பேசப்படு கின்றன. நாடகத் துறையை விட்டு அவர்கள் விலகிப் போனது சற்று வருத்தத்திற்குரியது.** தற்போது அக்கறை காட்டுபவர்களை, விரல் விட்டு எண்ணிவிடலாம் அவர்களில் **ஓசைமனோ T. தயாநிதி. சுபாஸ் ஆகியோர் குறிப்பிடக் கூடியவர்கள்.**

''ஒரு படைப்பாளி குழந்தையைப் பிரசவிக்கிறான். விமர்சகனே! அந்தக் குழந்தைக்குப் பெயர் சூட்டுகிறான்'' இது **இந்திரா பார்த்தசாரதி** சொன்னது.

நாங்கள் பிரசவிக்கும் நாடகச் செல்வங் களுக்கு பெயர் சூட்டி, தாலாட்டி மகிழ **நம்மிடையே நல்ல நாடக விமர்சகர்கள் இல்லாததும் பெரும் தடையே!**

◇ ***நாடகத்தை விட குறும்படங்கள் பேசப்படும் என்கிறார்களே!***

◆ ஒரு படைப்பாளி – நடிகன் – பார்வையாளன் என்ற மூன்று பேரும் நாடகத்தின் மூலம் தான் ஒன்றுகூடி இணைந்து, உணர்வை கருத் தைப் பகிர்ந்து கொள்ளமுடியும். **குறும்படம் அப்படியல்ல ஒரு நிகழ்வை இயல்பாக திரையில் பதிய வைப்பது, பின்பு பார்வை யாளர்களை அழைத்து தங்கள் கருத்தை அவர்களுக்குச் சொல்வது.**

நாடகம் தனிப்பட்ட ஒரு கலை வடிவம். ஆனாலும் ஏனைய கலைகளைத் தன்னகத்தே உள்ளடக்கியது.

◇ ***இறுதியாக ஒரு கேள்வி! இளைய தலை முறையினர்க்கு நாடகம் சார்ந்த விழிப்பினை ஏற்படுத்தும் செயல்திட்டங்கள் ஏதாவது உண்டா?***

◆ ***1968ல் யாழ் நவரச நாடகாலயம் அமைத்து, கலையரசு சொர்ணலிங்கம் ஐயா அவர்களின் தலைமையில் முதல் சமூக நாடகத்தை அரங் கேற்றிய அன்றே நாடகம் என்னுள்ளே துளிர்விடத் தொடங்கி, இன்றுவரை நான் நாடகத் துறையில் இருக்கிறேன். என்பதை விட நாடகத்தையும், நாடகக் கலைஞர்களை யும் நேசிக்கிறேன் என்பதே உண்மை.*** சொந்த மண். சொந்த நாடு என்றால் எதையும் திட்ட மிட்டுச் செயல்பட சாத்தியம் உண்டு. இங்கே எண்ணங்கள் இருந்தாலும் செயல்படுத்துவது மிகக் கடினம். ''ஐரோப்பிய நாடுகளில் அந்தந்த மொழிகளில் நாடகக் கலையைக் கற்றுக் கொள்ள நிறைய வாய்ப்புகள் உண்டு. எமது இளைஞர்கள் இளைஞிகள் இந்த அரிய வாய்ப்பினைப் பயன்படுத்தி **எமது மரபு சார்ந்த கலைகளையும் கற்றுக் கொண்டால், 'தமிழ்நாடகம்' ஒரு புதிய முனைப்போடு உலகளவில் உயர்ந்து நிற்கும்.**

**நேர்காணல் : திருவேற்காடு. எஸ். கார்த்திகேயன்**



**1963இல் யாழ், புனித சம்பத் திரிசியார் கல்லூரியில் எம். அரியநாயகத்தின் முதல் நாடகப் பிரவேசம்...**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமூக மாற்றப் பணிக்குக் கட்டியங்கூறும் நாடகக் கலை

முனைவர் க. ஜோதி ராணி
விரிவுரையாளர்
எத்திராஜ் மகளிர் கல்லூரி, சென்னை

**நா**டகக் கலையில் இணைந்த நாள்முதல் இதுவரை அறிந்திராத படைப்புகளை ஒரே மேடையில் நிகழ்த்தும் நாடக விழா இது என்பதில், ஆச்சரியம்.

ஒரு நாடகக் கள மேடையில் ஒப்புமை செய்து கொள்ளும், தன்னையறியும் சோதனை முயற்சியாக அமையும் பாங்கு விழாவில் முக்கிய இடம் வகிப்பதான செய்தி உண்மையிலேயே பாராட்டுதற்குரியது.

கலைப்பயணத்தின் தொடர்ச்சியில் செய்தவை இவை இவை, செய்யாதவை இவை இவை எனும் பதிவுக்கான விழாவாக அமைவதும் சிறப்பு.

ஈழ மண்ணிலிருந்து புலம்பெயர்ந்த தமிழர்களுக்கான, விழிப்புணர்வூட்டும் நிகழ்வாக இந்த நாடக விழா அமைவது குறிப்பிடத் தக்கதாகும்.

அரிய நாள் அக்டோபர் 31 (2004) திருமிகு அரியநாயகம் அவர்களின் முயற்சியில் நாடக விழா. இந்த வேடந்தாங்கல் முயற்சிக்கு 'செம்மொழி' கண்ட தமிழ் நெஞ்சோடு வாழ்த்துக்களை வழங்குவதில் பெருமிதம் கொள்கிறேன்.

ஆக்கமான தேவைகளுக்கென உந்துசக்தியாக நாடக விழா புத்துயிர் பெறட்டும்...

ஈழ மண்ணின் மரபும், பண்பாடும், கூத்துக் கலை ஆக்கமும் வளர்ச்சியும் நாடக மலரில் காண முடிகின்றன. நாடக மலரில் இடம் பெற்றுள்ள அத்துணை எழுத்துக்களும் செறிவாக அமைந்துள்ளன. அழுத்தங்களைச் சுமக்கும் உள்ளங்களை வாழ்த்தவது என்பது அவ்வளவு எளிதானதல்ல.

தாம் பெற்ற நல்லறிவை, பட்டறிவை, படைப்பறிவை மீண்டும் சமூகத்திற்குத்தருவது எனும் விரிந்த பார்வையை இம் மலருள் நாம் அறிந்து கொள்ள முடியும். அத்தோடு அரியவை செய்யும் ஆக்கப் பணிக்கு, சமூகப் பணிக்கு நாடகக் கலை ஒரு கருவியாகவும் அமையும் என்பதை இவ்விழா உணரச் செய்யும்.

தீப்பந்தத்தில் நடந்த கூத்துக்கலை, பின்பு பாய்சுருட்டி நாடகமாக... பின்னர், புராண இதிகாச இசைமரபு நாடகங்களாக ஆகின. பின்னாளில் அறிவியல் ஊடகங்கள்வர, அறிவியல் ஊடகங்கள் வர்த்தகம் தர, வர்த்தகம் பொருட் செல்வம் தர, பொருட்செல்வம் சில பெரு முதலாளிகளைத் தர, முதலாளிகள் தங்களின் மகிழ்ச்சிக்கானதாக நாடக மேடைக் கலையாக, இன்று மேல்தட்டு வர்க்கம் சார்ந்த கலைவடிவமாய் உருப்பெற்றுள்ளது. அரங்கக் கலை எனும் பெயரைத் தனக்கானதாக ஆக்கிக் கொண்டு பொது மக்களிடமிருந்து பிரிக்கப்பட்டுவிட்ட போதிலும்; அந்தக் கலை காலனியாதிக்க எதிர்ப்புப் போராட்டக் காலத்தில் மக்களிடம் காலனீய எதிர்ப்புணர்வைத் தட்டி எழுப்பும் நோக்கில் மரபு சார்ந்த கலைகள் செயல்பட்டன என்பதை சங்கரதாஸ்சுவாமி, பாஸ்கரதாஸ், பம்மல் சம்பந்தம் போன்றோரின் நாடக வரலாறுகள் சொல்லும்.

1819ஆம் ஆண்டுகளில் காலனி எதிர்ப்புப் போராட்டக் கருவிகளாக நாடகக் கலை இருந்ததும், வெள்ளையரை விரட்ட வேண்டும் என்ற மக்களின் உணர்வுகளைத் தூண்டியதும் ஏகாதிபத்திய எதிர்ப்பு வேட்டையை ஏற்படுத்தியதும் நாடகமே.

ஒருங்கு கூடி விவாதித்து கருத்துப் பரிமாற்றம் செய்து கொள்ள நிலையான தளம் இல்லாத காரணத்தால்தான் தமிழ் நாடகக் கலை பீடுநடைபோட முடியவில்லை என்று பேராசிரியர்கள் எண்ணிக் கொண்டிருக்கின்றனர். இச் செய்தி சென்ற நூற்றாண்டுகளில் பரவலாகப் பேசப்பட்டதே. அவர்களிடம் நாம் சொல்ல வேண்டியதென்னவெனில், மக்களோடு இணைக்க முடியாத கலை எப்போதும் வளர்ச்சி காணாது என்ற செய்தியைச் சொல்லிட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பில் பிறந்த ஆட்டக்கலை; அனுபவ உணர்வுக் கலை நாடகம். அது வெறும் ரசிப்புக் குரியதாகவே ஆகிப் போய்விடக் கூடாது.

மக்களின் அரசியல் – பொருளாதார – பண்பாட்டு பிரச்சினைகளையும் அப்பிரச்சினை களைத் தீர்ப்பதற்கான, அவர்களிடமுள்ள ஆற்றல்களை உணரச் செய்வதற்குமே கலைகள் பயன்படுத்தப்படவேண்டும்.

ஒடுக்குமுறையை மனிதனிடமிருந்து விரட்டும் பணியை நாடகம் செய்தால் அதுவே சமூக மாற்றத்துக்கான போர்த்தளம். அதனைப் புலம்பெயர்ந்த தமிழ் எழுத்தாளர் செய்கிறார்கள். அவர்களுக்கு தமிழக மக்களின் சார்பாக பாராட்டுகள்.

புலம்பெயர்ந்தோர்; உறவுகள் துண்டிக்கப் பட்டு, உறைவிடம் அழிக்கப்பட்டு, உற்ற உயிரிழந்த உணர்வுகளோடு, கொடூரப் பிடிக் காலத்தில் குடிபெயர்ந்து, தட்டுத்தடுமாறி, எழுந்து, வழியின்றி, அயலவர் எனப் பெயர்கொண்டு, உலகு முழுக்கப் பரந்துபட்டு வாழும் ஈழத் தமிழர்க்கு அரங்கக் கலை புது ரத்தம் பாய்ச்சும்.

40 ஆண்டுகளாகத் தொடர்ந்து கலை வளர் நாடகாசிரியராகப் பயணிக்கும் அரியநாயகம் அவர்களைப் பாராட்டுதல் தகும். இந்தப் பாராட்டுதலின் போதே; இன்துணை, இணைக் கலைஞர்கள் அனைவருமே போற்றுதற்கு உரியவர்கள்.

அடிமைத் தளையினின்று நீக்கம்பெற வேண்டுமெனின் அரங்குகள், நிச்சயமாக மக்களின் அரங்காக செயல்படவேண்டும். அதற்கு, அரியநாயகம் அவர்களின் ஆக்கம் தூண்டு கோலாகட்டும்!



# வாழ்த்துகிறேன்!



1986 புலம்பெயர் இலக்கிய முன்னோடி வெளியீடான 'மண்ணைத் தேடும் மனங்கள்' வெளியீட்டு வைபவத்தில் எழுத்தாளர் எஸ். அகஸ்தியர், திருமதி கௌரி மலன்கோ, ஐ.த.எ.ஒ. தலைவர் எம். அரியநாயகம்

***புலம்பெயர் வாழ்வில் அரியநாயகம் அவர்கள் தமிழர்கள் மத்தியில் இருக்கின்ற –வானொலி, தொலைக் காட்சி, பத்திரிகைகள் – அனைத்து ஊடகங்களையும் சரியான முறையில் பயன்படுத்தி அவைகள் மூலமாக மக்கள் மத்தியில் தன்னுடைய கருத்துக்களுக்கு வலுவூட்டினார். எந்தெந்த நேரத்தில் மக்கள் மத்தியில் என்னென்ன விடயங்களைக் கொடுத்து அவர்களை விழிப்புணர்ச்சி செய்யவேண்டுமோ, அந்த வகையில் அதற்குரிய கருப் பொருளை எடுத்து நாடகமாக்கி மக்கள் மத்தியில் பாத்திரங்களாக விரவவிட்டவர். இதற்கு உதாரணங் கள் இவர் எழுதி இயக்கி மேடையேற்றப்பட்ட நாடகங்களாகும். இந்த வகையில் இவர் மேன்மேலும் இந்தப் பணியில் இந்த வழியிலேயே மிக வெற்றிகரமாக நடைபோட்டு தமிழினத்தின் விடிவுக்கான படி அமைக்கக் கூடிய பல நாடகங்களைப் படைக்கவேண்டும் என அவாவுறுகிறேன். ஆண்டவன் இவருக்கு நீண்ட ஆயுளையும் ஆரோக்கியத்தையும் அளிக்க மன்றாடுகிறேன்.***

**– எஸ்.கே. காசிலிங்கம்,** பத்திரிகையாளர், பிரான்ஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்கள் தமிழிசையும் கூத்திசையும் இன்னிசையாய்
எங்கள் தமிழ்நாடக அரங்குகளை ஆர்ப்பரித்தன
உங்களுக்கு எங்களின் அஞ்சலி





*தமிழ் நாடகக் கலைஞர்கள் சார்பில் கிறீன் கிங்ஸ் கழகம்*

**GIFT**


## ARA IMMOBILIER
## ACHAT - VENTE - LOCATION

வீடு வாடகைக்குப்
பெற்றுக் கொள்ளவோ
வாங்கவோ... விற்கவோ
எம்மை நாடுங்கள்

## JAFFNA
## AUTO ECOLE

மக்கள் பாராட்டைப் பெற்று வரும்...
தமிழ் சாரதிகள்
பயிற்சி நிலையம்



(Wimal A. Chelliah Directeuvr Executif) Portable : 06604202

**195, RueduFaubourg St. Denis,**
**75010 Paris**

**Tel : 01 42 09 41 88 - 01 42 05 88 99**

**Fax : 01 42 09 59 29**

**M° : La Chapelle / Gare du Nord**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றிகள்...

இம்மலர் சிறப்புற அரங்கியல் அறிவும் ஆசியும் தந்த முனைவர்கள்,
ஓவியர்கள், பத்திரிகை நிறுவனங்கள், கலைக்கழகங்கள்,
நாடகக் கலைஞர்கள், கவிஞர்கள், கட்டுரையாளர்கள்,
விளம்பரங்கள் தந்து உதவிய பாரிஸ் வர்த்தக ஸ்தாபனங்கள்,
அனுமதிச்சீட்டு விற்பனையில் உதவிய நண்பர்கள்,
மிகுந்த ஈடுபாட்டோடு உதவிய ஜோதி எண்டர்பிரைசஸ் அச்சகத்தார்,
கங்காராணி கணினியகம், மொழிபெயர்ப்பில் உதவிய
முனைவர் பன்னீர்செல்வம், மலர்க்குழுவுக்கு நிறைந்த
ஒத்துழைப்பு நல்கிய சென்னை நண்பர்கள் குடந்தை கீதப்பிரியன்,
சீனிகுலசேகரன், கார்த்திகேயன் ஆகியோருக்கு நன்றி.

வாழ்க்கைப் பயணத்தோடு கலைப்பயணத்திலும் இணைந்து வாழும்
துணைவியர் திருமதி. பாக்கியராணி அரியநாயகத்திற்கும்,
விழாவை காணவந்த பெருமக்களுக்கும், நேரிலும்
தொலைபேசியிலும் எம்மை வாழ்த்தி உற்சாகப்படுத்திய
அனைத்து அன்பு நெஞ்சங்களுக்கும்
மீண்டும் எமது நன்றிகள்...

அன்புடன்

கிறீன் கிங்ஸ் கழகம்
பிரான்ஸ் தமிழர் கலை கலாச்சாரம்
ஒன்றியம் சார்பில் மலர்க்குழு

**GREEN KINGS CLUB**
02,Place de la Libération
93450 Ile Saint Denis
Tél.: 01 42 43 58 94

**GIFT**
30, Rue de Tourville
93600 Aulnay Sous bois
France
0148792169



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புலம் பெயர் மண்ணில் தமிழ் நாடகக் கலைக்கு
புத்துயிர் ஊட்ட எம். அரியநாயகத்தின்
நாடக விழா சிறப்புற அமைய
மனதார வாழ்த்துகிறோம்...

கே. விஜயபாலா


# EUROP VIDEO

பலரின் பாராட்டையும் பெற்றுவிட்டோம்...
குறும்படங்களிலும் முத்திரை பதித்துள்ளோம்...
படப்பிடிப்பில் பயிற்சிபெற்ற
எங்கள் EUROP VIDEO உங்கள்
பாராட்டுக்காகவும் காத்திருக்கிறது!
நம்பிக்கையோடு நாடுங்கள்...



Tel : 01 30 94 65 59
Fax : 06 20 21 26 60

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org
Distribution Limitee aux Membrs (Only for members not for sale)